பண்பாடு

PANPĀDU

பருவ இதழ்

மலர் 2 | இதழ் 2 | 1992 செப்டம்பர்

- இலக்கணத் தூய்மையும் மொழித்தூய்மையும்
- இலக்கிய உருவாக்கம்
- நாட்டுப்புற இலக்கியம் - கலைகள் காட்டும் தமிழர் பண்பாடு
- சமூகவியல் நோக்கில் சமயமும் சடங்குகளும்
- சடங்குகள் - ஆய்வுத் திட்டம்
- நூல் அறிமுகம்
- திரைப்பட விமர்சனம்

வெளியீடு:

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்

பதிப்பு : 1992 செப்டம்பர்

விலை ரூபா. 20/-

இலக்கிய விமர்சகர்
வல்லிக் கண்ணன்
அவர்களுக்கு
அன்புடன்
க. [illegible]
01/09/93

பண்பாடு பருவ இதழில் பிரசுரமாகியுள்ள கட்டுரைகளில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் யாவும் கட்டுரையாசிரியர்களின் சொந்தக் கருத்தேயாகும். அவை இவ்விதழை வெளியிடும் திணைக்களத்தின் கருத்துக்களை பிரதிபலிப்பனவாகா.

— ஆசிரியர்

வெளியீடு:

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்,
''காப்புறுதி இல்லம்''
9வது மாடி,
21, வெக்ஷோல் வீதி,
கொழும்பு-02.

பண்பாடு

(பருவ இதழ்)

மலர் 2 | இதழ் 2 | 1992 | செப்டம்பர்

KALAIVANI BOOK CENTRE
No 130, D. S. Senanayake Vidya,
KANDY.

ஆசிரியர்
க. சண்முகலிங்கம்

—★—

உதவி ஆசிரியர்
எஸ். தெய்வநாயகம்

—★—

வெளியீடு:
இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்

பொருளடக்கம்

இலக்கணத் தூய்மையும் மொழித்தூய்மையும் 01

கலாநிதி எம். ஏ. நுஃமான்
பேராதனைப் பல்கலைக் கழகம், பேராதனை.

இலக்கிய உருவாக்கம் 14

பேராசிரியர் செ. வை. சண்முகம்
மொழியியல்துறை அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர், இந்தியா.

நாட்டுப்புற இலக்கியம் - கலைகள் காட்டும் தமிழர் பண்பாடு 30

பேராசிரியர் சி. கருணாகரன்
கலாநிதி வ. ஜெயா
மொழியியல்துறை, பாரதியார் பல்கலைக் கழகம்
கோயம்புத்தூர், இந்தியா.

சமூகவியல் நோக்கில் சமயமும் சடங்குகளும் 45

ஆங்கிலம்: கோ. இ. கோல்ட்தோப்
தமிழில்: க. சண்முகலிங்கம்

சடங்குகள் - ஆய்வுத் திட்டம் 52

ஆசிரியர்

நூல் அறிமுகம் 55

"நூலகவியலில் பட்டியலாக்கம்"

நூலாசிரியர்: விமலாம்பிகை பாலசுந்தரம்
இ. கிருஷ்ணகுமார் B.A, A.S.L, L.A.
யாழ் பொதுசன நூலகம்.

திரைப்பட விமர்சனம் 56

சத்தியஜித்ரேயின் "சட்கதி"

ப. பாலசரஸ்வதி

இலக்கணத்தூய்மையும் மொழித்தூய்மையும்

எம். ஏ. நுஃமான்

மொழியும், மொழிவளர்ச்சியும்:

மனிதன் பயன்படுத்தும் தொடர் பாடல் ஊடகங்களுள் மொழியே மிகவும் பிரதானமானது. நமது அபிப்பிராயங் கள், உணர்வுகள், தகவல்கள் முதலிய வற்றை பிறர் இலகுவில் அறிந்து கொள்ள அல்லது புரிந்துகொள்ளச் செய்தலே தொடர் பாடல் (Communication) என அகராதிகள் தொடர்பாடலுக்கு வரைவிலக்கணம் கூறும். சைகைகள், அடையாளங்கள், நிறங்கள், பேச்சு, எழுத்து போன்ற பலவகையான ஊட கங்கள் தொடர்பாடலுக்குப் பயன்படுத் தப்படுகின்றன. ஒரு பரந்த பொருளில் இவையெல்லாவற்றையும் நாம் மொழி என்று கூறலாம். எனினும் இங்கு பேச்சை யும் எழுத்தையுமே மொழி என்ற சொல் லால் நாம் சுட்டுகின்றோம்.

மொழிவளர்ச்சி என்பது ஒரு குறிப் பிட்ட காலகட்டத்தில் ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் தொடர்பாடல் தேவைகளுக்கு ஏற்ப அச்சமூகத்தின் மொழி பெறும் இணக் கப் பாட்டைக் குறிக்கும். காலம்தோறும் ஏற்படும் சமூக வளர்ச்சி அச்சமூகத்தின் தொடர்பாடல் தேவையை அதிகரிக்கின்து. அதனை ஈடுசெய்யும் வகையில் மொழியும் வளர்ச்சியடைகின்றது. கபிலரும் பரண ரும் வாழ்ந்த சங்ககால மக்களின் தொடர் பாடல் தேவைகளும், கம்பரும் ஒட்டக் கூத்தரும் வாழ்ந்த காலத்து மக்களின் தொடர்பாடல் தேவைகளும் மிகவும் வேறு பட்டவை. அவர்கள் பரிமாறிக் கொண்ட வற்றைவிட மிகவும் அதிகமான, மிகவும் வேறுபட்ட தகவல்களை நாம் இன்று பரிமாறிக்கொள்கின்றோம். அதற்கு ஏற்ப நம்காலத்து மொழியும் வளர்ச்சியடைந் துள்ளது. நாம் இன்று பரிமாறிக்கொள் ளும் தகவல்களை அவர்கள்காலத்து மொழியில் நம்மால் தொடர்பாட இய லாது. உதாரணமாக பின்வரும்வாக்கியங் கூறும் தகவல்களை கபிலர் அல்லது கம்பர் பயன்படுத்திய தமிழில் அல்லது பரிமேலழ கரும் நச்சினர்க்கினியரும் பயன்படுத்திய தமிழில் தொடர்பாடல் செய்வது முற்றிலும் சாத்தியமல்ல.

(1) தனியார் மருத்துவமனையில் அவசர சத்திரசிகிக்சை நிலையம் ஒன்றை முதலமைச்சர் திறந்துவைத்தார்.

(2) தோட்டத் தொழிலாளர் சம்பள உயர்வு கோரி ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்தனர்.

(3) குடித்தொகையைக் கட்டுப்படுத்துவ தற்கு குடும்பக் கட்டுப்பாட்டு முறையையே வளர்முக நாடுகள் அனைத்தும் இன்று கடைப்பிடிக் கின்றது.

(4) அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி சார்ந்த நமது சமுதாயம் அந்த வளர்ச்சியின் அனைத்துக் கூறுகளை யும் அறிந்துகொள்ள முற்படு கின்றது.

(5) நான் புதிதாக வாங்கியகார் ஒரு லீட்டர் பெற்றோலில் பத்துக்கிலோ மீட்டர் ஓடும்.

இன்றைய நமது சமூக வாழ்வின் பல்வேறு அம்சங்களைப் பிரதிபலித்து

நிற்கும் இத்தகவல்களும் இத்தகவல்களை வெளிப்படுத்தும் மொழியும் முற்றிலும் புதியவை. நமது சமூகத்தினதும் மொழியினதும் ஒரு புதிய - மிகவும் பிந்திய வளர்ச்சிக் கட்டத்தைக் குறித்து நிற்பவை. அவ்வகையில் கபிலரோ, கம்பரோ, நச்சினர்க்கினியரோ பயன்படுத்திய தமிழில் நாம் இவற்றை மொழி பெயர்த்துக் கூறுதல் இயலாது. காலம் தோறும் அவ்வக் காலத்தின் தேவைகளுக்கேற்ப மொழிவளர்ச்சி அடைகின்றது என்பதையே இது காட்டுகின்றது.

மொழிவளர்ச்சி என்பது புதிய சொற்களின் பெருக்கத்தை மட்டுமன்றி ஒலியமைப்பு (Phonology) சொல்லமைப்பு (Morphology) வாக்கிய அமைப்பு (Syntax) ஆகிய மொழியின் அனைத்து நிலைகளிலும் ஏற்படும் மாற்றங்களையும் உள்ளடக்கின்றது.

மாறாத எதுவும் வளர்ச்சியடைவதில்லை. மொழி இதற்கு விலக்கு அல்ல. வாழும் மொழிகள் எல்லாம் இடையறாது மாற்றத்துக்கு உள்ளாகின்றன. அதனால் தொடர்ந்து வளர்ச்சியடைகின்றன. மாற்றமும் வளர்ச்சியும் ஒரு நிகழ்ச்சியின் இரு அம்சங்களாகும். மொழி ஒரு சமூக சாதனம் என்ற வகையில் சமூகத்தில் ஏற்படும் மாற்றங்களும் வளர்ச்சிகளுமே மொழிமாற்றத்தையும் வளர்ச்சியையும் இறுதியாகத் தீர்மானிக்கின்றன. முற்காலத்திலே மொழி வளர்ச்சி பெரிதும் பிரக்ஞை பூர்வமான ஒரு நிகழ்வாக இருக்கவில்லை. அதனாலேயே மொழிவளர்ச்சி பற்றிய திட்டங்களும் பழைய மொழி நூல்களில் காணப்படவில்லை. ஆனால் இன்றைய கைத்தொழில் நாகரிக யுகத்தில் பிறதுறைகள் போல மொழிவளர்ச்சியும் பிரக்ஞை பூர்வமான ஒரு நிகழ்வாக உள்ளது. மொழி வளர்ச்சிபற்றிய பல்வேறு கொள்கைகளும் திட்டங்களும், செய்முறைகளும் பின்பற்றப்படுகின்றன. கருத்துமுரண்பாடுகளும் மோதல்களும் நிகழ்கின்றன. மொழியை நவீனப்படுத்துவதே இவற்றின் குறிக்கோள் ஆகும். மொழியை நவீனப்படுத்துதல் என்றால் சமூகத்தின் நவீன தொடர்பாடல் தேவைகளுக்கேற்ப மொழியை வளர்த்தல் அல்லது இணக்கப்படுத்துதலேயாகும். அவ்வகையில் தற்கால சூழலில் மொழிவளர்ச்சி, நவீனத்துவம் என்பன ஒரு பொருளையே குறித்துநிற்கின்றன எனலாம்.

தமிழின் நவீனத்துவம்பற்றி கருணாகரன் (1978), அண்ணாமலை (1980), சண்முகம் (1983) ஆகியோர் விரிவாக எழுதியுள்ளனர். இக்காலத் தேவைகளையெல்லாம் வெளிப்படுத்துவதற்கு ஏற்ற வகையில் சொல்வளத்தைப் பெருக்குதல். பழைய வழக்குகளை தவிர்த்து பொது வழக்கில் உள்ள சொற்களையே பெரிதும் பயன்படுத்துதல், சொற்களை இலகுவில் அடையாளம் சண்டு பொருள் விளங்கத் தக்க வகையில் சந்தி பிரித்து எழுதுதல், பழைய இலக்கண விதிகளுக்குப் புறம்பாக வளர்ச்சியடைந்துள்ள உருபனியல், வாக்கியவியல் அம்சங்களுக்கு இடமளித்தல், பேச்சு மொழிக்கும் எழுத்து மொழிக்கும் இடையே உள்ள இடைவெளியைக் குறைத்தல், பன்முகப்பட்ட மொழி நடையை வளர்த்தல், நவீன தொடர்பாடல் பொறிமுறைகளுக்கு ஏற்றவகையில் எழுத்துச் சீர்திருத்தத்தை மேற்கொள்ளுதல் போன்றவற்றை நவீனத்துவத்தின் அம்சங்களாக இவர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர்.

18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்து தமிழ்மொழி இத்தகைய பண்புகளை நோக்கி படிப்படியாக வளர்ச்சியடைந்து வந்துள்ளதை நாம் அவதானிக்க முடியும். மதப்பிரச்சாரர்களும், நவீன அறிவியல், தொழில் நுட்பவியலாளர்களும், எழுத்தாளர்களும், பத்திரிகையாளர்களும், பல்வேறு சமூக, அரசியல் இயக்கங்களைச் சார்ந்தவர்களும் வானொலி, தொலைக்காட்சி, திரைப்படத்துறையினரும் பிரக்ஞைபூர்வமாகவும் பிரக்ஞைபூர்வமற்றும் இத்தகைய வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்துள்ளனர். இதனை தமிழின் நவீனத்துவம் நோக்கிய வளர்ச்சி எனலாம்.

தற்காலத் தமிழ் வளர்ச்சியிலே இதற்கு எதிரான போக்கு ஒன்றையும் நாம் காண்கின்றோம். தமிழ்மொழி அமைப்பிலே ஏற்பட்டுவரும் புதிய மாற்றங்களை ஏற்றுக்கொள்ளாத போக்கு இது. இப்புதிய மாற்றங்கள் தமிழ் மொழியின் வரம்பை உடைத்து அதன் வனப்பையும் வளத்தையும் அழித்துவிடும். என இப்போக்கினர் கருதுகின்றனர். பண்டைய மொழிமரபுகளைப் பேணுவதன் மூலமே தமிழ் மொழியை வளர்க்கமுடியும் என்பது இவர்களின் அடிப்படை வாதமாகும். மொழி வளர்ச்சியில் பழமையை வலியுறுத்தும் இப்போக்கினை மொழிப்பழமை வாதம் எனலாம். மொழிப்பழமை வாதம் ஒன்றில் இருந்து ஒன்று சற்று வேறுபட்ட இரு போக்குகளைக் கொண்டுள்ளது. ஒரு போக்கு மொழிவளர்ச்சியில் இலக்கணத் தூய்மையை வலியுறுத்தும். மற்றது இலக்கணத் தூய்மையோடு மொழித் தூய்மையையும் வலியுறுத்தும். மொழி வளர்ச்சியில் இன்றுவரை செல்வாக்குச் செலுத்திவரும் இப்போக்குகளின் விளைவுகளை மதிப்பிடுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இலக்கணத்தூய்மையும் மொழித்தூய்மையும்

இலக்கணத்தூய்மை என்பது மரபுவழி வந்த இலக்கணக் கொள்கையை வழுவாது கடைப்பிடித்தலையும் மொழியமைப்பில் ஏற்படும் புதிய மாற்றங்களையும் வழக்காறுகளையும் நிராகரிப்பதையும், எழுத்து வழக்கில் பேச்சுவழக்கின் செல்வாக்கை முற்றிலும் ஒதுக்குவதோடு பேச்சு வழக்கையும் எழுத்துவழக்கை ஒட்டி அமைத்துக் கொள்ள வலியுறுத்துவதையும் குறிக்கும். இவ்வகையில் எழுத்திலும் பேச்சிலும் மரபுவழி இலக்கண நெறி பேணப்படவேண்டும் என்பதே இலக்கணத் தூய்மைவாதத்தின் அடிப்படை எனலாம். வேறுவகையில் சொல்வதாயின் செந்தமிழ் மரபினை அல்லது உயர் இலக்கிய மரபினை வலியுறுத்துவதே இலக்கணத் தூய்மைவாதம் எனலாம்.

மொழித்தூய்மை என்பது பொதுவாக சுயமொழிக் கூறுகளை மட்டும் பயன்படுத்துவதைக் குறிக்கும். பிறமொழிச் சொற்கள் கலவாது தனித்தமிழ்ச் சொற்களை மட்டும் பயன்படுத்த வேண்டும் என்பதே மொழித் தூய்மைவாதத்தின் சாராம்சமாகும்.

மொழித்தூய்மை வாதத்தைவிட இலக்கணத்தூய்மைவாதம் பழமையானது, தமிழில் நவீன உரைநடை முன்னோடிகளுள் முதல்வராக மதிக்கப்படும் ஆறுமுக நாவலரை நவீன தமிழில் இலக்கணத் தூய்மையை வலியுறுத்தியவர்களுள் முதல்வராகவும் நாம் கருதுவோம்; நவீன தமிழின் முக்கிய பண்பாகிய எளிமையை முதலில் வலியுறுத்தியவரும் நாவலரே. அவ்வகையில் யாவருக்கும் எளிதில் பொருள் விளங்குவது, பெரும்பாலும் இயற் சொற்கள் கொண்டிருப்பது, சந்தி விகாரங்கள் இன்றி இருப்பது ஆகிய மூன்று அம்சங்களை நவீன உரைநடையின் முக்கிய பண்புகளாக வலியுறுத்தியவர் அவர் (நுஃமான். 1988). அதேவேளை மரபுவழி இலக்கண விதிகளையும் அவர் பெரிதும் வலியுறுத்தினார். ''இலக்கண நூலாவது உயர்ந்தோர் வழக்கத்தையும் செய்யுள் வழக்கத்தையும் அறிந்து விதிப்படி எழுதுதற்கும் பேசுதற்கும் கருவியாகிய நூலாம் என தனது இலக்கணச் சுருக்கத்தில் இலக்கண நூலுக்கு அவர் வரைவிலக்கணம் கூறியுள்ளார். ஆறுமுக நாவலர் பேச்சு வழக்கும் எழுத்துவழக்கை ஒட்டி அமைய வேண்டும் என்ற கருத்துடையவர் என்பதை இது காட்டுகின்றது. அவ்வகையில் பேச்சுவழக்கின் செல்வாக்கினால் எழுத்துவழக்கில் ஏற்பட்டுவந்த சில புதிய மாற்றங்களை அவர் வன்மையாக நிராகரித்தார். 'சுப்பிரமணியம் பிள்ளையவர்கள் குமாரன் தம்பையா பிள்ளையவர்கள்' என்ற தொடரில் குமாரன் என்னும் ஒருமைப் பெயரோடு அவர்கள் என்னும் பன்மைப் பெயர் புணர்ந்ததெப்படி? என தம்பையா பிள்ளை என்பவர் பாடிப்பதிப்பித்த குமார நாயக அலங்காரம் என்ற நூலைக்

கண்டித்து எழுதிய கட்டுரை ஒன்றிலே நாவலர் கேள்வி எழுப்புகின்றார். இராமலிங்கம் சுவாமிகள் பயன்படுத்திய 'நூல்கள்' அறிவிக்க மாட்டாது' 'அவைகள் அறியாது' ஆகிய தொடர்களில் காணப்படும் ஒருமை பன்மை இயைபின்மையை அவர் தன் 'போலி அருட்பா மறுப்பு' என்னும் கட்டுரையில் கண்டித்து எழுதுகிறார் (நுஃமான் 1988) இவை பேச்சு வழக்கு எழுத்து வழக்கில் ஏற்படுத்திய செல்வாக்கின் விளைவாகும். ஆறுமுக நாவலரைப் பொறுத்தவரை இலக்கணத் தூய்மை என்பது பேச்சுவழக்கின் (கொடுந்தமிழ் செல்வாக்கு எழுத்து வழக்கில் (செந்தமிழ்) ஏற்படாது பேணுவதே எனலாம். ''உரைநடையிலே அன்றாடப்பேச்சு வழக்கு வடிவங்களையும் சொற்களையும் பயன்படுத்துவதற்கு ஆறுமுக நாவலர் திட்டவட்டமாக எதிரானவர் அந்தவகையிலே, இறுகிய, வளைந்து கொடுக்காத, ஒருவகையில் செயற்கையான தமிழ் உரைநடை வகை ஒன்று இன்று வரை கூடநிலைத்திருப்பதற்கு அவரும் ஓரளவுக்குப் பொறுப்பாளியாக இருக்கிறார்' என இது தொடர்பாக கமில் சுவலபில் (1973:259) கூறுவதும் இங்கு மனம் கொள்ளத்தக்கது.

ஆறுமுக நாவலரின் பின்வந்த எல்லா மரபு வழித் தமிழறிஞர்களும் பெரும்பாலும் உயர் செந்தமிழ்மரபை இறுக்கமாகப் பேணுவதிலேயே ஆர்வம்காட்டி வந்துள்ளனர். பழைய இலக்கணமரபு சான்றோர்களால் தமிழ் மொழிக்கு அமைக்கப்பட்ட வரம்பு எனவும் அம்மரபை மீறுவது தமிழ் மொழியை வளர்ப்பதற்குப் பதிலாக அதனை அழித்து விடும் என்றும் அவர்கள் நம்பினர். இன நம்பிக்கையின் அடிப்படையில் பெரிதும் பழமை சார்ந்த மொழிநடை ஒன்றை அவர்கள் பயன்படுத்தினர். பழைய இலக்கணவிதிகளுக்கு அதிக அழுத்தம் கொடுத்தனர். பேச்சு வழக்கின் செல்வாக்கை முற்றிலும் தவிர்க்க விரும்பினர். தன் எழுத்துக்களில் இலக்கணத் தூய்மையை முற்றிலும் பேணியவர்களுள் ஒருவரான சுவாமி விபுலாநந்தர் இது பற்றிக் கூறுவது நம் கவனத்துக்குரியது'' ஒவ்வொருமொழிக்கும் சிற்சில சிறப்பியல் புகளுள் அவைதம்மை மாறுபடாது பாதுகாத்தல் ஆன்றோர்க்கியல்பு.... மொழி முதலிலும் இறுதியிலும் நிற்றற்குரிய எழுத்து இவையாவெனவும் இன்ன இன்ன எழுத்துக்களின் முன்னர் இன்ன இன்ன எழுத்துக்கள் மயங்காவெனவும் இலக்கண நூலாசிரியர் வகுத்துக்காட்டியிருக்கின்றனர். அவர் ஆராய்ந்தமைத்த விதிகளுக்கு இயைவாகச் சொற்களையாக்கிக் கொள்ளுதல் முறையாகும்... வினையெஞ்சு கிளவி, பெயரெஞ்சு கிளவி, தொகைமொழி, தொடர்மொழி என்றின்ன வற்றிற்கு இலக்கண நூலாசிரியர் கூறிய வரம்பினைக் கடைப்பிடிப்பது எவ்வாற்றாலும் இன்றியமையாததேயாம்' (விபுலாநந்தர் 1973: 155-56). 1936ல் சென்னையில் நிகழ்ந்த கலைச்சொல்லாக்க மாநாட்டில் நிகழ்த்திய தலைமைப் பேருரையிலேயே சுவாமி விபுலாநந்தர் இவ்வாறு குறிப்பிட்டார் என்பது முக்கிய கவனத்துக்குரியது.

ஆயினும் இலக்கணத் தூய்மைவாதிகள் அனைவரும் மொழித்தூய்மை வாதிகள் அல்லர் மொழித்தூய்மை வாதத்துக்கு முற்பட்டவரான ஆறுமுக நாவலர் அவர் காலத்துப் பிற ஆசிரியர்களைப் போலவே வடமொழிச்சொற்களைத் தாராளமாகக் கையாண்டவர். கிரந்த எழுத்துக்களையும் பயன்படுத்தியவர் அவர். ''சமஸ்கிருதம் தமிழ் என்னும் இரண்டு பாஷைக்கும் முதலாசிரியர் சிவபெருமான்... சமஸ்கிருதமும் தமிழும் சிவபெருமானாலும் இருடிகளாலும் அருளிச்செய்யப்பட்ட இலக்கண நூல்களை உடைமையாலும் ஆன்றோர்களால் தழுவப்பட்டமையாலும் தம்முள் சமத்துவம் உடையனவேயாம் என எழுதியவர் (ஆறுமுகநாவலர் 1969: 185-188). அதனால் வடசொற்களைக் கலந்து எழுதுவதில் அவருக்கு எவ்வித ஆட்சேபமும் இருக்கவில்லை. அதுபோலவே ஆங்கிலச் சொற்களையும் நாவலர் தாராளமாகக் கையாண்டுள்ளார். சமூக, அரசியல்

விவகாரம் பற்றிய அவரது எழுத்துக்களில் ஆங்கிலச் சொற்கள் பல பயின்றுவரக் காணலாம்.

தனித்தமிழ் இயக்கம் உச்சநிலையில் இருந்த காலத்தில் வாழ்ந்தவர் சுவாமி விபுலானந்தர். உயர் செந்தமிழ் நடையையே பெரிதும் பயன்படுத்திய தீவிர செவ்வியல் வாதியான அவர், தனித்தமிழ் இயக்கத்துக்கு எதிரானவர் எனலாம். விஞ்ஞான தீபம் என்னும் தனது நெடுங்கட்டுரையிலே ஆரிய - தமிழ் மோதலை அவர் சாடியுள்ளார். ''வட மொழி, தென்மொழியிரண்டிலும் முதன்மை படைத்திருக்கும் நூல்களின் ஒப்புமையை நோக்குங்கால்...ஆரிய நன்று தமிழ் தீது; தமிழ் நன்று ஆரியன் தீது; மொழிக் கட்டளையாய ஒத்து இல்லை. ஆரியமறைமொழி இழுக்குடையது என்று இல்வாறெல்லாம் பக்கம் பற்றிக் கூறுவாரது உரையனைத்தும் மரபு நிலை திரிந்த வெற்றுரையென்பது தெளிவாகும்'' என்பது அவர் கூற்று. (விபுலானந்தர் 1963:41) ஆழ்ந்த ஒப்பியல் நோக்குடைய சுவாமி விபுலானந்தர் பிறமொழி எதிர்காளாராக இருந்ததில்லை .''உயிருள்ள மொழியானது பிறமொழித் தொடர்பு கொண்டு தனக்குரிய சொற்களஞ்சியத்தைப் பெருக்கிக் கொள்ளுதல் வேண்டும்'' என்றும் அவர் எழுதியுள்ளார். (விபுலானந்தர் 1973:156) விஞ்ஞான தீபம் என்ற தனது கட்டுரைத் தலைப்புப்பற்றிக் குறிப்பிடுகையில்'' தமிழ் மொழியில்'' ''உணர்வுச் சுடர்'' என்பதிலும் பார்க்க விஞ்ஞான தீபம் என்பதே பொருத்தமுடைத்து, அன்றியும் தமிழ் நூற்பரவையுள் வடமொழிப் பெயரெய்தப் பெற்ற நூல்கள் மிகப் பல'' என்றும் கூறுகின்றார். (விபுலானந்தர் 1963 : 49) கலைச் சொல்லாக்கத்தில் தகுந்த தமிழ்ச் சொற்கள் இல்லாவிடத்து வடசொற்களைக் கையாளவேண்டும் என்பதும் அவரது கருத்து (1963 : 102).

இத்தகைய கருத்துக்களுக்கு முற்றிலும் எதிரான மொழித்தூய்மைவாதம் அதன் தீவிர வடிவில் தனித்தமிழ் இயக்கமாக மறைமலை அடிகளால் தோற்றுவிக்கப்பட்டது. இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றி இன்றுவரை தமிழ்ச் சிந்தனையில் பெரிதும் செல்வாக்குச் செலுத்திவரும் இவ்வியக்கத்தின் கருத்தியல் பற்றி அரசியல் நோக்கில் தம்பியும் (1979), இலக்கியநோக்கில் கைலாசபதியும் (1986), மொழியியல் நோக்கில் அண்ணாமலையும் (1979) விரிவாக ஆராய்ந்துள்ளனர். தனித்தமிழ் இயக்கம் இலக்கணத்தூய்மையோடு மொழித்தூய்மையும் பேணப்படவேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டது. பிறமொழிக் கலப்பால் தமிழ் மொழி அழிந்து விடும் என்பதையே மொழித்தூய்மை வாதம் அழுத்திக்கூறுகின்றது. ''வட சொற்களை இப்போதே நாம் தடை செய்யாவிடின் தமிழ் தன்னிலை கெட்டு வேறு மொழிபோலாகிவிடக் கூடும். தமிழில் பிறமொழிச் சொற்களைச் சேர்ப்பதால் தமிழ் தன் இனிமையை இழந்து போவதோடு பல தமிழ்ச் சொற்களும் வழக்கில் இல்லாது இறந்து போகின்றன'' என்பது மறைமலை அடிகள் கருத்து (மேற்கோள் சோமலே. 1956:71)

''நம் தமிழ்மொழி தனித்து இயங்கும் ஆற்றல் பெற்ற மொழி; எனினும் தமிழில் பிறமொழிச் சொற்களைக் கலந்து வழங்குகின்றோம்; இது தவறு பிறமொழிச் சொற்களைக் கலவாது பேசுதலும், எழுதுதலும் நம் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு உதவும் என அரசு சார்பான தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டுள்ள பத்தாம் வகுப்புக்கான தமிழ் இலக்கண நூல் (1990:57) கூறுகின்றது. மொழியை வேண்டுமானால் பிற மொழிக்கலப்பைத் தவிர்க்க வேண்டும் எனவும் பிறமொழிக்கலப்பிலேயே மலையாளம், தமிழில் இருந்து பிரிந்து தனிமொழியாகியது எனவும் மொழித்தூய்மையாளர் அழுத்திக்கூறுவர். அவ்வகையில் தமிழ் மொழியை அதன் தனித்தன்மையோடு அழியாது பேணவேண்டுமாயின் தமிழில் பிறமொழிக்கலப்பை முற்றாகத்தடுக்க வேண்டும் புதிய தொடர்பாடல் தேவை

களுக்கு வேண்டிய சொல்வளத்தைப் பெருக்குவதற்கு தனித்தமிழ்க் கூறுகளை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என இவர்கள் வாதிட்டனர். இவ்வகையால் பழந் தமிழ்ச் சொற்களையும் சொற் சேர்க்கை முறைகளையும் பயன்படுத்துவது தவிர்க்க முடியாததாயிற்று. இவ்வாறு இலக்கணத் தூய்மையும் மொழித் தூய்மையும் மொழிப்பழமை வாதத்தின் இரு அம்சங்களாயின. இவ்விரு போக்குகளும் மொழிவளர்ச்சியைத் தொன்மையை நோக்கித் திருப்பும் நோக்குடையன. அதனால் இவ்விரண்டையும் செவ்வியலாக்கம் (Classicalisation) என வழங்கலாம். இதன் சாதகமான விளைவுகள் சிலவற்றை குறிப்பாக கலைச்சொல்லாக்கத்தைப் பொறுத்தவரை நாம் இனங்காண முடியுமாயினும் நடைமுறையில் இது எதிர் நவீனத்துக்கே (Counter Modernization) இட்டுச் செல்கின்றது. தமிழகத்திலும் சரி. இலங்கையிலும் சரி அரசுசார்பான மொழி அமைப்புக்களிலும் கல்வி நிறுவனங்களிலும் இலக்கணத் தூய்மை மொழித் தூய்மை ஆகியவற்றின் காவல்களே முதன்மை இடம் பெற்றிருந்ததால் மொழி வளர்ச்சியில் இவர்களது கருத்தியலே அதிக செல்வாக்குச் செலுத்தியது. பாடநூல் ஆக்கம், கலைச்சொல் ஆக்கம், அரசு ஆவணங்களின் மொழிபெயர்ப்பு முதலியவற்றில் இப்போக்கின் செல்வாக்கை நாம் இன்றும் காணலாம். அடுத்துவரும் பகுதிகளில் செவ்வியலாக்கத்தின் நடைமுறை விளைவுகள் பற்றிச்சில உதாரணங்களை மட்டும் நோக்கலாம்.

சொற்புணர்ச்சி

தற்காலத் தமிழின் முக்கிய பண்புகளுள் ஒன்று சந்தி பிரித்து எழுதுவதாகும். இதனை எளிமையாக்கத்தின் ஒரு அம்சமாக அண்ணாமலை (1976) விளக்குவார். சொற் புணர்ச்சியிலும் வாக்கிய அமைப்பிலும் எளிமையாக்கம் வெற்றி பெற்றிருப்பதையும் அவர் (1979) சுட்டிக்காட்டியுள்ளார். ஆயினும் இலக்கணத் தூய்மை வாதம் இதற்கு எதிர்நிலையில் செயற்படுவதையே காணமுடிகின்றது. பாடநூல்களில் சொற்புணர்ச்சி அழுத்தி வலியுறுத்தப்படுகின்றது. இலங்கைப்பாடசாலைகளில் பயன்படுத்தப்படும் தமிழ் 9 பாடநூல் பின்வருமாறு கூறுகின்றது. ''இக்காலத்திலே செய்தித்தாள்களிலும் தரம்குறைந்த அச்சுப் புத்தகங்களிலும் புணர்ச்சி விதிகள் பெரும்பாலும் புறக்கணிக்கப்பட்டு வருதலைக் காண்கிறோம். பல சந்தர்ப்பங்களில் பிழையாகவும் சொற்கள் புணர்த்தப்பட்டிருப்பதைக்காணலாம். மாணாக்கர் இவற்றைத் தவிர்த்தல் வேண்டும். சொற்களின் திருத்தமான புணர்ச்சிகளை அறிந்து தாம் எழுதும் கட்டுரைகளிலே இன்றியமையாத புணர்ச்சி விதிகளைப் போற்றி எழுதுதல் வேண்டும். ''பாடநூல் இன்றியமையாத புணர்ச்சிவிதிகள் எவை எனக் கூறப்படவில்லை. ஆயினும் மொத்தம் 94 புணர்ச்சி விதிகளை இப்பாடநூல் கூறுகின்றது. இவை அனைத்தும் தற்காலத் தமிழுக்கு இன்றியமையாதன என்பதே இப்பாடநூல் ஆசிரியர்களின் கருத்தாதல் வேண்டும். எனினும் பாடநூலில் பயன்படுத்தப்பட்டுள்ள மொழிநடையில் உயிர் முன் வரும்போது உடம்படுமெய் தோன்றுவதிலும் மெய்முன்உயிர் வரும்போது உயிர்மெய்யாய்ப் புணர்வதிலும் நெகிழ்ச்சி காணப்படுகின்றது. அதேவேளை லகர ஈறது, மகர ஈற்றுப் புணர்ச்சியிலும் வேறுபல புணர்ச்சி விதிகளிலும் இறுக்கம் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. இவை இன்றியமையாப் புணர்ச்சி என அவர்கள் கருதுவது தெளிவு.

எ. எம். ஏ. அஸீசின் இலங்கையில் இஸ்லாம் என்னும் நூலில் இருந்து 'பழமை என்ற விளக்கு' என்னும் கட்டுரையின் ஒரு பகுதியை இப்பாடநூலில் சேர்த்த ஆசிரியர்கள் மூல ஆசிரியர் லகர, மகர ஈற்றுச் சொற்களைப் புணர்த்தாது எழுதியிருக்க பாடநூலில் அவற்றையெல்லாம் புணர்த்தியே பதிப்பித்துள்ளனர். இங்கு சில உதாரணங்களைப் பார்க்கலாம்.

மூலம்	திருத்தம்
இருந்தால் போதும்	இருந்தாற் போதும்
நாகரிகத்தில் போதிய	நாகரிகத்திற் போதிய
நடைமுறையில் கொண்டுவரும்	நடைமுறையிற் கொண்டுவரும்
இயக்கும் சக்கரம்	இயக்குந் சக்கரம்
ஒன்றும் தெரிந்து	ஒன்னுள் தெரிந்து
இருக்கும் கெடுதல்	இருக்கந் கெடுதல்.

இலங்கை கல்வி வெளியீட்டுத் திணைக்களமும் அரசகரும மொழித்திணைக்களமும் இப்புணர்ச்சி விதிகளை இறுக்கமாகக் கடைப்பிடித்து வருகின்றன. Fisheries Department என்பதற்கு அரசகரும மொழித்திணைக்களம் கொடுத்துள்ள தமிழ் வடிவம் 'கடற் றொழிற்றிணைக் களம்' என்பதாகும்.

வாக்கியஅமைப்பு

முன் குறிப்பிட்ட எ. எம். ஏ. அஸீசின் கட்டுரையில் இருந்து மூன்றில் ஒரு பகுதியே பாடநூலில் சேர்க்கப்பட்டுள்ளது. ஆயினும் அதில் 140 திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. இத்திருத்தங்கள் திறந்த எழுத்து நீக்கம், சொற்புணர்ச்சி, பிறமொழிச் சொற்கள் நீக்கம்,வாக்கிய அமைப்பு ஆகிய நிலைகளில் செய்யப்பட்டுள்ளன. வாக்கிய அமைப்பு தொடர்பான ஒரு உதாரணத்தை இங்கு தரலாம். அஸீஸின் கட்டுரையில் 'நாம் தயாராயிருக்க வேண்டும்' என்று வரும் வாக்கியம் பாடநூலில் 'நாம் தயாராயிருத்தல் வேண்டும்' எனத் திருத்தப்பட்டுள்ளது. 'இது செயல் வேண்டும் என்னும் கிளவி' எனவரும் தொல்காப்பியச் சூத்திரத்தின் மாதிரியில் செய்யப்பட்ட திருத்தம். செய்ய வேண்டும், போக வேண்டும், நிற்க வேண்டும் என எழுதுவது இக்கால மொழி மரபு. இவ்வாறு எழுதுவதே இன்று பெருவழக்காகும். பேச்சு வழக்கின் செல்வாக்கினால் எழுத்துவழக்கில் ஏற்பட்ட மாற்றமாக நாம் இதனைக் கருதலாம், இடைக்காலத் தமிழிலேயே இம்மாற்றம் தொடங்கிவிட்டது. பழந் தமிழில் இவை முறையே செயல்வேண்டும், போதல் வேண்டும், நிற்றல் வேண்டும் என அமையும். இப்பழந் தமிழ் மரபையே சரியான இலக்கண விதியாகக் கருதும் இலக்கணத் தூய்மை வாதிகள் புதிய மாற்றத்தை நிராகரிப்பர். இது மொழி வளர்ச்சியைப் பின்னோக்கி இழுத்தலாகும்.

பழந்தமிழில் அல் என்ற அடியாகப் பிறந்த எதிர்மறை வினைமுற்று திணை, பால் எண், இடம் ஆகியவற்றுக்கு ஏற்ப விகுதி பெற்று நான்அல்லேன் நாம், அல்லேம், நீ அல்லை, நீங்கள்அல்லீர், அவன் அல்லன், அவள் அல்லள், அவர்கள் அல்லர், அது அன்று,அவைஅல்ல என அமையும். ஆனால் இக்காலத் தமிழில் அல்ல என்ற வடிவம் இருதிணை, ஐம்பால், மூவிடத்துக்கும் பொதுவானதாக அமைகின்றது. இதுவும் பேச்சுவழக்கின் செல்வாக்கினால் ஏற்பட்ட எளிமை நோக்கிய மாற்றமாகும். மு. வரதராசன் போன்ற தமிழறிஞர்களும் இந்த அமைப்பையே பயன்படுத்தியுள்ளனர். ஆயினும் இலக்கணத் தூய்மை வாதம் இதனை ஏற்றுக் கொள்வதில்லை. தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் புதிய கல்விக் கொள்கையின் கீழ் அமைந்து பாடத்திட்டத்திற்கிணங்க எழுதி வெளியிட்டுள்ள எட்டாம் வகுப்புக்குரிய தமிழ் இலக்கணம் அவன் அல்ல, அவள் அல்ல, அவர் அல்ல, அது அல்ல என்று எழுதுவது பிழை என்றும் அவன் அல்லன், அவள் அல்லள், அவர் அல்லர் அது அன்று என எழுதுவதே சரி என்றும் வலியுறுத்திக் கூறுகின்றது.

இலங்கை கல்வி வெளியீட்டுத் திணைக்களம் வெளியிட்டுள்ள மொழிபெயர்ப்பு நூல் ஒன்றிலே இடம்பெறும் பின்வரும் வாக்கிய அமைப்பு பண்டைய உரையாசிரியர்களின் செவ்வியல் நடையை ஒத்திருப்பதையும் இங்கு சுட்டிக்காட்டலாம்.

''ஒப்பற்ற மேதாவிலாசத்தைத் தாகூர் உடையாராயினும் தனியொரு பிறவியாக அவரைக் கொள்ளலும் பொருந்தாது. என்னை! நாட்டபிமானத்தால் உந்தப் பட்டு, முன்னட் போலியிலக்கியத்தின் தளைகளை அறுத் தெறியும் ஆசையால் ஏற்பட்டு இலக்கியம் படைத்த கவிஞரும் எழுத்தாளரும் இந்திய மொழிகள் பிற வற்றிலும் தோன்றினரன்றோ'', (பணிக்கர்: 1961 : 289).

பிறமொழிச் சொற்களின் தமிழாக்கம்

மொழிப்பழமை வாதம் பிறமொழிப் பெயர்களையும் சொற்களையும் தமிழ் மயப்படுத்துவதில் அதிகம் செல்வாக்குச் செலுத்தியுள்ளது. இவ்வம்சத்தில் பத்திரிகைத் தமிழ் அல்லது நாம் அன்றாடம் வழங்கும் பொதுத்தமிழுக்கும் கல்வித் துறை, அல்லது பாடநூல் தமிழுக்கும் இடையே பெரிய இடைவெளி இருப்பதைக் காணமுடியும். பொதுத் தமிழ் முடிந்த அளவு மூலமொழி உச்சரிப்பைப் பேண முயலுகின்றது. பாடநூல் தமிழ் முற்றிலும் அவற்றைத் தமிழ் மயமாக்க முயலுகின்றது.

எந்த மொழியும் பிறமொழிச் சொற்களை ஒலிச்சிதைவின்றி மூலமொழியில் உள்ளதுபோல் அப்படியே கடன் வாங்கிக் கொள்வதுமில்லை. அதுபோல் முற்றிலும் தனது ஒலி அமைப்புக்கு ஏற்ப ஒலிமாற்றம் செய்து தன்மயமாக்கிக்கொள்வதும் இல்லை. இரண்டுமே நிகழ்கின்றன. எல்லா மொழிகளும் பெருமளவு தமது ஒலியமைப்புக்கு ஏற்பவே பிறமொழிச் சொற்களைத் தழுவிக்கொள்கின்றன. அதே வேளை ஓரளவு பிறமொழி ஒலிகளையும் ஒலிச் சேர்க்கைகளையும் கடன்வாங்கியும் கொள்கின்றன. இவ்வாறுதான் தமிழ் மொழியிலே வடமொழித் தொடர்பால் ஜ. ஸ. ஷ, ஹ முதலிய எழுத்துக்களும் ஒலிகளும் கடன்வாங்கப் பெற்றன. மொழிக்கு முதல், இடை, கடை, நிலைகளில் வரா எனப் பழைய இலக்கண நூல்கள் குறிப்பிடும் ஒலிகள் இடம்பெறத் தொடங்கின. வடமொழித் தொடர்பால் ஏற்பட்ட இம்மாற்றங்கள் ஆங்கிலம், அறபு போன்ற பிறமொழிப் பெயர்களை எழுதுவதற்கும் வாய்ப்பாக அமைந்தன. மொழிப்பழமை வாதம் இவ்வாய்ப்பை மூடிவிடுகின்றது.

இலங்கையில் பல்கலைக்கழகம்வரை தாய்மொழிமூலம் கல்வி அறிமுகப்படுத்தப் பட்ட பின், கல்வி வெளியீட்டுத் திணைக் களம் ஆங்கில மொழியில் எழுதப்பட்ட இயற்கை விஞ்ஞானம், சமூகவிஞ்ஞானம், கணிதம் போன்ற பல துறை சார்ந்த பாடநூல்களையும் வேறுபல புகழ்பெற்ற நூல்களையும் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டது. ஏ. எல். பஷமின் வியத்தகு இந்தியா (Wonder that was India), கே. எம். பணிக்கரின் ஆசியாவும் மேனாட்டு ஆதிக்கமும் போன்றவையும் இவற்றுள் அடங்கும். தமிழ் நாட்டில் கூட இந்நூல்கள் மொழி பெயர்க்கப்படவில்லை. ஆயினும் இம் மொழிபெயர்ப்புக்களில் அதீத செவ்வியல் நெறி பேணப்பட்டமையால் அவை தம்நோக்கத்தை ஈடு செய்ய முடியாத அளவு தொடர்பாடல் திறன் குன்றியவையாகக் காணப்படுகின்றன. பிறமொழிப் பெயர்களின் தமிழாக்க முறை மட்டுமன்றி வழக்கிறந்த பழந்தமிழ்ச் சொற்கள், இலக்கணக்கூறுகள், வாக்கிய அமைப்பு போன்றவை பெருமளவில் பயன்படுத்தப் படுவதும் இதற்குக் காரணமாகும். இந் நூல்களைப் பயன்படுத்தும் மாணவர் இவற்றை இலகுவில் புரிந்து கொள்ள முடியாதிருப்பதாகக் கூறுகின்றனர். இங்கு 'பணிக்கரின் ஆசியாவும் மேனாட்டு ஆதிக்கமும்' என்னும் நூலில் இடம் பெற்றுள்ள தமிழ் மயமாக்கப்பட்ட சில பிறமொழிப் பெயர்களை மட்டும் உதாரணமாகத் தருகிறேன்.

இடப்பெயர்கள்: அபுகானித்தான், அமித்தடாம், அலாசுக்கா, அனோய், இசுப்பெயின், இசுக்கொட்டிசு, இடச்சு, இரசியா, ஒசுத்திரேலியா, சான்பிரான், சுக்கோ, சென் பற்றசுப்பேக்கு, திரனி

டாத்து' தொக்கியோ, பலுச்சித்தான், பாக்கித்தான், பாங்கொக்கு, போணியோ, மன்செசுற்றார்.

ஆட்பெயர்கள்: அட்சன், ஆடிங்கு. உறோபேட்டு ஆட்டு, இரசல், இலாசுகி உரூசோ, செஸ்திசுக்கான், தொசுற்றே விசுக்கி, யோட்சு, விற்றோரியா.

தொடர்பாடல் நோக்கில் இத்தகைய தமிழாக்கம் பயனற்றது என்பது வெளிப் படை. பத்திரிகை, வானொலி, தொலைக் காட்சி போன்ற தொடர்பாடல் சாதனங் களில் இப்பெயர்கள் பெரிதும் அவற்றின் மூல உச்சரிப்பை ஒட்டியதாகவே அமை கின்றன. மொழிப் பழமை வாதம் மேலோங்கியுள்ள கல்வித்துறைகளில் அவை வேறுபட்டு அமைகின்றன. அதனால் தமிழ் மயப்பட்ட புதியவடிவங்கள் அவற்றின் தொடர்பாடல்திறனை இழந்து விடுகின் றன. இன்று தமிழ்மட்டும் அறிந்தவர்களா லும் பரவலாக அறியப்பட்ட ஜோர்ஜ்புஷ், ஜோன் மேஜர் போன்ற பெயர்களை யோட் புசு, யோன் மேசர் என்றோ சோர்ச்சு புசு, சோன் மேசர் என்றோ தமிழ்மயமாக்கினால் அவர்களால் புரிந்து கொள்ள முடியாது. மொழிபிரதானமாக ஒரு தொடர்பாடல் சாதனம் என்றவகை யில் மொழிமரபு நவீன தொடர்பாடலுக்கு இடையூறாக அமையும் போது அம்மரபு மாறவேண்டியிருக்குமே தவிர மரபைப் பெறுவதற்காக மொழி தன்தொடர் பாடல்திறனை இழந்துவிடாது.

பிறமொழிச் சொற்களை நீக்குதல் அல்லது அவற்றைத் தமிழ் மயமாக்குதல் தொடர்பாக இன்னும் ஒரு முக்கிய அம் சத்தையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். மொழித்தூய்மையாளர்கள் தமிழ் ஒருகுறிப்பிட்ட சமூகப்பிரிவின ருக்கு உரியதாக அன்றி ஒரு பல்லின, பல்கலாசார சமூகத்துக்குரிய மொழியாய் வளர்ச்சியடைந்து வந்திருக்கின்றது என் பதை மறந்து விடுகின்றார்கள். மறைமலை அடிகள் தமிழ்மொழி வளர்ச்சியை சைவத் தோடு மட்டுமே இணைத்துப்பார்த்தார்.

அவரது கருத்துப்படி பண்டைக்காலம் முதல் தமிழைப்பயன்படுத்தியவர்களும் வளர்த்தவர்களும் சைவர்களே. பின்னர் வந்த பௌத்தர்களும் சமணர்களும், வைஷ்ணவர்களும், கிறிஸ்தவர்களும், முஸ்லீம்களும் தங்கள் மதக் கொள்கைக ளைப்பரப்புவதற்காக மட்டுமே தமிழைப் பயன்படுத்தினர் எந்தவித கட்டுப்பாடு மின்றி வடசொற்களையும் பிறமொழிச் சொற்களையும் கலந்து ஆயிரக்கணக்கான தமிழ்ச் சொற்களை வழக்கில் இருந்து அழிந்து போகச் செய்ததில் இருந்தே அவர்கள் தமிழை வளர்க்க வரவில்லை என்பதை விளங்கிக் கொள்ளலாம் என தமிழ்மொழிக்கு மட்டும் உரிய சைவத் தமிழர்களே தமிழை அதன் தூய வடிவத் தில் பயன்படுத்தி அதனை வளர்த்தனர் என்றும் அவர்கருதுகின்றார் (மறைமலை அடிகள் 1972) மொழிமாற்றம் வளர்ச்சி பற்றி எவ்வித ஆழ்ந்த அறிவும் இன்றி வெறும் உணர்ச்சி நிலைநின்று மறைமலை அடிகள் பிரச்சினையை நோக்கியிருக்கிறார் என்பது தெளிவு. எந்த மக்கள் கூட்டமும் மொழியை வளர்க்கும் நோக்கில் மொழி யைப் பயன்படுத்துவதில்லை. பதிலாக மொழியைப் பயன்படுத்துவதன் மூலமே மொழி வளர்கின்றது. பழைய சொற்கள் வழக்கில் இருந்து மறைவதும் புதிய சொற்கள் வழக்குக்கு வருவதும் மொழி வளர்ச்சியின் இயல்பான நிகழ்வாகும். சங்ககாலத்தில் வழங்கிய ஆயிரக்கணக் கான சொற்கள் இடைக்காலத்தில் வழக் கிறந்தன என்றால் தமிழரின் பண்பாடும் பெரிதும் மாற்றத்துக்கு உள்ளாக்கிவிட் டது என்பதே பொருள். பல்வேறு பண் பாட்டை உடைய மக்கள் ஒரு மொழியைப் பயன்படுத்தும்போது அம்மொழி பன்முகப் பட்ட வளர்ச்சி பெறுகின்றது. ஆங்கிலம் உலகப் பெருமொழியாக இவ்வாறே வளர்ந்தது. தமிழும் அவ்வாறே வளர்ந்து வந்துள்ளது. பௌத்தர்களும், சமணர் களும், வைஷ்ணவர்களும், கிறிஸ்தவர்களும் இஸ்லாமியரும் தங்கள்தங்கள் தேவை களுக்காக தமிழ்மொழியைப் பயன்படுத் தியபோது தமிழ் அதற்கெல்லாம்

வளைந்து நெகிழ்ந்து கொடுத்து வளர்ந்துள்ளது. அதன் சொல்வளமும் பொருள் வளமும் பெருகியுள்ளது. ஒரு வாழும் மொழியின் இயல்பு இது.

மறைமலை அடிகள் கருதுவதுபோல பழந்தமிழ் மரபை சைவத்தமிழ்மரபாகக் காண்பதும் பிறபண்பாட்டுக் கலப்பினால் தமிழ் மரபில் ஏற்படும் மாற்றத்தையும் வளர்ச்சியையும் தமிழின் அழிவாகக் கருதுவதும் தூய சைவத்தமிழ் மரபு எனத் தாம் கருதுவதை பிற பண்பாட்டினர் மேல் திணிப்பதும் சமூகவியல் நோக்கிலும் மொழியியல் நோக்கிலும் ஆரோக்கியமற்றதாகும். கிருட்டினன் என்பதை விட கிருஷ்ணன் என்றும் கிறித்தவர் என்பதை விட கிறிஸ்தவர் என்றும் இசுலாமியர் என்பதை விட இஸ்லாமியர் என்றும் எழுதுவதையே அவ்வச் சமூகப்பிரிவினர் விரும்புவாராயின் மொழிமரபுக்கு விரோதமானது எனக் கூறித்தடுப்பது மொழி வளர்ச்சிக்கு எதிரானது என்பதோடு ஒரு பல்லின சமூகநோக்கில் உகந்ததல்ல என்பதையும் நாம் அழுத்திக் கூற வேண்டும்.

பிறமொழிச் சொற்கலப்பு

மொழித்தூய்மை வாதம் தொடர்பாகக் கூறவேண்டிய பிறிதொரு அம்சம் சமூக வளர்ச்சிப்போக்கில் பிறமொழிக் கலப்பு தவிர்க்கமுடியாதது என்பதாகும். மனிதர்கள் சிறுசிறு குழுக்களாக பிற சமூகத் தொடர்பின்றி, பிறபண்பாட்டுத் தாக்கமின்றி தனித்து வாழ முடியுமாயின் அவர்கள் மொழியும் பிறமொழிக் கலப்பின்றி இயங்கமுடியும். மிகப்பண்டைக் காலத்திலேயே இது சாத்தியமாக வில்லை. நவீன யுகத்தில் அத்தகைய ஒரு தனித்து வாழ்வை எண்ணிப் பார்க்கவே முடியாது.

பிறபண்பாட்டுத் தொடர்புமூலம் அப் பண்பாட்டுக்குரியோரின் பொருட்களும் சிந்தனையும் நம்மை வந்து சேரும்போது அவற்றைக் குறிக்க அவர்கள் பயன்படுத்திய சொற்களும் நம்மொழியில் வந்து சேர்கின்றன. சைக்கிள், கார், பஸ், லொறி, போன்ற சொற்கள் இவ்வாறே நம்மை வந்து சேர்ந்தன. நமது அன்றாடத் தொடர்பாடலில் இவை தவிர்க்க முடியாத சொற்களாகிவிட்டன. சைக்கிள் என்பதற்குப் பதிலாக துவிச்சக்கரவண்டி, ஈருருளி, இருசில்லு, மிதிவண்டி போன்ற சொற்களைப் பயன்படுத்த முயற்சி நடந்தது. ஆயினும் சைக்கிள் என்பதே நிலை கொண்டு விட்டது. கார் என்பதற்கு மாற்றாக நாம் ஒரு சொல்லை உண்டாக்க முடியவில்லை. இதனை வடிவில் ஒத்த பழந்தமிழ்ச் சொல் (கார்மேகம், கார் காலம்) இருந்தது இதற்குக் காரணமாய் இருக்கக் கூடும். பஸ் என்பதற்குப் பதிலாக பேருந்து என்பது இன்று தமிழ் நாட்டில் வழக்கில் உண்டு. ஆயினும் பஸ் என்பதே இன்னும் பெருவழக்கில் உள்ளன. இதனை பசு, வசு எனத் தமிழ்மயமாக்கும் முயற்சிகளும் நடந்தன. இலங்கையில் லொறியும் தமிழ் நாட்டில் லாறியுமே வழக்கில் உள்ளன' இவற்றை உலொறி, உலாறி எனப் பயன்படுத்தப் பத்திரிகையாளர் யாரும் முயன்றதாகத் தெரியவில்லை.

தமிழில் பிறமொழிச் சொற்கள் பல எவ்வாறு அத்தியாவசியமாகி விட்டன என்பது பற்றி ஒரு பத்திரிகையாளரான டி. எஸ். சொக்கலிங்கம் ஒருமுறை கூறிய கருத்து இங்கு மனங்கொள்ளத்தக்கது.

''டாங்கி, விமானம், பெட்ரோல் மோட்டார், பீரங்கி, குண்டு, துப்பாக்கி தோட்டா, ஆகிய வார்த்தைகளை உபயோகிக்காமல் யுத்த செய்திகளைச் சொல்லவே முடியாது. டாங்கியும், பெட்ரோலும், மோட்டாரும் ஆங்கிலம். இவற்றை எப்படி மொழிபெயர்ப்பார்கள். தானே இயங்கும் ஊர்தி என்று ஒவ்வொரு தடவையும் மோட்டாருக்குப் பதிலாக நீளமாக எழுதுவார்களா? விமானம், பீரங்கி, குண்டு, துப்பாக்கி, தோட்டாவை எடுத்துக்கொள்வோம். இவையெல்லாம் தமிழ்வார்த்தைகளே என்று நீங்கள் நினைக்கலாம். புலவர்கள் தனித்தமிழ்க்

கொள்கைப்படி இவை தமிழ் வார்த்தைகளே அல்ல. விமானம் சமஸ்கிருதம். பீரங்கி போர்த்துக்கேய பாஷையில் இருந்து வந்தது. குண்டு. மராத்தி, பாஷை துப்பாக்கி துருக்கி பாஷை. தோட்டா, உருதுவில் இருந்து வந்து சேர்ந்தது. இவ்வளவையும் பிறமொழிச் சொற்கள் என்று தள்ளிவிட்டால் இவற்றுக்குப் பதிலாகத் தனித்தமிழ் எப்படிச் சொல்வார்கள், விமானத்துக்குப் பறக்கும் வண்டி என்றும், பீரங்கிக்கு உருண்டு நீண்ட குழாயுள்ள வெடியென்றும் சொல்லுவார்களா? அப்படி சொன்னால் அவை பொருத்தமாயிருக்குமா? அல்லது ஜனங்களுக்குத்தான் புரியுமா? (மேற்கோள் சோமலே 1956: 86)

தனித்தமிழ் இயக்கம் அதன் தீவிர நிலையில் மொழி வளர்ச்சிக்குப் பாதகமானது என்பதை பொதுவாக பலரும் ஏற்றுக் கொண்டுள்ளனர். நாகரீகமடைந்த ஒரு மனிதன் காட்டுமிராண்டியாவதை ஒத்த பிற்போக்கானது என வையாபுரிப்பிள்ளை தமிழின்மறுமலர்ச்சி என்ற தனது நூலில் அதுபற்றிக் குறிப்பிட்டுள்ளார். பழந் தமிழை மட்டுமன்றி அதை சமஸ்கிருதக் கலப்பற்றதாகவும் பேணும் சுவாமி வேதாசலத்தின் முயற்சி இரு மடங்கு பிற்போக்கானது என்றும் அது ஒரு சாத்தியமற்ற காரியம் என்றும் கைலாசபதி (1986) கூறியுள்ளார். ஆயினும் தமிழில் மனம்போன போக்கிலான பிறமொழிக் கலப்பைக் கட்டுப்படுத்தியதும் தமிழின் சொல்வளத்தைப் பெருக்குவதில் அதன் உள்ளாற்றலைப் பயன்படுத்துவதற்கு வழிதிறந்துவிட்ட தமிழ் மொழிவளர்ச்சியில் அதன் சாதகமான செல்வாக்கு என்றே கூற வேண்டும்.

எனினும் இலக்கணத் தூய்மையும் மொழிததூய்மையும் ஒன்றிணைந்த செவ்வியல் மொழிநடை பேச்சு மொழியில் இருந்து வெகுதூரம் விலகிச் செல்கின்றது. சாதாரண படிப்பறிவுள்ள வாசகன் மட்டுமன்றி ஓரளவு உயர் கல்வி பெற்றவர்கள் கூட இதனைப் புரிந்துகொள்வதில் இடர்படுகின்றனர். தற்கால வழக்கில் இல்லாத பழந்தமிழ்ச் சொற்கள், இலக்கணக்கூறுகள் பலவற்றைகையாளுதல், பழைய புணர்ச்சி விதிகளை பெரிதும் பேணுதல், பிறமொழிப் பெயர்களையும், சொற்களையும் முற்றிலும் தமிழ் மயமாக்குதல் போன்றவை இத்தகைய இடர்பாட்டுக்குக் காரணமாகின்றன. இதனாலேயே மொழி வளர்ச்சியைப் பொறுத்தவரை செவ்வியலாக்கம் நவீனத்துக்கு எதிர்நிலையானது எனக் கொள்ளவேண்டியது.

தமிழ்மொழிபோன்றே சீனமொழியும் தொன்மை வாய்ந்த இலக்கிய வளம் பெற்ற ஒரு மொழியாகும். தமிழ்போல் சீனமொழியிலும் பேச்சுக்கும் எழுத்துக்கும் இடையே பெரிய இடைவெளியுண்டு. இந்த நூற்றாண்டின் தொடக்கப் பகுதிகளில் தமிழ்மொழியை நவீனப்படுத்த முயற்சிகள் நடைபெற்றதுபோல் சீனமொழியை நவீனப் படுத்தும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. பணிக்கர் தன்னுடைய நூலிலே இதுபற்றி விரிவாக எழுதியுள்ளார். பெரிதும் செவ்வியல் பாங்கான மொழிநடையில் மொழி பெயர்க்கப்பட்ட அதன் ஒரு பகுதியை இங்கு தருகின்றேன். இதில் கூறப்படும் பொருளுக்கும், அதன் மொழிநடைக்கும் இடையில் உள்ள இயையின்மைமை நாம் தெளிவாகக் காண முடியும்.

''இலக்கிய விற்பன்னரும் பொதுமக்களும் ஒரே மொழியை வழங்கச் செய்து அவ்வழி, சிந்தனைச் செல்வமனைத்தும் பொது மக்களுக்குள் திறந்துவிடுதே முதற்பெறும் பணியென ஊகி கருதினான். இலக்கியச் சீனமொழியென்பது மக்கள் நாவிலே பயிலாத தொன்றாதலின் செத்தமொழியே அதுவென அவன் வாதித்தான். 'மத்தியகால ஐரோப்பாவில் இலத்தீன் போன்றது அது; சாக்காட்டிலேயும் கூடியது குறைந்ததெனப் பேதப்படுத்திப் பேசமுடியுமாயின் அது இலத்தீனிலும் பார்க்க நனிசெத்த மொழியாகும். இலத்தினைப் பேசுதல் விளங்குதலுங் கூடும். ஆயின் இலக்கியச் சீனமொழியைப் பேசும்

போது நன்கு பழகிய சொற்றொடர்களைப் பயன்படுத்தினாலன்றி அல்லது, பேசுவோன் சொல்லப்போவது பற்றி முன்னமே ஒரளவு தெரிந்திருந்தாலன்றி, அம்மொழியைச் செவிப்புலனால் விளங்கிக் கொள்ளல் பண்டிதர்க்கும் அரிதே' 'இவ் விடர்ப்பாட்டைத் தவிர்க்கும் பொருட்டும், அனைவரும் புரிந்து கொள்ளத்தக்க சிந்தனைக் கருவியாக மொழி அமைதல் வேண்டுமெனும் நோக்கத்தோடும், ஊ – கி பேச்சு வழக்கையே ஆதரித்தான்.........

அவன் கூறிய ஆலோசனைகள் கட்டு மட்டானவை. 'தொல்லருங்கால நூல்களிலிருந்து மேற்கோள் காட்டலைத் தவிர்க்க. ஒரே பெற்றித்தாக வசனமமைக்கும் முறையை விலக்குக; காலப்போக்கிலே வழக்கொழிந்த இலக்கியத் தொடர்களைத் தள்ளி, பேச்சு வழக்கினைத் தள்ளா தொழிக; இலக்கண வரம்புக் கமைய வசனமைத்தலின் அவசியத்தை வற்புறுத்துக; சாரமற்ற சொற்றொடர்களை உபயோகிக்க வேண்டா முந்தையோரின் நடையைப் பின்பற்ற வேண்டி; சுருங்சக்கூறின் விளங்கத்தக்க மொழி நடையிலே இயற்கையாக எழுதுக. ஆயினும் அவன் எடுத்துக் கூறிய வாதங்களிலே விரவி நின்ற நிதானமும் அவனது புலமையுமெல்லாம் சீன இலக்கியத்துறையிலே தாராள மனப்பான்மை வந்து பாய்தற்கு வழி திறந்திருக்குமேயல்லாது அறிஞன் சென்னுடைய அரும்பணியின்றேல், அவை இலக்கியப் புரட்சிக்கு அடிகோலியிருக்குமா வென்பது சந்தேகமே. அறிஞன் சென்னே அக்கருத்துக்களை ஒரு புரட்சிக் கோட்பாடாக உயர்த்தி வைத்தவன். ஊ - கியின் வேண்டுகோளை ஆதரித்த சென் 'சீன இலக்கியத்திலே ஒரு புரட்சி' உருவாதல் வேண்டுமெனக் கட்டுரைத்தான். அவன் தானே பெருமித நடையிற் கூறியவாங்கு 'இலக்கியப் புரட்சிக் கொடியை ஏற்றி வைத்தான்.

பேச்சு மொழியிலியன்ற கட்டுரைகளைப் பிரசுரிக்கத்தலைப்பட்டு, ஊ-கியில் ஆறு உத்திகளையும் 'லா யவனகே' கையாளத் தொடங்கிய காலை இலக்கியப் புரட்சி ஈடேறியதோடு, செயற்கைத் தன்மைமிக்க பாண்டித்திய நடையின் கட்டுப்பாடுகளைச் சீனமொழி உடைத்தெறிந்து விடுதலையும் பெற்று விட்டதெனலாம். (பணிக்கர்: 1969: 307 - 308)

சீனமொழியின் நவீனத்துவம் பற்றிக் கூறும் மொழிபெயர்ப்பாளரின் நடை பெருமளவு செயற்கைத்தன்மை மிக்க பாண்டித்திய நடையே என்பது வெளிப்படை. இலக்கணத் தூய்மை ஆகியவற்றின் செல்வாக்குக்கு உட்பட்ட செவ்வியல் நடைக்கு இது நல்ல உதாரணமாகும். தமிழிலே இத்தகைய பாண்டித்திய நடையின் கட்டுப்பாடுகளை உடைத்துக் கொண்டு, தமிழ்மொழியை நவீன உலகுக்குக் கொண்டுவந்தவர்கள் பாரதியும் அவன் வழிவந்த மறுமலர்ச்சி எழுத்தாளர்களுமே ஆவர். அவர்கள் மூலமே தமிழில் பேச்சு மொழிக்கும் எழுத்து மொழிக்கும் இடையில் உள்ள இடைவெளிகுறையத் தொடங்கிற்று. தமிழ் பன்முகப்பட்ட நடைவளம் பெற்று வளர்ந்து நவீன தொடர்பாடல் தேவைகளுக்கியைய நவீனத்துவம் பெற்றது. அவ்வகையில் தமிழின் எதிர்கால வளர்ச்சி அவர்கள் வழியில் செல்வதே உகந்தது.

பயன்பட்ட நூல்கள்

அண்ணாமலை, இ. (1980) ''எளிமையாக்கம் புதுமையாக்கத்தின் ஒரு முறை'' **மொழியியல் - 4** அண்ணாமலைநகர்'

ஆறுமுகநாவலர், (1969) பாலபாடம் (நான்காம் புத்தகம்) வித்தியானுபாலன அச்சகம், சென்னை.

சிவத்தம்பி, கா (1979) தனித்தமிழ் இயக்கத்தின் அரசியல் பின்னணி சென்னை.

சுவாமி விபுலாநந்தர், (1963) **விபுலாநந்த செல்வம்** கலைமகள் வெளியீடு, சென்னை.

சுவாமி விபுலாநந்தர், (1973) **இலக்கியக் கட்டுரைகள்** கல்வி வெளியீட்டுத் திணைக்களம், கொழும்பு.

சோமலெ, (1956) **வளரும் தமிழ்** பாரி நிலையம், சென்னை.

நுஃமான், எம். ஏ. (1988) ''19 ஆம் நூற்றாண்டின் நவீன உரைநடை இயக்கமும் ஆறுமுக நாவலரும்'' **மொழியல்** தொகுதி 11 இதழ் 1 - 4.

பணிக்கர், கே. எம். (1979) **ஆசியாவும் மேனாட்டு ஆதிக்கமும்** கல்வி வெளியீட்டுத் திணைக்களம் கொழும்பு.

மறைமலை அடிகள் (1972) **உரைமணிக் கோவை** சென்னை.

Annamalai. E. (1979) Movement for Linguistic Purism: The case of Tamil in **Language Movements in India** CIIL Mysore.

Kailasapathy K. (1980) ''The Tamil Purist Movement: a Re-evaluation'' in **on Art and Literature** NCBH Madras.

Kamil Zvelabil (1978) Smile of Murugan.

Karunakaran K, (1978) **Studies in Tamil Sociolinguistics** Malar Pathippur, Annamalai Nagar.

Shanmugam S. V. (1983) **Aspects of of Language Development in Tamil** All India Linguistics Association, Annamalai Nagar.

ஒப்பு மொழியியல்

மொழி வரலாற்றை எழுதப் பயன்படும் உத்திகளில் மிக்க ஆற்றல் உடையது ஒப்பியல் முறை (Comparative method) யாகும். ஒரு குடும்பத்தின் பல்வேறு மொழிகளை ஒப்பிட்டு ஆராயும் முறைதான் ஒப்பியல்முறை எனக் கருதுகின்றனர். பல மொழிகளை ஒப்பிட்டு ஆராய்ந்து அவையனைத்தும் தொல்மொழி (Proto Language) ஒன்றிலிருந்து கிளைத்திருக்க வேண்டும், என ஒப்பியல் ஆய்வு மொழியியலாளர்கள் கூறுகின்றனர். எல்லா இன மொழிகளையும் (Cognate Language) ஆராய்வதன்மூலம் மூல மொழிகளையும் மூலச் சொல்வடிவங்களையும் மூல இலக்கணக் கூறுகளையும் காணலாம்.

ஒப்பிலக்கணம் என்ற சொல்லை முதன் முதலாக வான்சிலேகல் என்ற ஜெர்மானிய அறிஞர்தாம் தம்நூலில் பயன்படுத்தினார். 1856இல் கால்டுவெல் தம்முடைய திராவிட மொழி ஒப்பிலக்கண நூலை வெளியிட்டார். திராவிட மொழியியல் பேரறிஞர்கள் பர்ரோவும், எமனோவும் இணைந்து வெளியிட்ட திராவிடச் சொற் பிறப்பியல் அகராதி (A Dravidian Etymological Dictionary) திராவிட மொழி உலகில் ஒப்பற்ற சாதனையாகும். இவ்வகராதி வெளி வந்த பின்னர் நூற்றுக் கணக்கான ஆய்வுக் கட்டுரைகள் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தனிமொழி ஆராய்ச்சியால் புலப்படாத சில கூறுகளையும் இவ்வொப்பாய்வு மூலம் தெளிவாக அறிந்து கொள்ளலாம். ஒப்பியல் முறையால் ஒரு மொழியில் தெளிவும் துணிவும் பெறுகின்றோம்.

நன்றி: தமிழ் மொழிவரலாறு டாக்டர் சு. சக்திவேல் பக்கம் - 55
மணிவாசகர் பதிப்பகம் சென்னை - 1984

இலக்கிய உருவாக்கம்

செ. வை. சண்முகம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மொழியியல் துறைப் பேராசிரியராகப் பணியாற்றுகிறார். கொழும்பு நகரில் இந்த ஆண்டு மே மாதம் நடைபெற்ற மொழியியல் மாநாட்டில் கலந்து கொண்ட ஆய்வாளர்களில் இவரும் ஒருவர். அவருடைய ஆய்வு நூல்களில் 'மொழி வளர்ச்சியும், மொழியுணர்வும் (சங்ககாலம்)' சிறந்ததொன்று. அந்நூல் சங்ககால மொழி - வளர்ச்சியின் நிலைகளான எழுத்தாக்கம், இலக்கிய உருவாக்கம் தொகையாக்கம் (Anthologisation) இலக்கண உருவாக்கம் ஆகியவற்றை சமூக பண்பாட்டு அரசியல் சூழ்நிலைகளின் பின்னணியில் மொழிச் சமுதாயவியல் (Socio - Linquistics) நோக்கில் ஆராய்கிறது.

செ. வை. சண்முகம் அவர்களை அறிமுகம் செய்வதையும் தமிழில் வளர்ந்து வரும் புதிய ஆய்வுகளை 'பண்பாடு' வாசகர்களுக்கு தெரிவிப்பதையும் நோக்காக் கொண்டு இந்நூலில் இடம்பெற்றுள்ள 'இலக்கிய உருவாக்கம்' என்னும் கட்டுரையை மறுபிரசுரம் செய்துள்ளோம்.

மொழி வளர்ச்சியில் எழுத்தாக்கத்துக்கு அடுத்த கட்டம் இலக்கிய உருவாக்கம் (Creation of literature அல்லது Literary formation). இங்கு இலக்கியம் என்பது பரந்த பொருளில் கையாளப்படுகிறது. அதாவது ஒரு மொழியில் எழுதப்பட்ட இலக்கியம் என்று சிறப்பித்து அழைக்கப்படும் கலை இலக்கியத்தையும், பிற அறிவுத்துறை நூல்களான அறிவியல் இலக்கியத்தையும் உள்ளடக்கியதாகக் கொள்ளப்பட்டுள்ளது. அப்பொழுதுதான் இலக்கிய வளர்ச்சி மூலம் மொழி வளர்ச்சியையும் சமூக வளர்ச்சியையும் அறிந்து கொள்ள முடியும். இதனால்தான் இலக்கிய வரலாறு (History of literature) என்ற துறையோடு இலக்கியத்தின் வழி வரலாறு (Literary history) என்ற புதியதுறையும் கிளைத்துள்ளது. தமிழில் சிவத்தம்பி (1986) இந்த முயற்சியில் ஒரு நூல் எழுதியுள்ளார். இதன்படி ஒரு மொழியில் ஒரு காலகட்டத்தில் எழுந்த அனைத்து நூல்களின் மூலமே அந்த மொழிச் சமூகத்தின் அறிவு வளர்ச்சியையும் மொழிவளர்ச்சியையும் அறிந்துகொள்ள முடியும் என்ற கருத்து வலியுறுத்தப் படுகிறது (கா. சிவத்தம்பி, 1986: 93).

இங்கு இன்னொரு உண்மையையும் அதன் விளைவையும் சுட்டிக் காட்ட வேண்டும். எழுத்தாக்கம் ஏற்பட்ட மொழிச் சமூகத்தில் இலக்கியம் என்றால் எழுதப் பட்ட இலக்கியம் என்ற கருத்துணர்வு இருக்கும். ஆனால் அந்தச் சமூகத்திலும் எழுத்தறிவற்ற மக்களிடையே வாய்மொழிப்பாடல்கள், விடுகதைகள், பழமொழிகள் போன்ற வாய்மொழி இலக்கியங்கள் பரம்பரை பரம்பரையாக இருந்து வரும். எழுத்தாக்கம் ஏற்படாதற்கு முன்பு வாய்மொழி இலக்கியம் இன்னும் பரவலாக இருந்துவந்திருக்கும். இதனால் எழுத்து இலக்கியம் முதலில் தோன்றும் போது அதில் வாய்மொழி இலக்கியத்தின் பண்புகள் நிறைய படிந்திருப்பதைக் காணலாம். எழுத்திலக்கியம் வளர்ந்த பிறகு கூடச் சில நல்ல கவிஞர்கள் வாய்மொழி இலக்கியத்தை ஒட்டிப் புதிய இலக்கிய வகையையும், யாப்பையும் ஒவ்வொரு

காலத்திலும் பின்பற்றுவது உண்டு. இடைக்காலத்தில் மாணிக்கவாசகர் கோத்தும்பி, பொற்சுண்ணம், பாவைப் பாடல்கள், கும்மி போன்றவற்றுக்கும், இக்காலத்தில் சுப்பிரமணிய பாரதியார் குடுகுடுப்பைக்காரன் பாட்டு, காவடிச் சிந்து போன்றவற்றுக்கும் நாடோடிப் பாடல்களிருந்து உருவங்களை எடுத்துக் கொண்டு அவரவர்கள் விரும்பிய உள்ளடக்கத்தில் பயன்படுத்தியுள்ளார்கள். எனவே, இலக்கிய உருவாக்கத்தில் வாய்மொழி இலக்கியத்தின் பங்களிப்பையும் எழுத்து இலக்கியத்தின் தனித்தன்மையை அறிந்து கொள்வது அவசியம். இந்த உண்மை தமிழைப் பொறுத்தவரையில் மேலை நாட்டுக் கல்வியின் தாக்கத்தால் ஏற்பட்டது என்பதும் குறிப்பிடத் தகுந்தது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் மேலை நாட்டு அறிஞர்கள் எழுத்து இலக்கியத்துக்கு அடிவேராக அந்த மொழியில் உள்ள வாய்மொழி இலக்கியங்கள் அமைந்திருந்தன என்பதைக் களஆய்வு மூலம் கண்டார்கள். இதனால் மிகப்பழைய இலக்கிய மொழி எனப்படும் கிரேக்க மொழி இலக்கியத்துக்கும் இது பொருந்தும் என்பதை நிரூபித்தார்கள். சாட்விக் (Chadwick) என்ற மேலை நாட்டு அறிஞர் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் கிரேக்க காப்பியங்களையும் செர்மானியக் காப்பியங்களையும் ஒப்பியல் நோக்கில் ஆராய்ந்து அவை வாய்மொழி இலக்கியங்களாகக் தோன்றின என்று கண்ட முடிவை மில்மன் பாரி (Milman Parry) என்பார் ஹோமரது காவியங்களுக்கும் சித்தாந்தா (Siddhanta) வடமொழி காப்பியங்களுக்கும் பொருத்திப் பார்த்து உறுதிப்படுத்தினார்கள். இவைகளின் தாக்கமே சங்க இலக்கியங்களும் வாய்மொழிப் பாடல்களிலிருந்து உருவாகியிருக்கலாம் என்ற கருத்து தோன்றுவதற்குக் காரணம். இதில் கைலாசபதியின் (1986) பங்களிப்பு பெரியது. எனவே, தமிழில் இலக்கிய உருவாக்கம் எப்படி நடைபெற்றது என்பதைத் தெரிந்து கொள்ள i) சங்க கால இலக்கியங்கள் எவை அந்த இலக்கியம் உருவாகிய விதம் பற்றிய கருத்துகள்; அவைகளின் வன்மை, வாய்மொழிப் பாடலும் சங்க இலக்கியமும், இலக்கியப் புலவர்கள் யார் - எவர்? இலக்கியம் யாருக்காக? இலக்கியத்தின் பொருள் என்ன? இலக்கியப் படைப்பாளிகளும் சமூகமும் என்ற தலைப்புக்களில் விளக்குவோம்.

1. தமிழின் முதல் இலக்கியங்கள்

சங்க இலக்கியம் என்று அழைக்கப்படுபவையே தமிழின் முதல் இலக்கியம் என்பதில் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால், சங்க இலக்கியம் என்பதில் என்னென்ன நூல்கள் அடங்கும் என்ற கருத்து வேறுபாடு உண்டு. இங்கும் இன்றைய பெரும்பாலான தமிழறிஞர்கள் ஒத்துக்கொள்கிற எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய இரண்டிலும் கலித்தொகை பரிபாடல், திருமுருகாற்றுப்படை ஆகியவற்றை ஒதுக்கிவிட்டு ஏனையவைகளே முதல் இலக்கியமாக எடுத்துக்கொள்ளப் படுகின்றன. இவை கலை இலக்கியமாகும். அறிவியல் இலக்கியம் என்று கூறத்தகுந்த நூல் எதுவும் கிடைக்கா விட்டாலும் அது பற்றிக் கலை இலக்கியங்களில் காணப் படும் குறிப்புகள் மூலம் மொழி வளர்ச்சி பற்றிப் பின்னர் விளக்கப்படும்.

2. இலக்கிய உருவாக்கம்

இந்த நூற்றாண்டின் இடைப்பகுதி வரை சங்க இலக்கியம் புலவர்களால் எழுதப்பட்ட இலக்கியம் என்ற கருத்தே நிலவி வந்தது. 1986 - இல் கைலாசபதி சங்க இலக்கியங்கள் வாய்மொழிப் பாடல்களாக உருவானவை என்று நிரூபித்தார். ஆயினும் அவரே சங்க இலக்கியம் வாய்மொழிப் பாடல் மரபில் உருவானவை என்று குறிப்பாகச் சொல்லிச் சென்றுள்ளார் என்பது பின்னால் விளக்கப்படும். ஹார்ட் (1975) மீனாட்சிசுந்தரன் (1961) ஆகியோர்களும் வாய்மொழிப் பாடல்கள் அல்ல;வாய்மொழிப்பாடல்களின் மரபிலும்

எழுத்து மரபிலும் உண்டானவை என்று கருதுகிறார்கள். எனவே, தமிழின் 'முதல் இலக்கியம் சங்க இலக்கியம் உருவாகியது பற்றிக் கீழ்காணும் மூன்று கருத்துக்கள் காணப்படுகின்றன: i) எழுதப்பட்டவை, ii) வாய்மொழிப்பாடல்கள், iii) வாய் மொழிப்பாடல் மரபில் எழுதப்பட்டவை. இவற்றில் முதலாவது கருத்து ஓரளவு வலுவிழந்து வருகிறது. என்றே சொல்ல வேண்டும். இரண்டாவது கருத்து பரவலாக இருக்கிற அளவுக்கு மூன்றாவது கருத்து பரவலாக இல்லாததால் அந்தநோக்கில் நிறைய ஆதாரங்கள் காட்டப்படவில்லை.

2.1. எழுதப்பட்டது

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான களவழி பற்றிய குறிப்புரை அந்த நூல் 'வாய்மொழியாக'ப் பாடிய தாகக் காணப்பட்டதை 'எழுதியதாக;ப் பாடப்பட்டது என்று மாற்றப்பட்டதிலி ருந்து சங்க இலக்கியம் 'எழுத்து இயக் கியம்' என்ற கருத்தைப் பிரதிபலிப்பதாக கதிர்மகாதேவன் (1975:229) சுட்டிக் காட்டியுள்ளார்.

> சேரமான் கணைக்கால் இரும்பொறை சோழன் செங்கணானோடு திருப் புறத்துப் பொருது பற்றுக் கோட்பட் டுக் குடவாயிற் கோட்டத்துச் சிறை யில் கிடந்த தண்ணீர் தா என்று பெறாது பெயர்த்துப் பெற்றுக் கைக் கொண்டிருந்தது உண்ணான் சொல்லித் 'துஞ்சியபாட்டு.

என்பது பழைய குறிப்புரை (புறம் 174). இடைக்காலத்தில் இலக்கியம் எழு தப்பட்டது என்ற கருத்து பிறந்ததும் 'சொல்லித் துஞ்சியபாட்டு' என்பதை 'எழுதி விடுத்தது' என்று மாற்றிவிட்டார் கள். இதற்குக் காரணம் இடைக்காலத் தில் சங்கப்பாக்களைப் புலவர்கள் அப் போதைக்கு அப்போது எழுதிய பாடல் கள் என்று தவறாக எண்ணியதே ஆகும்.

> அப்புலவர்கள் எழுதிய செய்யுட்க ளையே சங்கச் செய்யுட்களாகக் கொண்டு அச்செய்யுட்கள் அடங்கிய நூல்கள்

என்று வித்தியானந்தன் (1954:18) வாச கமும் எழுத்து இலக்கியம் என்பதைக் குறிப்பாகக் கொள்ளலாம் என்று கைலாச பதி போன்றோர் கருதுகிறார்கள்.

மேலே குறிப்பிட்டபடி கைலாசபதி (1968) ஆய்வுக்குப் பிறகு தமிழ் உலகில் சங்க இலக்கியம் வாய்மொழியாகப் பாடப்பட்டவை என்ற கருத்து பரவலாக ஒத்துக்கொள்ளப்பட்டுள்ளது. (உ.ம் வரத ராசன் 1972:28; தமிழண்ணல், 1980: 114: 1984:66)

2.2 வாய்மொழிப் பாடல்கள்

கைலாசபதி (1968) சங்க இலக்கியத் தில் அடிக்கருத்துக்கள் (Themes), திணைக் கூறுகள் (Situations), தொடர்கள், அடி கள் பலபாடல்களில் திரும்பத் திரும்ப வந்துள்ளதையும்; கிரேக்க கெல்டிக் நாட்டு வீரயுகப் பாடல்களை ஒத்துள்ளதையும்; கிரேக்க நாட்டுப் புலவர்களைப் போலச் சங்கப் புவவர்கள் அரசவைக் கவிஞர்க ளாக இருந்ததையும் விரிவாக எடுத்துக் காட்டியுள்ளார். மேலும், அவர் அந்தக் காலத்தில் ஏற்பட்ட சமூக வளர்ச்சியையும் விளக்கியுள்ளார். சங்க இலக்கியம் வாய் மொழிப்பாடல் என்பதை விளக்கித் தமி ழில் சில நூல்கள் வந்துள்ளன. (உ.ம். கதிர் மகாதேவன், 1975).

i) தொடர்கள் திரும்ப வருதல்

முல்லை சான்ற கற்பு - சிறுபாண். 30; நற். 142.

பெருங்கல் நாடன் - குறுந். 389.3;நற். 156 - 3, 2344 259 - 3.

சீறியாழ் செவ்வழிப் பண்ணி - புறம். 144 - 2, 146 - 3, 147 - 2.

ஆசாகு எந்தை யாண்டுளன் கொல்லோ - புறம். 235 - 16, 307 -1. குறுந். 176 - 5, 325 - 4.

படலைக் கண்ணிப் பரேர் எறுழ்த் திணிதோள், முடலையாக்கை முழு வலி மாக்கள் - பெரும். 60 - 1, நெடு. 31 - 2.

ii) பகுதி மட்டும் திரும்ப வருதல்

இங்கு ஒரு சொல், தொடர் என்ற முறையில் ஒற்றுமைப்பட்டு ஏனையவை மாறிவரும்.

வாணுதல் விறலி - புறம். 105 - 2
வாணுதல் அரிவை - ஐங். 40 - 8
தண்ணுதல் விறலி - புறம். 32 - 4

முல்லை சான்ற கற்பு - நற். 142
முல்லை சான்ற முல்லை - சிறுபா. 167

முல்லை சான்ற புரவு - மதுரை. 285

கடும்பகட்டு யானை நெடுந்தேர்க் குட்டுவன் - நற். 395 - 4

கடும்பகட்டு யானை நெடுமானஞ்சி - நற். 381 - 7

கூற்றத்தன்ன மாற்றரு மொய்ப்பு - முருகு. 81

கூற்றத்தன்ன மாற்றரு முன்பு - புறம். 362 - 7

அரவு வெகுண்டன்ன தேறல் - புறம். 376 - 14

பாம்பு வெகுண்டன்ன தேறல் - சிறுபா. 237

மேலும், சிலபாடல்களில் துவக்கம், நடுப்பகுதி, கடைப்பகுதி ஆகிய வற்றிலும் ஒற்றுமை காணப்படுகிறது.

மேலும், அவர் சங்கப்பாடல்களிடையே பொதுப் பண்புகள் அதிகமாக இருப்பதால் ஒவ்வொரு புலவருக்கும் உரிய தனிப்பண்பை, நடைச்சிறப்பைக் கண்டறிய முடியவில்லை; எல்லாம் ஒரே பட்டறையிலிருந்து வெளிவந்தவை போலக் காணப்படுகின்றன என்று- பொதுமையாகவும் குறிப்பிட்டுள்ளார் (ப.185). இதுவும் 'வாய்மொழிப்பாடல்கள்' என்பதை உறுதி செய்கிறது. இதை இன்னும் வலிவு படுத்துவதற்காக

1) புலவர்கள் வாயால் பாடுவது பற்றிய குறிப்புக்களையும்

2) வாய்மொழியாகப் பாடிய பாடல்களை, வீரர்களும் அரசர்களும் கேட்டார்கள் என்பது பற்றிய குறிப்புக்களையும்

3) கல்வியும் பாட்டும் வாய்மொழியாக இருந்தது பற்றிய குறிப்புக்களையும், எடுத்துக்காட்டியுள்ளார்:

செய்யாநாவிற் கிளத்தல்
எய்யாதாகின்று எம்சிறு செந்நா - புறம். 148 - 6,7
வையக வரைப்பின் தமிழகம் கேட்ப

பொய்யாச் செந்நா நெளிய ஏத்தி
பாடுவ என்ப பரிசிலர் புறம் - 168
செந்நாப் புலவர். புறம் 107 - 2

என்ற அடிகள் புலவர்கள் வாய்மொழியாகப் பாடி வந்ததைப் புலப்படுத்துகின்றன. அப்படியே வீரர்களின் புகழ் புலவர்களின் வாயில் உள்ளன என்பதை

சேண்விளங்கு நல்லிசை நிறீஇ
நாவில் புலவர் வாயுளானே
புறம். 280 - 10, 11.

என்று கூறுவதன் மூலம் வாய் வழியாக வீரர்களின் புகழ் பாடப்பட்டது என்பது விளங்கும். அரசவையிலும், வாய்மொழியாகப் பாடப்பட்டன என்பதை 'நல்லோர் குழீ இயநாநவில் அவையத்து வல்லார்' என்ற மலைபடுகடாம் அடிகளும் (77 - 8) காட்டுகின்றன. சங்க இலக்கியங்களில் பாடல்கள் பற்றிக் குறிப்பிடும்போது எழுத்துமொழி குறிப்பிடவில்லை (ப.94). எனவே பெரும்பான்மையும், கல்வியும், பாடல்களும் வாய்மொழியாகவே இருந்திருக்க வேண்டும் என்றும் கருத வேண்டியிருக்கிறது (ப. 95).

எழுத்து இலக்கிய மரபு வீரயுகத்தின் கடைசியில் ஏற்பட்டிருக்கவேண்டும். புத்த, சமணதுறவிகளின் செல்வாக்காலேயே பள்ளிகள் தமிழகமெங்கும் ஏற்பட்டிருக்க

வேண்டும் (ப.133). வீரயுக காலத்தில் எழுத்து மொழி மிகவும் குறைவாக; அதுவும் இயற்பெயர் (Froper names) களையும், சிறுசிறு தொடர்களையும் குறிக்கப் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்பார் (ப.236) கைலாசபதி. எனவே, பொதுவாகச் சங்கப் புலவர்கள் வாய்மொழிப்புலவர்கள் என்றும் சங்கப் பாடல்கள் வாய்மொழிப் பாடல்கள் என்றும் அவர் கருதுகிறார் (ப.137)[2] இந்தக் கருத்து பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டாலும், (Zvelebil 1974. 29, சிவத்தம்பி' 1981) சங்க இலக்கியங்கள் வாய்மொழிப் பாடல்கள் என்று முழுவதுமாக ஏற்றுக் கொள்ளமுடியாது என்று சில காரணங்களை (ஹார்ட் (1975: 152–21) செயராமன் (1975) மீனாட்சி சுந்தரனார் (1981) போன்றவர்கள் எடுத்துக்காட்டியுள்ளார்கள்.

2. 3. வாய்மொழி மரபில் தோன்றியவை

பொதுவாக வாய்மொழிப் பாடல்கள், இயற்றிய ஆசிரியர் பெயர்கள் தெரியாதவை. ஆனால் 1) சங்க இலக்கியப் பாடல்களை இயற்றிய புலவர்களின் பெயர்கள் காணப்படுகின்றன. சங்கப் புலவர்கள் 473 பேர் மொத்தம் 2381 பாடல்களைப் பாடியுள்ளார்கள். 2) பாணர்கள் பாடல்களாக உள்ளவைகளில் பாணர் அல்லாத புலவர் பெயர்கள் காணப்படுகின்றன. உதாரணமாகப் புறம். 60-ஆம் பாடலில் விறலியைக் குறிப்பதால் பாணன் பாடுவதாகக் கொள்ளலாம். ஆனால், இந்தப் பாடல் உறையூர் மருத்துவன் தாமோதரனார் பாடியதாக பிற்குறிப்பு கூறுகிறது. எனவே, பாணர் மரபை ஒட்டிப் புலவர் பாடியதாக இது கருதப்படவேண்டும் என்பார் ஹார்ட் (1975:148). அப்படியே ஔவையார் பாடிய பாடல்களிலும் (புறம். 390,392) கோவூர் கிழார் பாடல்களிலும் (புறம் 373,382,400) இசைக் கலைஞர் போல் பாடப்பட்டுள்ளதையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

கிரேக்க மொழியிலும் பிற மொழிகளிலும் உள்ளது போல வாய்மொழி இலக்கியத்தில் எந்தப் பாக்களிலும் பாணர் மரபை ஒட்டி சொற்களோ, சொற்றொடர்களோ, அடிகளோ திரும்பத்திரும்ப வருவது அக்காலச் செய்யுள்களுக்கு உயிர் ஊட்டுவதாம். கருத்தாழமான செய்யுட்களைப் பாட வரும்போது இங்கே கூறியபடி பெரும் பான்மையும் எளிமையாக இருந்தால் தான் அருமையான கருத்தாழத்தை இனிதே அனுபவிக்க முடியும். இல்லையானால் பாடல் முழுதும் அல்லவா அறுவையாகிவிடும்.

என்று மீனாட்சி சுந்தரனார் (1981:50) சொற்களும் சொற்றொடர்களும் திரும்பத் திரும்ப வருவது பாணர் மரபை ஒட்டியது என்று ஒத்துக்கொண்டு, அது புதிய இலக்கிய உத்தியை உள்ளடக்கியது என்று வெளிப்படுத்தியுள்ளார்.

செயராமன் (1975 : 319, தொ.) சங்கப்பாடல்களை வீர நிலைக் காலப் பாடல்களாகக் கொள்ளக் கூடாது என்பதற்கு மேலைநாட்டு வாய்மொழிப் பாடல்களுக்கும் சங்கப் பாடல்களுக்கும் உள்ள வேறுபாடுகளைச் சுட்டிக்காட்டி

> சங்ககால பாடாண்திணைப் பாடல்கள் வீரநிலைக் காலத்துக்கு உரியவை அல்ல; வீரநிலைக் காலத்துக்குப் பிற்பட்ட காலத்துக்கு உரியவை ஆகும் (ப. 331).

> தொல்காப்பியர் காலத்திலும் பின் வந்த சங்க காலத்திலும் தலைவனைப் புகழும் பாடாண் பாடல்களே சிறப்பிடம் பெற்றன. எனவே, சங்க காலத்தைப் 'பாடாண் காலம்' என்றும் வீரநிலைக் காலத்தை அடுத்த காலம் என்றும் கூறுவார் (ப. 332) செயராமன்.

சங்க இலக்கியப் பாடல்களுக்கும் பிறமொழி வீர இலக்கியப் பாடல்களுக்கும் வித்தியாசம் இருப்பது உண்மையே.

ஆனாலும் சங்க காலத்தைப் பாடாண் காலம் என்றும் கொடைப்பண்பு மிகுந்த காலம் என்றும் கூறுவது பொருந்தாது. பாடாணுக்கும் கொடைக்கும் காரணம் யாது? எதனால் கொடை சாத்தியம் ஆகிறது? என்ற கேள்விகள் எழுகின்றன. அதனால் பின் வீரயுக காலம் என்று கொள்வதே பொருந்தும். சங்க இலக்கியப் புலவர்கள் தனித்தன்மையையும் பார்க்க முடிகிறது. வாய்மொழிப் பாடல்கள் என்று கருதுகிற சுவலபில் (Zvelebil. 1974:43) கபிலர், நக்கீரர், பரணர் போன்ற சிலர் தனித்தன்மை உடையவர் களாக உள்ளார்கள் என்பதைக் குறிப்பிட்டுள்ளார். கபிலர், பரணர் ஆகிய இருவர் பாடல்களை ஒப்பீட்டு நடையியல் நோக்கில் ஆராய்ந்து இருவருக்கும் இடையே ஒற்றுமை (ஒலிக்கோலம், திட்டப்பாங்குகள்), வேற்றுமைகளை (கபிலர்-இயற்கை கவிஞர்; பரணர்-வரலாற்றுக் கவிஞர்; கபிலர் மனித உணர்ச்சிகளைப் பாடியுள்ளார்; பரணர் மனிதர்களைப் பாடியுள்ளார்; பரணரிடம் இரட்டைச் சொல் பயன்படுத்து முறை காணப்படுகிறது கபிலரிடம் அந்தமுறை காணப்படவில்லை) நீதிவாணன் (1979:75-100) விரிவாக குறிப்பிட்டுள் ளார். எனவே, பாடல்களுக்குள் ஆசிரியரை ஒட்டி நடைவேறுபாடு காணப்படுவது சங்க இலக்கியத்தை முழுவதும் வாய் மொழிப்பாடல்களாகக் கொள்ளமுடியாது என்பதை வலியுறுத்தும். எனவே, சங்க இலக்கியத்தை வாய்மொழிப்பாடல் களாக முழுவதும் ஒத்துக்கொள்ள முடியாது என்ற கருத்தை ஏற்றுக் கொண்டு இலக்கியம் எழுந்ததற்கான சமூகச் சூழல், எழுத்துமொழிப் பயன்பாடு ஆகியவற் றைப் பார்ப்போம்.

3.2 சமூகச் சூழல்

கைலாசபதியே (1968) சங்கப் பாடல்கள் எழுந்த சூழ்நிலையைக் குறிப் பிடும்போது அரசு நிலையிலும் கலை ஞர்கள் நிலையிலும் ஏற்பட்ட மாற்றங் களைச் சுட்டிக்காட்டி அவைகளின் விளைவு சங்கப்பாடல்கள் என்று கூறியுள் ளது அறியத்தகுந்தது.

i) பெரும்பான்மையான வீரயுகப் பாடல்கள் பழைய இனக்குழு வாழ்க்கை முறை அழிந்து சிற்றரசு - மூவேந்தர் ஆகியவர்கள் தோன்றிக் கொண்டிருந்த காலம் என்றும், புலவர்கள் அந்த இடைப் பட்ட காலத்தையே பெரும்பாலும் பாடி யுள்ளார்கள் என்றும் அவர் கூறியுள்ளார். (ப. 73 - 79)[3].

ii) சங்க காலத்தில் பலவகையான கலைஞர்கள் நாடோடிகளாகத் திரிந்து' மக்களை மகிழ்வித்து வாழ்க்கை நடத்தி வந்த செய்தி இலக்கியத்தில் உள்ளது. கைலாசபதி (1968:94) சங்ககாலத்தில் பாணர், கூத்தர், விறலியர், புலவர், அகவுநர் போன்றோர் இருந்தனர் என்றும், அவர்கள் வாய்மொழிப் பாடல்களில் வல்லவர்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார். அதே சமயத்தில் அவர்களுக்குள்ளே இருக்கும் வித்தியாசத்தையும் புலவர்களின் சிறப்புத் தன்மையையும் சுட்டிக் காட்டி விளக்கியுள்ளார். (ப. 115 - 123). இது ஓரளவு சமூகநிலையில் புலவர்களின் தோற்றமாகக் கொள்ளலாம்.

பாணர்களும், பொருநர்களும் தனிக் கலைஞர்கள்-அதாவது, தனியாக இருந்து தொழில் செய்வோர் (Non-Choral bards) கூத்தர், விறலியர் போன்றவர்கள் குழுக் கலைஞர்கள். இவர்கள் இசைக்கருவிகளை இசைத்துப்பாடியும் ஆடியும் மகிழ்விப் பவர்கள். அகவுநர்கள் பாட்டுக்களை ஓசை இனிமையுடன் பாடுபவர்கள். பெரும் பாலும் ஆசிரியப்பாவில் பாடுவதில் வல்ல வர்கள்; புலவர்களே கவிஞர்கள்.

பாணர், கூத்தர், விறலியர், பொருநர் வீரயுகத்தையும் புலவர்கள் வீரயுகத் திற்குப் பின்னரும் சிறப்பு பெற்றவர்கள் (ப. 121)[4]. பொதுவாக வீரயுகத்தைச் சார்ந்த கலைஞர்கள் அரசவையிலும், போர்க்களத்திலும் அரசர்களுக்கும் வீரர் களுக்கும் மகிழ்ச்சியூட்டுவதையே கடமை யாகக் கொண்டவர்கள். செயல்வீரமே சிறந்ததாகப் போற்றப்பட்டுக் கற்பனை யான சிந்தனை மேம்பாடு ஒதுக்கப்பட்ட காலத்தைச் சேர்ந்தவர்கள். புலவர்கள்

பின்வீரயுக காலத்தில் சமய உணர்வோடு சிந்தனை மேம்பாட்டை (தத்துவ விசாரணை) சிறப்பாகக் கருதினார்கள். இந்தக் காலத்தில்தான் வடமொழிக் கலப்பு ஏற்பட்டது. பிறகு பிராமணர்களும், புலவர்களுமாக இடம் பெற்றார்கள். இவர்கள் பொருநர், கூத்தர் போன்ற கலைஞர்களின் சில மரபினைப் பின்பற்றினார்கள் என்பது அவருடைய கருத்தின் சாரம். அதாவது புலவர்கள் பாணர்களாக, கூத்தர்களாகச் செய்யுள்களைப் பாடி மகிழ்வித்திருக்க வேண்டும். எனவே கைலாசபதியும் இலக்கியச் செய்யுள்கள் புலவர்களால் இயற்றப்பட்டவை என்ற கருத்துடையவர் - என்று கூறலாம். ஆனால், சமூகத்தில் புலவர்கள் சிறப்பு பெற்றது, பவுத்த தத்துவங்கள் பரவிய பிறகும் வணிக வர்த்தகம் மேனிலை அடைந்ததும் ஆகிய காலத்தில் என்று கருதுகிறார் (ப.122).[5] இந்த காலகட்டத்தில் அறஇலக்கியம் இயற்றப்பட்டது என்பதும் தொகையாக்கம் செய்யப்பட்டது என்பதும்(ப.123) சர்ச்சைக்கு உரியது. எப்படியானாலும் சங்க இலக்கியச் செய்யுட்கள் வாய்மொழிப் பாடல்கள் அல்ல என்பதைக் கைலாசபதி உணர்ந்திருந்தார் என்பதே முக்கியம்.

தமிழண்ணல் (1980:114) கூறியபடி 'சங்கப் பாடல்கள் வாய்மொழி இலக்கிய மரபிலிருந்து தோன்றி வளர்ந்து வரிவடிவம் பெற்றவை' என்பதே பொருத்தமாக இருக்கும். அப்படியானால் சங்ககாலத்தில் எழுத்துமொழிப் பயன்பாடு குறித்துக் குறிப்புக்கள் இருக்கிறதா என்று தேடிப் பார்க்க வேண்டும். அப்படிப்பட்ட குறிப்புகளே எழுத்துமொழி - கலை இலக்கியத்துக்கு மட்டும் அல்லாமல் பிற துறையிலும் பயன்பட்டன என்பதை நிரூபித்துக் கலை இலக்கியமும் எழுத்து வடிவம் பெற்று இருக்கும் என்பதை உறுதிபடுத்தும். எனவே, எழுத்து மொழியின் விரிவான பயன்பாடு எழுத்துமொழி இலக்கிய உருவாக்கத்துக்குப் பயன்பட்டதைத் தெளிவு படுத்தும்.

3. எழுத்துமொழிப் பயன்பாடு

பலதுறை நூல்கள் இருப்பதே எழுத்து மொழிப் பயன்பாட்டின் விரிவைக் காட்டும். முன் இயலில் எழுத்துமொழி கல்வெட்டுக்களாகவும், நடுகற்களாகவும், பானைஎழுத்துக்களாகவும், ஓலை .எழுத்துக்களாகவும் பயன்பட்டன என்று சுட்டிக் காட்டப்பட்டவையும் இங்கு நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

சங்க இலக்கியங்களில் பலதுறை பற்றிய நூல்கள் இருந்தன என்று பொதுவாகக் குறிப்புகள் இருக்கின்றன. அவை துறை நூல்கள் என்று தலைப்பு இட்டு வழங்கப்படவில்லை: பிற்காலத்திலேயே அவை தனித்தனிப் பெயர்களைப் பெற்றன.

3.1. சிற்பநூல்

சிற்பம் என்பது கட்டிடக் கலையைக் குறிப்பது: அதாவது கட்டிடத்தைக் கட்டும் முறையையும், வடிவமைப்பு முறையையும் விளக்குவது.

அரண்மனை கட்டுவதற்கான மனை முகூர்த்தம் செய்யும் போது சிற்பநூலே வழிகாட்டியாகக் கொள்ளப்பட்டது.

இருகோல் குறிநிலை வழுக்காது
    குடக்கு ஏற்பு
ஒருதிறம் சாரா அரைநாள் அமையத்து
நூலறி புலவர் நுண்ணிதிற் கயிறு இட்டு
தேஎங் கொண்டு தெய்வம் நோக்கி
பெரும் பெயர் மன்னர்க்கு ஒப்ப
    மனை வகுத்து

என்ற நெடுநெல்வாடை அடிகள் (74-3) சான்றாகிறது. இங்கு 'நூலறி புலவர்' என்ற தொடரே கவனிக்கத்தகுந்தது. இது கட்டிடக்கலை நூல்.

............செறிந்த
நூல்வழிப் பிழையா நுணங்கு
    நுண் தேர்ச்சி
ஊர்............

என்ற மதுரைக்காஞ்சி அடிகளுக்கு (645-7) 'நூல்வழி பிழையா ஊர்' எனக்கூட்டி 'நூலில் சொன்னபடி சமைந்த ஊர்' என்று நச்சினார்க்கினியர் விளக்கம் எழுதியுள்ளார். எனவே, நகர் அமைப்பினை விளக்கும் நூல் என்று கொள்ளலாம். 'நூலோர் அறிந்த.........மாடம்' என்ற சிலப்பதிகார அடிகளுக்கு (14-97) மயமதம் அறிவராற் புகழ்ச்சியை உடைய மாடம்' என்ற அரும்பத உரையும்; 'மயமதம்' என்ற நூலுண்மை பெறப்படும்' என்ற உ.வே.சா. அடிக்குறிப்பும் அறியத்தகுந்தது. இதை ஊரமைப்பு பற்றிய நூல் என்று கொள்ளலாம்.

3.2. இசைநூல்

சங்க இலக்கியங்களில் இசைக் கருவிகள் இசைக் கலைஞர்கள் பற்றி ஏராளமான குறிப்புகள் காணப்படுகின்றன. (வித்தியானந்தன் 1954: 270-95). அங்குள்ள இரண்டு குறிப்புகளால் இசைநூல் பற்றி அறிந்துகொள்ள முடிகிறது.

கூடு, இன்னிசை, குரல் குரலாக
நூனெறி மரபிற் பண்ணி

என்பது சிறுபாணாற்றுப்படை அடிகள் (229-30). இதற்கு இசைநூல் கூறுகின்ற முறைமையாலே செம்பாலையாக வாசித்து என்று நச்சினார்க்கினியர் உரை எழுதியுள்ளார்.

நல்லிசை நிறுத்த நயவருபனுவல்
தொல்லிசை நிறீஇய உரைநூல்
பாண்மகன்
எண்ணுமுறை நிறுத்த பண்

என்ற அகநானூற்றடிகள் (352:13-15) 'நல்ல இசைகளை வரையறை சுவைமிக்க நூலின் (பனுவல்) எண்ணின் முறைப்படி இயற்றிய பண்' என்ற கருத்தைக் குறிப்பிடுகின்றன.

... ... பேரியாழ்
அமைவரப் பண்ணி அருணெறி
திரியாது

இசைபெறு திருவின் வேத்தவை ஏற்பத்
துறைபல முற்றிய பைதீர் பாணர்

என்ற மலைபடுகடாம் அடிகளில் (37-8) 'அருள் நெறி' என்பதற்கு நச்சினார்க்கினியர் 'நூலில் கூறிய வழி' என்று பொருள் எழுதியுள்ளார்.

3.3. சமையல் நூல்

... ... நுண்பொருட்
பனுவலின் வழாஅப் பல்வேறு அடிசில்

என்பது சிறுபாணாற்றுப்படை அடிகள் (240-1). இங்கும் 'நுண்பொருட் பனுவல்' என்பது பொதுவாகக்குறிப்பிடப் பட்டாலும் 'பனுவலின் வழாஅ அடிசில்' என்ற பின்வரும் தொடரால் சமையல் நூல் என்பது தெளிவாகிறது. இந்த அடிகளுக்கு நச்சினார்க்கினியர் 'கூறிய பொருளை உடைய மடைநூலில் தப்பாத பலவேறு பாட்டை உடைய அடிசில்' என உரை எழுதியுள்ளார். மணிமேகலையில் 'மடைநூற் செய்தி' (2.22) என்ற தொடர் வந்துள்ளதை நோக்கினால் மடைநூல் (சமையல்நூல்) இருந்த உண்மை அறியலாம்.

3.4. குதிரை நூல்

'நூனெறி நுணங்கிய கானவில் புரவி' என்ற அகநானூற்று அடிக்கு (214-8) நூல்கூறும் முறைப்படி நுண்ணிதாக அமைந்த காற்று என்று கூறத்தகுந்த குதிரை என்று பொருள். எனவே, குதிரை நூல் என்ற ஒன்று இருந்திருக்க முடியும் என்பது தெளிவாகிறது.

நூலமைப் பிறப்பின் ... ...
... ... நன்னான்கு
... ... பூட்டி ...

என்ற அகநானூற்று அடிகளும் (400-5,9,11).

நூலோர் புகழ்ந்த மாட்சிய மால்கடல்
வளைகண்டன்ன வாலுளைப் புரவி

என்ற பெரும்பாணாற்றுப்படை அடிகளும் (489-8) குதிரைபற்றி நூல் இருந்ததை

உறுதிப்படுத்துகின்றன. நச்சினார்க்கினியர் பெரும்பாணாற்றுப் படை உரையில் 'குதிரைநூல்' என்ற குறிப்பு தருகிறார். உ.வே சா.வும் (பத்துப்பாட்டு ப.259) 'குதிரையின் இலக்கணங்களைக்கூறும் சாலி சாத்திரம்' என்பது ஒரு நூல் உண்டு என்று தக்கயாகப் பரணி 665 - ஆம் தாழிசை உரையால் அறியப்படுகின்றது' என்று அடிக்குறிப்பு எழுதியுள்ளார்[6].

3.5. அறநூல்

புறநானூற்றில் 'அறம்பாடிற்றே ஆயிழை கணவ' (341-1) என்றும் 'அறம் குறித் தன்று பொருள் ஆகாமையின்' என்றும் வரும் அடிகள் (362.10) வாழ்க்கைக்கு வழி காட்டும் அறநூல்கள் இருந்ததைப் புலப்படுத்தும்.

பொதுவாக ஆசிரியர் மாணவர் என்ற முறையில் நேரடித் தொடர்பு மூலமாக பல அறிவுத்துறைகள் வளர்ந்திருக்க வேண் டும்; பின்னோர்கள் பலருக்கும் பயன் தரும் படியாக - நூலாக எழுதும் மரபு தமிழகத் தில் குறைவு என்று பரவலாகக் கருதப் படும் எண்ணத்துக்கு மாறாகச் சமையல் துறை பற்றிக்கூட நூல்கள் இருந்ததாக இலக்கியம் குறிப்பிடுவது வியப்பாகத் தோன்றுகிறது. ஆனாலும் பலதுறை நூல் கள் இருந்திருக்க வேண்டும்; நூலறிவு சில நிலைகளில் பயன்படுத்தப்பட்டது என்பது இன்னும் இரண்டு வகையால் நிரூபணம் ஆகிறது.

தொல்காப்பியம் இலக்கியவகையில் 'நூல்' என்ற ஒரு வகையைக் குறிப்பிட்ட தோடு (செய்.-75) நூலின் அமைப்பு (செய்-159,165), நூலின் வகை (மரபு 95-9), நூலின் இயல்பு (மரபு 103-4), என்றெல்லாம் விரிவாக விளக்குவது எழுத்து மொழி பலதுறை நூல்கள் எழுதப் பயன்படுத்தப்பட்டன என்பதைப் புலப்படுத்துகின்றன. திருவள்ளுவர் 'நுண் ணிய நூல்பல கற்பினும்' (373) என்றும், 'மதிநுட்பம் நூலோடு உடையார்' (636) என்றும் நூலறிவு பற்றிக் குறிப்பிடுவதோடு வாய்மொழி மூலம் பெறும் அறிவைக் 'கேள்வி' என்றும் நூல் மூலம் படிப்பதைக் 'கல்வி' என்றும் வேறுபடுத்திக் காட்டுவதும் பின்சங்க காலத்தில் எழுத்து இலக்கியம் பரவலாக உபயோகத்தில் இருந்ததைக் காட்டுவதாகவே கொள்ள வேண்டும்.

எனவே சங்க இலக்கியம் நாட்டுப்புறப் பாடல்களின் மரபை ஒட்டி எழுத்து இலக்கியமாக உருவாகியிருக்க வேண்டும் என்பதில் சந்தேகமில்லை.

4. எழுத்து இலக்கியங்களும் வாய்மொழிப் பாடல்களும்

முதலில் இலக்கியம் உருவாகும்போது வாய்மொழிப் பாடல்களின் பண்புகளை நிறைய பெற்றிருக்கும். ஆனாலும் எழுத்து மொழி இலக்கியத்துக்கு எனச் சில தனிப் பண்புகளையும் கொண்டிருக்கும். எனவே தான் வாய்மொழி இலக்கியம் எழுத்து இலக்கியமாக உருப்பெறுவது இலக்கிய உருவாக்கம் என்று தனிப் பெயரிட்டு அழைக்கப்படுகிறது.

வரதராசன் (1972:32) 'ஐங்குறு நூற்றுப் பாடல்களில் இயற்கை வருணனை மிகுந்து விளங்குவது; தலைவன், தலைவி பெயர் குறிப்பிடப்பெறாதது ஆகியவை சங்க இலக்கியங்களில் காணப்படுவதற்கு எழுதா இலக்கியமாகிய நாட்டுப் பாடல் களில் அவ்வளவு ஆழமாக அந்த மரபு வேரூன்றியிருந்ததே காரணம்' என்பார். மேலும் மீனாட்சிசுந்தரன் (1965ஆ) அடி தொடர், கருத்து ஆகியவை மறித்து வருவது நாட்டுப் புறப்பாடல் மரபினை நினைவூட்டுவதாகக் குறிப்பிட்டுள்ளார். தமிழவன் (1974) இலக்கிய வடிவத்தில் எப்படி நாட்டுப் பாடல்களின் பண்புகள் காணப்படுகின்றன? எப்படி இரண்டும் வேறு படுகின்றன? என்பதை ஐங்குறு நூற்றிலிருந்து சில உதாரணங்கள் மூலம் விளக்கியுள்ளார்.

1) ஒரு சொல்லே ஒவ்வொரு பாடலி லும் திரும்ப வருவது. இந்தப் பண்பு நாட்டுப்புற பாடல்களில் ஒரு குறிப்பிட்ட

அடிக்குக் கடைசியிலோ அல்லது பாடலின் கடைசியிலோ வரும். ஆனால், ஐங்குறுநூற்றில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் வரவில்லை.

2) பாடலில் சில அடிகள் திரும்பத் திரும்ப வருவது.

நாடோடிப் பாடல்களில் இரட்டைப்படை எண்ணுள்ள அடிகள் எல்லாம் (2, 4, 6, 8, 10) ஒரே அடி திரும்பி வர, ஐங்குறுநூற்றில் வேட்கைப்பத்தின் முதல் பாடலில் வந்த அடிமீண்டும் ஏழாவது அடியிலும் அடுத்து பதிமூன்றாவது அடியிலும் அதற்கடுத்து பத்தொன்பதாவது அடியிலும் அதாவது ஆறடிக்கு ஒருமுறை திரும்ப வந்துள்ளது. கிழவற்கு உரைத்த பத்தில் இரண்டு அடிக்கு ஒருமுறை ஒரே அடி வந்துள்ளது.

3) திரும்பிவரும் சொல்லோடு வேறு சொல் ஒட்டி ஒரு குறிப்பிட்ட இடத்தில் நின்று முதலடியில் திரும்பி வருவது எல்லா இடத்திலும் மாறாது நிற்கும். இந்தப் பண்பு நாடோடிப் பாடல்களிலும், ஐங்குறுநூறு 'தாய்க்கு உரைத்த பத்து' என்ற தலைப்பில் வரும் பாடல்களிலும் காணப்படுகின்றன. ஆனாலும் நாடோடிப் பாடல்களில் ஒவ்வொரு அடியிலும் திரும்பி வரல் காணப்பட-ஐங்றுகுநூற்றில் 1, 6, 10 ஆகிய அடிகளில் மட்டுமே திரும்பி வரல் காணப்படுகிறது.

4) அந்தாதித் தொடைக்கு நாடோடிப் பாடல்களில் மூலம் இருக்கிறது. எனவே, இம்மாதிரி இலக்கியக் கட்டுப்பாடுகளாலும் எழுத்து இலக்கியப் பண்பு நாடோடி இலக்கியத்தினின்று மாறுபடுவதை இலக்கியமாதல் (Poetised) என்று தமிழவன் (1974:55 தொ) கூறியுள்ளார். இலக்கியமாதலே இலக்கிய உருவாக்கம் என்று இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு உருவம், உள்ளடக்கம் ஆகிய இரண்டிலும் நாட்டுப்புறச் செல்வாக்கு எழுத்து இலக்கியத்திலும் குறிப்பாக-சங்க இலக்கியத்திலும் உண்டு என்றுச் பொதுவாகக் கூறலாம். எனவே, இனி நாட்டுப்புறப் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு எழுத்து இலக்கியம் யாரால், யாருக்காக, எப்படி உருவாக்கப் பட்டது என்று பார்ப்போம்.

5. எழுத்து இலக்கியப் புலவர்கள் யார் - எவர்

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய இரண்டிலும் அடங்கியுள்ள எல்லா நூல்களையும் கிட்டத்தட்ட 473 புலவர்கள் பாடியுள்ளனர். (இந்த விவரமும் இனி பேசப்படும் விவரங்களும் சஞ்சீவி (1974) யிலிருந்து எடுத்தவை). அவர்களில் 30 பெண் பாற் புலவர்கள். அதாவது கிட்டதட்ட 7 சதவீதத்தினரே பெண் புலவர்கள். சங்கப் புலவர்களில் பல தொழில் செய்தவர்கள் (அதாவது ஆசிரியர், தட்டார், பொற்கொல்லர், கொல்லர், அறுவை வணிகர் போன்றவர்கள்) இருந்துள்ளார்கள். புலவர் பெயரால் அறியப்படும் தொழில்கள் என்று பத்தொன்பதைக் குறிப்பிட்டு அவைகளில் வினைத்தொழில் (வினைத்தொழில் கோசிகீரனார் என்று ஒரு புலவர் பெயர்) என்ன என்பது தெரியவில்லை என்பார் சஞ்சீவி. மேலும் அரசபுலவர்கள் என்ற இன்னொரு தனிப் பட்டியலும் அவர் கொடுத்துள்ளார். அரசர் என்பதையும் ஒரு தொழிலாகக் கொள்ளலாம். இவர்களைத் தொழில் முறைப் புலவர்கள் என்று பொதுவாகக் குறிப்பிடலாம். இவர்களை அல்லாமல் வெறும் புலவர்கள் பலர் இருந்திருக்க வேண்டும். இதை

> கறிசோறுண்டு வருந்துதொழில்
> அல்லது
> பிறிதுதொழில் அறியா...........
> செருமிகு சேஎய் நிற்பா டுநர்கை

(இறைச்சிச் சோறு சாப்பிட்டு வருந்தும் செயல் அல்லாமல் வேறு தொழில் எதுவும் செய்யாமல் அரசர்களைப் பாடுவோர்கை) என்ற புறநானூற்று அடிகள் (14-14, 15,19) தெளிவு படுத்துகின்றன. இவர்களே முழுநேரக் கலைஞர்கள். எனவே முன்ன

வர்களைப் பகுதிநேரக் கலைஞர்கள் என்று கூறலாம். இந்த வேறுபாடு முக்கியமானது. ஏனென்றால் முழுநேரக் கலைஞர்களின் சமூக நிலையே இலக்கியத்தின் உள்ளடக்கத்தை ஓரளவுநிர்ணயிக்கும் தன்மை உடையது. இதுபற்றிப்பின் பகுதியில் விளக்கப்படும்.

அடுத்துச்சங்கப் புலவர்களில் கோத்திரத்தால் பெயர் பெற்ற புலவர்களாக 11 புலவர் பெயர்கள் காணப்படுகின்றன. இவர்களை அந்தணர் அல்லது பார்ப்பார் என்று சங்க இலக்கிய வழக்கால் குறிப்பிடலாம். இன்றைய மொழியில் இவர்களை ஆரியர்கள் என்று இனப்பெயரால் குறிப்பிடலாம். இவர்கள் பிறமொழி-குறிப்பாக வடமொழித் தொடர்பு உடையவர்கள். இந்த நோக்கில் பார்க்கும்போது இன்னும் நிறைய புலவர்களை இந்தப் பிரிவில் அடக்க வேண்டும் என்பது புலனாகிறது. உதாரணமாகக் கபிலர் தன்னை 'யானே பரிசிலன், மன்னும் அந்தணன்' என்று (புறம் 200 - 13) கூறியுள்ளதால் அவரும் அந்தப்பிரிவில் அடங்குவார். புலவர்களின் சமயமும் இலக்கிய உருவாக்கத்திற்கு ஏதோ ஒரு வகையில் உதவி செய்திருக்க வேண்டும். சங்க காலத்தில் புறச்சமயம் என்று கருதப்படுகிற பவுத்த, சமணத்தைச் சேர்ந்த புலவர்களும் இருந்திருக்கிறார்கள். எனவே, புறச் சமயத்தைச் சேராத எல்லாப் புலவர்களையும் அகச்சமயத்தினர் என்று கருதலாம். எனவே, சங்கப்புலவர்களில் அந்தணர் குலத்தைச் சேர்ந்தவர்கள் மொத்தம் எத்தனை பேர் என்று காண வேண்டும். கிட்டத்தட்ட 10 சதவிதத்தினர் இந்தக் குலத்தைச் சேர்ந்தவர்கள் என்ற கருத்தும் உண்டு (Hart, 1975: 149). இந்த உண்மை பிறமொழியோடு தொடர்புடையவர்கள் தமிழ் இலக்கிய உருவாக்கத்தில் ஈடுபட்டார்கள் என்பதைப் புலப்படுத்துவதோடு வேறுசில உண்மைகளை அறியவும் (அவர்கள் பயன்படுத்திய மொழியில், கருத்துகளில் பிறமொழிச் செல்வாக்கு எப்படியிருக்கிறது என்பதைப்பிரித்து அறிய) உதவியாக இருக்கும். உருவம், உள்ளடக்கம் ஆகியவை பற்றி அழமாகப்பார்க்கும்போது புலவர்களின் குலம் பற்றிய அறிவும் துணையாக இருக்கும். கிழார் புலவர்களாக பலபேர் காணப்படுகிறார்கள். அவர்களை வேளாளர் குலத்தைச் சார்ந்தவர்களாகக் கருதலாம்.

சமயத்தால் பெயர் பெற்றவர்களாக மூன்று பேர் குறிப்பிடப்பட்டு ஒருவர் பவுத்தர் என்றும், இருவர் சமணர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஆனால், அந்தப் பட்டியலில் இல்லாத சங்க வருணன் (புறம். 360) தேரதரன் (குறுந் 195) சிறு வெண் தேரையார் (புறம்-362) முதலிய சங்கப்புலவர்கள் பெயரினால் புத்த சார்பினராயினும் காதலையும் பாடியுள்ளனர் என்று கந்தசாமி (1975;327) கூறுகிறார். சஞ்சீவி பட்டியலில் காணப்படும் பவுத்த மதத்தைச் சார்ந்த இளம் போதியாரும் காதலைப் பாடியுள்ளார் எனவே, பவுத்தப் புலவர்கள் சங்க இலக்கியத்தில் நான்கு பேர் என்று கொள்ளலாம். சமணப் புலவர்களாகச் சஞ்சீவி குறிப்பிட்ட இரண்டு புலவர்களையே சமணரின் கொடையை விரிவாக ஆராய்ந்த அறவாணனும் (1974;26 தொ) குறிப்பிட்டுள்ளார். எழுத்தாக்கத்தில் அதிகம் ஈடுபட்ட சமணர்கள் ஏன் அதிக அளவில் இலக்கிய உருவாக்கத்தில் பங்கு கொள்ளவில்லை என்று சிந்தித்து விடை காண அவர் முயன்றுள்ளார்.

> சங்கப் பாக்களைத் தொகுத்தவர் தொகுப்பித்தவர் அனைவரும் வைதீக சமயச் சார்பினர் ஆவர். தொகுப்புப் பணியில் பெரும்பங்கு பெற்றவர் என்று கருதப்படும் கடவுள் வாழ்த்துப் பாடிய பெருந்தேவனார் தீவிரவைதிகர் ஆவார். அவர் முகப்பில் பாடிச்சேர்த்த பாடல்களே இதனை உறுதிப்படுத்தும் தலைமைச் சான்று ... ஆதலான் சங்க இலக்கியங்களில் சைனப்புலவர்களின் பாடல்கள் பல இடம் பெறாமல் போனமைக்கும், சைன சமயக் குறிப்புகள் வெளிப்படையாக விரவிக்

கிடைக்காமல் போனமைக்கும் காரணம்; அவ்விலக்கியங்களைத் தொகுத்த வேதசமயத்தார் வேண்டுமென்றே செய்த புறக் கணிப்பே ஆகும்.

என்ற அறவாணனின் (1974:45) வாசகம் சமணப்புலவர்கள் குறைவாக இருப்பதற் கான காரணத்தைத் தெளிவுபடுத்துகிறது. இதுஓரளவு உண்மை; ஆனாலும், இன்னும் ஏதாவது காரணம் இருக்கலாமோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது.

சமணர்களோடு பள்ளிக்கூடங்களும், அற இலக்கியங்களும், இலக்கண நூல்களும் அதிகம் தொடர்புபடுத்தப்படுவது இதற்கு ஆதாரமாகும். பதினெண் கீழ்க் கணக்கு நூல்கள், தொல்காப்பியம் ஆகியவற்றில் சமண சமயச் செல்வாக்கு இருக்கிறது என்று எல்லோரும் ஒத்துக்கொள்கிறார்கள். எனவேதான் சமணர்கள் அக, புறப் பொருளைக் கொண்ட சங்க இலக்கியத்தில் பெரும்பங்கு கொள்ளவில்லை போலும். எழுத்தாக்க காலத்துக்குப் பிறகு களப் பிரர் காலத்தில் சமணர் எழுச்சிபெற்று விளங்கியபோதே அற இலக்கியத்திலும், இலக்கணத்திலும் ஈடுபட்டு உழைத்திருக்க வேண்டும். ஆகவே சங்க இலக்கியத்தில் சமண பௌத்தர்கள் பற்றிய குறைவான குறிப்புகள் கிடைப்பதற்குத் தொகுத்தோ ரும் தொகுப்பித்தோரும் மட்டு மல்லாமல் இலக்கியப்பொருள் காரணமாக அவர்கள் ஈடுபாடுகுறைவானதும் காரணமாக இருக் கலாம் அதாவது இலக்கிய உருவாக்கத் தில் அகச்சமயத்தினர் பணி அதிகம்; புறச் சமயத்தினர் பணி குறைவு.

மேலும், வைதிக சமயத்தவர்களுக் கும் புத்த, சமண சமயத்தவர்களுக்கும் இடையே போராட்டம் நடைபெற்று வைதிக சமயத்தார் வெற்றி பெற்றிருக்க வேண்டும் என்பதற்கும் புறநானூற்றில் குறிப்பு இருப்பதைக் குருசாமி (1974:92) எடுத்துக் காட்டியுள்ளார்.

.. .. ஒரு முதுநூல்
இகல் கண்டோர் மிகல்சாய்மார்
மெய்யன்ன பொய்யுணர்ந்து
பொய்ஒ ராது மெய்கொளீஇ
மூவேழ்துறையும் முட்டின்றுபோகி
உரைசால்மருகின் உரவோர் மருக

என்ற புறநானூற்று (166. 5-9) அடிகள் மூலம் வேத நெறிக்கு மாறுபட்டவர்களின் வலிமையைக் குறைப்பதற்கு அவரது மெய் போன்ற பொய்யை அறிந்துகொண்டு அந்தப் பொய்யை நீக்க மெய்யை எடுத்துச் சொல்லி இருபத்தொரு வேள்வியையும் குறையில்லாமல் செய்து முடித்த புகழ் உடையவர் என்று கூறும்போது, மதக் காழ்ப்பும் (மெய்யன்ன பொய்), மதப் போராட்டமும் (ஒரு முதுநூல் இகல் கண்டோர் மிகல்சாய்மார்) அரசு ஆதரவிலே (சாய்மார் ... மெய்கொளீஇ) நடைபெற்றதும், அரசர் வேத நெறியை ஆதரித்ததும் வெளிப்படுகின்றன. அதனாலும் சமணர் இலக்கிய உலகிலிருந்து ஒதுங்கியிருக்கலாம் என்று அனுமானிக்க லாம்.

சங்கப் புலவர்களை இன்னொரு கோணத்திலும் பார்க்க வேண்டும், அதுதான் வட்டார அடிப்படை. தொண்டை நாட்டுப் புலவர்களாக ஒன்பது பேரும், சேரநாட்டுப் புலவர்களாக 24 பேரும், சோழநாட்டுப் புலவர்களாக 55 பேரும், பாண்டி நாட்டுப் புலவர்களாக 90 பேரும் இருந்ததாக ஆராய்ச்சி அட்ட வணை (சஞ்சீவி, 1974: 36 தொ.) பட்டியல் போட்டுக் காட்டுகிறது. இதனால் மொத் தம் 473 பேர்களில் 178 புலவர்களுக்கே அவர்களுடைய வட்டாரம்-நாடு அடையா ளம் காட்டப்பட்டுள்ளது. மீதியுள்ள புலவர்களையும் கூடியவரை வட்டார அடையாளம் காண்பது சங்ககால நிலை மொழி, கிளைமொழி வழக்குகள் பற்றியும் இலக்கிய உருவாக்கம் எந்த வட்டாரத்தில், ஏன் நடைபெற்றது என்பது பற்றியும் அறிந்துகொள்ள உதவும் அதுவும் இலக்கி யத்தை முழுமையாக அறிந்துகொள்ள கை கொடுக்கும்;

ஆகவே, சங்க இலக்கியப் புலவர் யார் - எவர் என்பதில் இன்னும் விரிவான ஆராய்ச்சி நடைபெற வேண்டும் என்பதை இது புலப்படுத்துகிறது.

இலக்கியம் யாருக்காக?

இங்கு புறப்பாடல்களையும் அகப் பாடல்களையும் பிரித்துப் பார்ப்பது நல்லது.

புறப்பாடல்களில் பதிற்றுப்பத்து சேர மன்னர்கள் பத்துப் பேரின் புகழைப் பாடுவது. புறநானூறு தமிழ்நாட்டு மன்னர்கள், சிற்றரசர்கள், வள்ளல்கள், சிறந்த குடிமக்கள் முதலானவர்களின் பெருஞ் செயல்களும், அரும்பண்புகளும் பற்றியது. எனவேதான் புறப்பாடல்களை வீரயுகப் பாடல்கள் என்று இந்தக்காலத் தமிழறிஞர் பலரும் கூறிவருகிறார்கள். புறப்பாடல்கள் மேல்குடி மக்களின் - உயர்ந்தோரின் வாழ்க்கையைச் சித்தரிப்பதாகவும், மக்களின் வீர உணர்ச்சியைத் தூண்டி அரசர்களுக்கு உதவியாக போரில் ஈடுபடும்படி வைப்பதாகவும் உள்ளன (ஜான் மார், 1958: 453; கைலாசபதி, 1968: 84 தொ.) அதே சமயத்தில் சங்ககாலத்தில் நடைபெற்ற சமுதாய மாற்றம் - இனக்குழு அழிந்து நிலஉடைமையாக மலரும் காலகட்டத்தைக் குறிக்கிறது (கா. சுப்பிரமணியன் 1982 : 5). புறப்பாடல்களில் சீறூர் மன்னர், பெரியமன்னர், முதுகுடி மன்னர், வேந்தர் ஆகிய நான்கு வகைப்பட்ட சமூகத் தலைவர்களைக் காண முடிவதாகவும், இவர்களுள் வேந்தர்கள் மீதியுள்ள மூன்றுவகை தலைவரோடு உறவு கொண்டதாக மகட்பாற்கஞ்சி பாடல்கள் புலப்படுத்தும் என்பார் மாதையன். (1989:51). எனவே, உயர்ந்தகுடிகள் அரசியல் நோக்கிலேயே சித்தரிக்கப் பட்டுள்ளார்கள்.

புறநானூற்றில் புலவர்களின் வறுமை சித்தரிக்கப்பட்ட போதிலும் அது அரசர்களிடம் பரிசில் தருவதற்காகத் தூண்டும் வகையிலே அமைக்கப்பட்டுள்ளது (உதாரணம், புறம். 159) என்பதே உண்மை கைலாசபதி (ப. 12 தொ.) அகப்பாடல்களில் புறத்திணைச் செய்திகள் (உதாரணமாக அகநானூற்றில் 288 புறவரலாற்றுச் செய்திகள்,) உள்ளன என்று குறிப்பிட்டுள்ளார். அதனால் அவர் அகத்திணைக்குரியவர்களும் அரசர்களாக இருக்க வேண்டும் என்பார். அகத்திணைப் பாடலில் கலித்தொகையில் மட்டுமே பொதுமக்கள் சிலரின் காதல் வாழ்க்கை விளக்கப்பட்டுள்ளது. ஆனால், மாணிக்கம் (1962: 189-191) அகத்திணை இலக்கியம் ஆணுக்கும் பெண்ணுக்கும் பால்கல்வி (Sex Education), போதிப்பதற்காக இயற்றப்பட்டது என்பர். இதற்கு ஆதாரமாக அகத்திணைப் பாடல்களில் தலைவன் தலைவி பெயர் குறிப்பிடாமல் இருப்பதையும், மெய்ப்பாட்டியலில் புணர்ச்சி நடைபெறும் போது ஏற்படும் மெய்ப்பாடுகளை விவரிப்பதையும் எடுத்துக்காட்டியுள்ளார். அப்படியானால் இலக்கியம் எல்லோருக்கும் பொதுவானது என்று ஆகும். அதேசமயத்தில் இலக்கியத்தின் உண்மைப் பயனும் சுருங்கிவிடும். எனவே, இலக்கியத்தை வாழ்க்கைக்கு நேரடியாகப் பயன்படும் கருவியாக மட்டும் கொள்வது பொருந்தாது.

என்ன இலக்கியம்

சங்க இலக்கியம் என்பது அகத்திணைப் பாடல்களும் புறத்திணைப் பாடல்களும் அடங்கியது- அதாவது மனிதன் குடும்ப வாழ்க்கை, புறவாழ்க்கை பற்றிய சமயச் சார்பற்றவை. ஆனால் எட்டுத்தொகை நூல்களில் பரிபாடலும் (இன்று கிடைக்கும் 22 பாடல்களில் 14 பாடல்கள் கடவுளைப் பற்றியது) பத்துப்பாட்டு நூல்களில் திருமுருகாற்றுப் படையும் சமயம் பற்றியவை என்பது குறிப்பிடத்தகுந்தது. எனவேதான் இவை பிற் சங்க காலத்தவை எனச் சிலரால் கருதப்படுகிறது. பிற் சங்க இலக்கியம் அகமும், புறமும் ஆக அமைந்தாலும் அரசு, சமூக வளர்ச்சி ஆகியவற்றைப் பற்றியும் பல குறிப்புகளைக் கொண்டது. கடைசியாக இலக்கிய கர்த்தாக்களின் சமூக மதிப்பு என்ன என்று பார்ப்போம்.

படைப்பாளிகளும் சமூகமும்

படைப்பாளிகள் - புலவர்கள் சமூகத்தில் யார் யாராலெல்லாம் மதிக்கப்பட்டார்கள் என்று அறிவது இலக்கியம் யாருக்கெல்லாம் உதவியாக இருந்தது என்பதைப் புலப்படுத்தும்.

சங்க காலத்தில் அரசர்களிடத்தில் புலவர்கள் செல்வாக்குப் பெற்றிருந்தார்கள் என்பது பரவலான கருத்து. வேந்தர்களுக்குள்ளும் சிற்றரசர்களுக்குள்ளும் போர் நிகழ்ந்த போது தலையிட்டு அமைதி ஏற்படுத்தியதுதான் காரணம் என்று கூறப்படுகிறது. இங்கு இலக்கியப் பணியும் அடங்கியிருக்கிறது. புறப்பாடல் ஒன்றில் (புறம். 72) பாண்டியன் நெடுஞ்செழியன் தன் பகைவர்களை முறியடிக்காவிட்டால் 'மாங்குடிமருதன் முதலான சிறப்புடைய புலவர்கள் என் நாட்டைப் பாடாமல் நீங்கும் தாழ்வு அடைவேனாக' என்று கூறியுள்ளதால் (புறம் 72) 'போர்க்களத்திற்கு வெகுண்டெழும்போதும் நினைந்து போற்றும் அளவிற்கு வேந்தர்களின் நெஞ்சில் புலவர்களைப் பற்றிய மதிப்பு விளங்கியது' என்று வரதராசன் (1972:44) கூறியுள்ளார். அதே சமயத்தில் புலவர் ஒருவரைப் பகைவரின் ஒற்றன் எனக்கருதிச் சோழன் கொல்லத் துணிந்தபோது கோவூர் கிழார் பாடிய பாட்டு காட்டும் சமூக உண்மை வேறு விதமானது. எல்லா அரசர்களும் எல்லாப் புலவர்களையும் ஒரே மாதிரி மதிப்பிடவில்லை என்பதே அந்த உண்மை. ஒவ்வொரு அரசரும் ஒருசில புலவரையே பாராட்டினார்கள். ஒரு புலவருக்கும் ஒரு அரசனுக்கும் இருந்த தொடர்பு அந்தப் புலவனை இன்னொரு அரசன் சந்தேகிக்க வைத்துவிட்டது. ஓரிடத்தில் நெருங்கிய தொடர்பு இன்னொரு இடத்தில் ஆபத்துக்கு இடம் ஆகிவிட்டது. எனவே, புலவர்களும் ஒரு குறிப்பிட்ட அரசனின் ஆதரவாளர்களாகி விடுகிற நிலையை இது காட்டிவிடுகிறது. பாரியின் ஆதரவாளராக இருந்த கபிலர், மலையமான் திருமுடிக் காரியைப் பாடிய பாட்டில் (121 2,3,6,)

> பலரும் வருவர் பரிசின் மாக்கள்
> வரிசை அறிதலோ அரிது.........
> ....
> பொது நோக்கு ஒழிமதி
> புலவர் மாட்டே.

என்று கூறியஅடிகள் புலவர்களின் திறமையை மட்டுமல்லாமல் தனிப்பட்ட உறவையும் குறிப்பதாகக் கொள்ளலாம். தனிப்பட்ட நெருக்கமே புலவர்கள் அரசனின் குடும்ப வாழ்க்கையிலும் அறிவுரை கூறுவதற்குக் காரணமாகும். புலவர்கள் அரசர்களால் பெரிய அளவில் மதிக்கப்பட்டதற்குப் பலரும் எடுத்துக் காட்டுவது மோசிகீரனார் பாட்டு (புறம். 50) ஆகும். சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை அறியாமல் அரசு கட்டிலில் ஏறித் தூங்கிவிட்ட மோசிகீரனாரைத் தண்டிக்காமல் அவர் எழுந்திருக்கும் வரை கவரி வீசியதைப் புலவரே 'அதூஉஞ்சாலும் நற்றமிழ் முழுது அறிதல், என்று குறிப்பிட்டது தமிழ் அறிஞர் உலகில் பலரைப் புல்லரிக்க வைத்துவிட்டது.

இந்தப் பாடலை எடுத்துக்காட்டிச் சிவஞானம் (1974:19) 'சங்ககாலத்தில் தமிழ்ப் புலவருக்கு இருந்த மதிப்பு அரசியல் சம்பிரதாயங்களுக்கு அப்பாற்பட்டது' என்பார். கிருஷ்ணன் (ப. 84) இந்த அடியை எடுத்துக்காட்டிப் புலவரின் பாராட்டுரை 'தமிழ் மீது மன்னனுக்குள்ள பற்றினால் தமிழறிந்த புலவரை மன்னித்துவிட்டான்' என்ற பொருளை மட்டும் உள்ளடக்கி நிற்கவில்லை; இன்றைய மொழியில் கூறின் அம்மன்னன் உள்ளத்தே 'தேசிய உணர்ச்சி' அரும்பிவிட்ட நிலையினை அப்பாடல் வரி புலப்படுத்துகிறது' என்று விளக்கியுள்ளார்.

ஆனால், உண்மையில் அரசர்களின் தமிழ்ப் பற்றுமட்டும் அல்லாமல் சமயப் பற்றும் அந்தப்பாடல் காட்டுவனவாக உள்ளது என்பது கவனிக்கத் தகுந்தது' 'இவண் இசையுடையோர்க்கல்லது அவண் உயர்நிலை உலகத்து உறையுள் இன்மை'

விளங்கக் கேட்ட மாறுகொல்
வலம்படு குரிசீனீ ஈங்கிது செயலே.

என்ற அந்தப் பாடலின் கடைசி நான்கு அடிகள் - இந்த உலகத்தில் புகழ் உடையவர்களுக்குத்தான் மேலுலகம் உண்டு என்ற சமயக் கருத்துகாரணமாகவும் அரசன் கவரி வீசினான் என்பதைப் புலவரே கூறியதாகக் குறிப்பிடுகின்றன. இடைக் காலத்தில் சமயமும் தமிழும் இறண்டறக் கலந்து தழைத் தோங்குவதாகப் பேசப் படும் குரலின் ஆரம்பமாக இதைக் கொள்ளலாம் எனவே, புலவர்களுக்கு அரசர்கள் கொடை கொடுத்து ஆதரித்த தற்கு அரசியல், மொழி, சமயம் ஆகிய மூன்று காரணங்களும் கலந்தே செயல் பட்டுள்ளன.

புலவர்களைப் பொது மக்கள் எவ்வளவு தூரம் மதித்தார்கள்; சமூகம் அவர்களுக்கு என்ன தகுதியைத் தந்தது என்பதற்கும் இலக்கிய ஆதாரம் தேட வேண்டும். அப்பொழுதுதான் சமூகத்தில் மொழி, இலக்கியம் பற்றிய உணர்வு களைக் கணிக்க முடியும்.

குறிப்பு:

இக் கட்டுரையின் மூன்றாம் பகுதி யாக எழுத்து மொழிப் பயன்பாடு என் னும் பகுதியில் சிற்பநூல், இசைநூல், சமையல் நூல், குதிரை நூல் எனப் பலதுறை நூல்கள் பற்றிய குறிப்புக்களை ஆசிரியர் தந்துள்ளார். இந்நூல், வெளியிட்ட பின்னர் களவு நூல் பற்றி ஆசிரியருக்கு கிடைத்த தகவல்களை எமக்கு எழுதியுள்ளார். மூலநூலில் இல்லாத இப்பகுதியை கட்டுரையின் மூன் றாம் பகுதியுடன் சேர்த்து வாசித்தல் வேண்டும்.

3.6. களவு நூல்

'அறிந்தோர் புகழ்ந்த ஆண்மையர்: செறிந்த
நூல்வழிப் பிழையா நுணுங்கு நுண் தேர்ச்சி
ஊர்காப்பாளர்' — மதுரைக் காஞ்சி. 645 - 7

(களவியல் தொழிலை அறிந்தவர்க ளாலே, கள்வரைக்காண்டலில் இவர் வல்லவர் எனப்புகழப்பட்ட ஆண்மையை உடையவர். செறிவினை உடைய நூலில் வழியைத் தப்பாத நுணங்கு நுண் தேர்ச்சி ஊர்க்காப்பாளர்)

களவு செய்யும்முறை பற்றிய நூலும், கள்வரைப் பிடித்தற்குரிய காவல்நூலும் என்ற இரண்டு வகை இருந்ததாகவும் கருதப்படுகிறது.

சிலம்பில் (கொலை-165) 'கருந்தொழில் கொல்லன் காட்டினன் உரைப்போன்' என்ற அடிக்கு அடியார்க்குநல்லார் 'களவு நூலிலுள்ள ஏதுக்களைக் காட்டினனாய் உரைக்கின்றவன்' என்ற பொருள் எழுதி யுள்ளார். களவுநூல் ஸ்தேய சாஸ்திரம் என்று வழங்கப்படுகிறது: அதைச் செய் தவர் கள் என்பவரின் ஆசிரியராகிய கர்ணிசூதர் என்று வடமொழியாளர் கூறு வர்' என்றும் உ. வே. சா. அங்கு அடிக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

துணை நூல்கள்

1. அறவாணன் க. ப. 1974 சைனரின் தமிழிலக்கணக் கொடை, ஜைன இளைஞர் மன்றம் சென்னை

2. கந்தசாமி சோ. ந. 1975 'பௌத்த சமய நூல்கள்' தெய்வத் தமிழ் பதிப்பர் - சஞ்சிவி பக் 322 - 94 சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

3. குருசாமி ம. ரா. போ. 1974 சங்க காலம் (முதல் பதிப்பு 1967) மெர்க்குரி புத்தகக் கம்பெனி கோயம்புத்தூர்.

4. சஞ்சிவி ந. 1973 சங்ககால ஆராய்ச்சி அட்டவணைகள் சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை.

5. Sivathamby K. 1986, Literary History of Tamil (A Historiographical analysis), Tamil university, Thanjavur.

6. சிவஞானம் மா. பொ. 1976, இலக்கியங்களில் இனவுணர்ச்சி, இன்ப நிலையம், சென்னை.

7. சுப்பிரமணியன் கா. 1982 சங்ககாலச் சமுதாயம் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

8. செயராமன் நா. 1975, சங்க இலக்கியத்தில் பாடாண்திணை, மீனாட்சி புத்தக நிலையம் மதுரை.

9. தமிழண்ணல் இரா. 1975, சங்க இலக்கிய ஒப்பீடுகள் இலக்கியக் கொள்கைகள் மூன்றாம் பதிப்பு, 1985, மீனாட்சி புத்தக நிலையம் மதுரை.

10. தமிழண்ணல் இரா. 1980 புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு (ஏழாம் பதிப்பு 1987) மதுரை.

11. நாகசாமி இரா. 1979, நடையியல், முல்லை வெளியீடு மதுரை.

12. மகாதேவன், கதிர் 1975. ஒப்பிலக்கிய நோக்கில் சங்க காலம் (இரண்டாம் பதிப்பு, 1977) மதுரை.

13. மாணிக்கம் வ. சு. ப. 1962 The Tamil concept of love in Ahattinai Kazhagam Madras.

14. மாதையன் பெ. 1989, மகட்பாற் காஞ்சிப்பாடல்களும் சங்கச் சமூகச் சூழலும், தமிழ்ப் பொழில், துணர் 63 மலர் 2 பக் 50 - 64, கரந்தை தஞ்சாவூர்.

15. மீனாட்சி சுந்தரம் தெ. பொ. 1981, தமிழ் இலக்கிய வரலாறு, சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை.

16. Hart G. L. III 1975, The poems of ancient Tamil their milieu and their Sunskrit Counter Part, University of California Press, Berkeley.

17. Kailasapathy K. 1968 Tamil Heroic Poetry, Oxford University Press, Oxford.

18. Marr. J. R. 1958 The Eight Anthologies: Institue of Asian Studies Medras (Printed in 1985)

19. Zvelibil K. V. 1973, The Smiles of Murugan on Tamil Literature of South India, E. J. Brill, London.

சமயத்தின் உட்கூறுகள்

சமயம் என்னும் அமைப்பின் அடிப்படையான உட்கூறுகள் சில உள்ளன. இன்றுள்ள பெருஞ் சமயங்களில் இக் கூறுகளை ஒப்பீடு செய்து காணல் இயலும். அவை:-

1. புனிதத்தன்மை என்ற கருத்தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளமை.
   (The creation of the concept of 'Sacred')
2. சடங்கு முறைகளைப் பெற்றுள்ளமை.
   (The establishment of rituals)
3. நம்பிக்கை முறைகளைப் பெற்றுள்ளமை.
   (The establishment of a System of beliefs)
4. சமயத்தின் அனைத்துத் தன்மைகளையும் உறுதியாகப் பின்பற்றக் கூடிய நம்பிக்கையாளர்களைப் பெற்றுள்ளமை.
   (The formation of an organisation of believers)

(தகவல்; 'பண்பாட்டு மானிடவியல்'
சீ. பக்தவத்சல பாரதி)

நாட்டுப்புற இலக்கியம் - கலைகள் காட்டும் தமிழர் பண்பாடு

கி. கருணாகரன்

வ. ஜெயா

முன்னுரை

ஒரு சமுதாயத்தின் வாழ்வியலை - வாழ்வியல் முறையை எடுத்துக் காட்டுவது பண்பாடு எனப்படுகிறது. ஒரு சமுதாயத்தை மற்றொரு சமுதாயத்தினின்றும், ஒரு சமுதாயப்பிரிவை மற்றொரு சமுதாயப் பிரிவினின்றும் வேறுபடுத்தி அறிவதற்குத் துணையாவது அவை பின்பற்றும் வாழ்வியல் நெறிமுறைகளாகும்.

இந்நெறி முறைகள் பொதுத் தன்மை கொண்டும், சிறப்புத்தன்மை பெற்றும் காணப்படுகின்றன.

ஒரு சமுதாயம் கொண்டுள்ள பழக்க வழக்கங்கள், மனப்பாங்குகள், கோட்பாடுகள் ஆகியவை அச்சமுதாயத்தின் பண்பாட்டு முழுமையாக (overall pattern of culture) அமைகின்றன எனக்குறிப்பிடப் படுகிறது.*

இது போன்ற பழக்க வழக்கங்கள், மனப்பாங்குகள் ஆகியவை மொழி, குறியீடு போன்றவற்றின் மூலம் வழிவழியாகக் கொண்டு செல்லப்பட்டும் பின்பற்றப் பட்டும் வருகின்றன என்றாலும் சமுதாயத்தில் அவ்வப்போது ஏற்பட்டு வரும் மாற்றங்களுக்கும் புதுமைகளுக்கும் ஏற்ப பண்பாட்டு அமைப்பிலும் சிற்சில மாற்றங்கள் தோன்றியே வருகின்றன. என்பது கண்கூடு. இதனால் பண்பாட்டுக் கலப்பும் அதன் வழி மொழிக்கலப்பும் ஏற்படுகின்றன.

சமுதாயங்களைப் பாகுபாடு செய்து விளக்குவதற்கும் அவை ஒவ்வொன்றின் தனித்தன்மைகளை வெளிக் கொணர் வதற்கும் இத்தகைய மாற்றங்களும் பிறவும் உதவும்,

இன்றைய வழக்கில் நாகரீகம், பண்பாடு என்ற சொல்லாட்சிகளைப் பெருமளவில் பார்க்கிறோம். இவ்விரண்டையும் வேறு படுத்திப் பார்க்க வேண்டியது இன்றையத் தேவையும் கூட.

நாகரீகம் என்பது இடம், காலம், பொருள், சூழல், போன்றவற்றிற்கு ஏற்ப மாறும் இயல்பினைப் பெற்று விளங்குவது. ஆனால் பண்பாடு அடிப்படையானது, மாறாத்தன்மையது என்றாலும் புறநிலை யால் சமுதாயத்தை நோக்கும் போது பண்பாட்டு அமைப்பால் சிற்சில மாற்றங்கள் நிகழ்ந்திருப்பதையும். நிகழ்ந்து வருவதையும் நம்மால் அறிந்து கொள்ள முடியும்.

தமிழ்ச் சமுதாயத்தில் காணப்படும் பல்வேறு பழக்கவழக்கங்கள், வாழ்வியல் நிகழ்வுகளால் பின்பற்றப்படும் சடங்குகள், நம்பிக்கைகள் போன்றவற்றை ஆய்வுக்கு

* "Culture, in anthroopology, the way of life of a society. The concept of culture.......................... one group adopt the customs of another"

The New Columbia Encyclopaedia

(Ed.) Haarris W, H. & Judith S. Levey, 1975 PP. 565, &696, CUP: London.

உட்படுத்தி அதன்வழி பண்பாடு மற்றும் நாகரீகம் என்ற அமைப்பு நிலைகளை விளக்க முடியும்.

இதனால் அடிப்படை வாழ்வியல் அமைப்பிலும் பல்வேறு மாற்றங்களால் தோன்றிவரும் நாகரீக அமைப்பிலும் இன்றைய நிலையில் இருந்துவரும் ஒழுங்கு முறையினை வரையறை செய்ய இயலும்.

இவையே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கங்களாகவும், குறிக்கோள்களாகவும் அமைந்துள்ளன.

சமுதாயப் பின்னணி

தமிழ்ச் சமுதாயம் பழமையான சமுதாயம். முற்போக்கான வாழ்வியல் கோட்பாடுகளையும் கூறுகளையும் கொண்டிருந்த சமுதாயம்.

நீண்ட, நெடிய வரலாற்றுப் பின்னணியையும் மொழி இலக்கிய பின்னணியையும் பெற்றிருந்த சமுதாயம். திரைகடல் ஓடித்திரவியம் தேடியும், தம்புகழைப் பரப்பியும், செய்யும் பணிகளால் வீரத்தையும், விவேகத்தையும் பெற்று துணிவுமிக்க பாரம்பரியத்தினைக் கொண்டிருந்த சமுதாயம். உழைப்பிற்குரிய ஆக்கப்பணிகளுக்கு முதலிடம் கொடுத்து வாழ்க்கையினை உயர்வாக்கிக் கொண்டு வாழ்ந்த சமுதாயம் இது.

வாழ்வியல் நெறிமுறைகளை இலக்கிய இலக்கணமாக்கியும், பின்பற்ற வேண்டிய அறநெறிகளை முறையாக வரையறை செய்தும் உலகிற்கு வழங்கிய சமுதாயம் இதுவாகும். வரலாற்றிலே இடம்பெற்று, பிற சமுதாயங்களுக்கு எடுத்துக்காட்டாகவும் வழிகாட்டியாகவும் இருந்தது இச்சமுதாயம்.

இச் சமுதாயத்தின் பண்பாட்டிலே போற்றத்தக்க அடிப்படைக் கூறுகள் பலராலும் பாராட்டப்படுவன. பல நூற்றாண்டுகள் கழிந்த பின்னரும், அடிப்படைக் கூறுகளும் நிலைத்து நிற்கும் அமைப்பினைப் பெற்று விளங்குகிறது தமிழ்ச் சமுதாயம்.

''மயிர் நீப்பின் வாழாக்கவரிமான் அன்னார்
உயிர் நீப்பர் மானம் வரின்''
(குறள்;969)

என்ற குறள் நெறிக்கேற்ப பண்பாட்டிற்குத் தலைமையிடம் கொடுத்துப் பெரிதென மதித்து வாழ்ந்தது இச்சமுதாயம். விருந்தோம்பலையும், பிறருடைய வாழ்விற்கு உதவுதலையும் உற்ற துணையாக இருத்தலையும் போற்றி மகிழ்ந்தது தமிழ்ச் சமுதாயம்.

இன்று இச் சமுதாய அமைப்பின் புறநிலையிலே எத்தனையோ மாற்றங்களைக் காணமுடிகிறது. தன்னம்பிக்கை இழந்தநிலை, பிற சமுதாயத்தாக்கம், அரசியல் சூழல், தாழ்வு மனப்பான்மை, மங்கிய இயற்கை விளைவுகள் போன்றவை கடந்த பதினைந்து நூற்றாண்டுகளுக்கும் மேலாக ஆட்டிப்படைக்கும், வாட்டிவதைக்கும் நிலையிலே நிலை குலைந்து காணப்படுகிறது.

பழங்கால எழுத்து இலக்கியங்கள். அன்றைய வாய்மொழி இலக்கியங்கள், போன்றவற்றிலெல்லாம் படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ள சமுதாய அமைப்பு, வாழ்வியல் நெறிமுறைகள், சமுதாய மேம்பாடு, சமுதாயத் தொண்டு - கொடுப்பு போன்றவை எல்லாம் இன்று சிறுகச் சிறுக மறைந்து வருகின்றன.

இந்நிலையை நாம் அறிந்து கொள்வதற்கு இன்றைய எழுத்து மற்றும் வாய்மொழி இலக்கியங்களும் பல்வேறு நடைமுறைச் சூழல்களும் உதவுகின்றன.

பிற மொழி இனப்பண்பாட்டாலும் நாகரீகத்தாலும் தாக்குதலுக்கு உள்ளாகி தன் வடிவ அமைப்பையும், செயலையும், ஒதுக்கிய நிலையில் இச்சமுதாயம் இயங்கி வரக் காண்கிறோம்.

இத்தகைய நடைமுறைச் சூழலில் பண்பாட்டு அமைப்பில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், நாட்டுப்புற இலக்கியங்கள், கலைகளின் வழி இங்கு ஆராயப்பட்டுள்ளன.

இன்றையத் தமிழ்ச் சமுதாய அமைப்பும் பண்பாடும்:

இன்றையத் தமிழ்ச் சமுதாயம் பின்பற்றிவரும் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், சடங்குகள், வாழ்வியல் நெறிமுறைகள் போன்றவற்றைத் தரவாகக் கொண்டு பண்பாட்டு அமைப்பானது இங்கு விளக்கப்பட்டுள்ளது.

இன்றையச் சமுதாயம் புறநிலையிலேயே (Surface Level) மாற்றங்களுக்கு உள்ளாகி இருந்தாலும் அக நிலையிலே (Deep Level) குறிப்பாகப் பின்பற்றி வரும் நம்பிக்கைகள் மற்றும் சடங்குகளிலே பழமையோடு ஒட்டிச் செல்வதைக் காண முடிகிறது.

வாழ்வியலின் முக்கிய நிகழ்வுகள் மற்றும் கூறுகளான பிறப்பு, பூப்பு, திருமணம், இறப்பு, சமயம் போன்றவற்றில் பின்பற்றப்படும் நம்பிக்கைகளும், நிகழ்த்தப்படும் சடங்குகளும் பழமையோடு ஒத்துப் போவதனைக் காண முடிகிறது.

இதனை நிறுவுவதற்கு நாட்டுப்புற இலக்கியங்கள் மற்றும் களப்பணி வழி பெறப்பட்ட தரவுகள் அகச்சான்றுகளாக (Internal Evidences) அமைகின்றன.

நாட்டுப்புற மக்களிடையே காணப்படுகின்ற வாய்மொழி இலக்கிய வகைகள், அவர்கள் பின்பற்றி வரும் வாழ்வியல் நெறிமுறைகள், நம்பிக்கைகள், அவற்றோடு இணைந்து செயல்படும் சடங்குகள் போன்றவை சமுதாய அமைப்பிலே இடம் பெற்று விளங்கும் தொழில், பொருளாதார நிலை, பண்பாட்டு அமைப்பு, நாகரிகம் போன்ற காரணிகளைக் கொண்டு பாகுபாடு செய்யப்படுகின்றன.

இதுபோன்ற பாகுபாடு நாட்டுப்புறப் பண்பாட்டில் மட்டுமில்லாமல், உயர் நிலைப் பண்பாட்டிலும் அமைந்திருக்க காண்கிறோம். நாகரிக வளர்ச்சியின் உயர் நிலையில் வைத்து மதிக்கப்படுகின்ற சமுதாயப் பிரிவினரிடையே கூட பழமையான பழக்கவழக்கங்களும், வாழ்வியலுக்கு ஏற்றவை என்று கொள்ளப்பட்ட அடிப்படை நம்பிக்கைகளும் வழக்கத்தில் இருந்து வருவதனைக் காணமுடிகிறது. இதற்குக் காரணம் சமுதாய இயக்கமேயாகும்.

அதாவது ஒரு குறிப்பிட்ட நம்பிக்கையினைப் பின்பற்றாததினாலோ, ஒரு குறிப்பிட்ட சடங்கைச் செயல்படுத்தாதினாலோ, தமக்கோ - தம்மைச் சார்ந்தவருக்கோ ஏதேனும் தீங்கு நிகழ்ந்துவிடக்கூடாது என்ற எண்ணமேயாகும். இத்தகைய எண்ணம் மிகவும் இயல்பானதும் கூட.

மேலே குறிப்பிட்டவாறு வாழ்வியல் நிகழ்வுகளான பிறப்பு, பூப்பு, திருமணம், இறப்பு போன்றவற்றிலும் சமயம் போன்ற அடிப்படைக் கூறுகளிலும் போற்றப்பட்டு வரும் - பின்பற்றப்பட்டு வரும். சடங்குகளிலும் நம்பிக்கைகளிலும் பொதுமைக் கூறுகள் அதிக அளவில் காணப்பட்டாலும் சிறப்புக்கூறுகளும் குறிப்பிடத்தக்க வகையிலே அமைந்திருப்பதைக் காண்கிறோம். ஆகவே, பண்பாட்டு விளக்கத்தில் இத்தகையச் சிறப்புக் கூறுகளைப் பற்றிய செய்திகளும் ஆய்வும் இடம் பெறுவது தமிழ்ச் சமுதாயத்தின் வாழ்வியல் வரலாற்றினைத் தெளிவுபடுத்துவதற்கு உறுதுணையாக அமையும்,

இக்கருத்தின் அடிப்படையில்தான் இக்கட்டுரையில் நாட்டுப்புற இலக்கியங்கள். நம்பிக்கைகள் போன்றனவற்றின் வாயிலாக வெளிப்படும் சிறப்புக்கூறுகள் விளக்கப்பட்டுள்ளன.

எந்தவொரு சமுதாயத்திலும், அதுவும் குறிப்பாகப் பாரம்பரிய சிறப்பியல்பினைக் கொண்ட சமுதாயத்தில் இதுபோன்ற பண்பாட்டு அமைப்பு இருப்பது இயல்பானதே. தமிழ் சமுதாயத்திலும் இப்பண்பினையே நாம் காண்கிறோம்.

வாழ்வியல் நிகழ்வுகளும், பண்பாடும்

பிறப்பு எனும் நிகழ்வில் ஆறுவகையான சடங்குகள் நடத்தப்படுகின்றன. மூன்றாம் மாதச் சடங்கு, சீமந்தசடங்கு, மடிநிறைத்துப் புறப்படுதல் போன்றவை அவை. அனைத்துச் சமுதாயப் பிரிவினரும் இச்சடங்குகளைச் செய்தாலும் அவற்றைச் செய்யும் முறைகளிலும் அவற்றோடு இணைந்து வழங்கும் நம்பிக்கைகளிலும் குறிப்பிடத்தக்க வேறுபாடுகளைக் கொண்டுள்ளதைக் காணமுடிகிறது. இத்தகைய வேறுபாடுகளைத் தமிழ்ச் சமுதாயத்தின் சமுதாய படிம நிலைப்பாகுபாட்டின் அடிப்படையில் (Social Stratification of the Society) இனங்கண்டு விளக்கமுடியும். பிற நிகழ்வுகளான பூப்பு, திருமணம், இறப்பு போன்றவற்றிலும் இது போன்ற பாகுபாட்டு அமைப்பு இருந்து வருவதையும் விளக்க முடியும்.

சடங்குகள்	முற்படுத்தப்பட்ட பிரிவினர்	பிற்படுத்தப்பட்ட பிரிவினர்	மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவினர்	தாழ்த்தப்பட்ட பிரிவினர்
மூ. மா. ச.	கணவன் வீட்டிற்குப் பெண் வீட்டார் வந்து பெண்ணைத் தமது இல்லத்திற்கு அழைத்துச் செல்லுதல்.	—	—	—
ஐ. மா. ச.	வளைகாப்புச் சடங்கு செய்தல்.	அறிபழச் சடங்கு நடத்துதல்.		—
வ. கா. ச.	1. வேப்பிலைக் காப்பு கட்டல்	1. அம்மனுக்கு வளையல்களைத் தனியாக எடுத்து வைத்தல்.		1. முதலில் சிறுமியிடம் கொடுத்து கர்ப்பிணிக்கு வளையல் அணிவித்தல்.
	2. தங்கம், வெள்ளி மற்றும் கண்ணாடி வளையல்கள் சுமங்கலியரால் அணிவிக்கப்படுதல்.	2. சிறுமிக்கு முதலில் வளையல் அணிவித்தல்.		
		3. இதன் பின்னரே கர்ப்பிணிக்குச் சுமங்கலியரால் தங்கம் வெள்ளி மற்றும் கண்ணாடி வளையல்கள் அணிவிக்கப்படுதல்.		
அ. ப. ச.	—	1. ஐவகைப் பழங்களை எடுத்துக் கொண்டு தம் மகளைப் பார்த்து வருதல்.		—
	—	2. கர்ப்பிணிக்குக் கருப்பு வண்ணத்தில் சேலை, சட்டை வளையல்கள் எடுத்துச் செல்லுதல்.		—
சீ. ச.	1. கணவன் மனைவி இருவரும் திருமண ஆடை உடுத்தி கிழக்கு நோக்கி அமர்தல்.	1. ஏழு / ஒன்பது எண்ணிக்கையில் பலகாரங்கள் மற்றும் உணவு வகைகளை எடுத்துச் செலுத்துதல். 2. ஒற்றை எண்ணிக்கையில் நம்பிக்கை கொள்தல்.		
	2. ஓமம் வளர்த்தல்	—	—	
	3. கணவன் மனைவி வாயில் நெய் ஊற்றுதல்.	—	—	—

சடங்குகள்	மு. பி.	பி. பி.	மி. பி. பி.	தா. பி.
	4. கன்னிப் பெண்கள் ஆலமர மொட்டினை இடித்துக் கர்ப்பிணியின் மூக்கின் மேல் விடுதல்.	—	—	—
	5. ஆலமர மொட்டுக்களைக் கோர்த்து கர்ப்பிணியின் கழுத்தில் கட்டுதல்.	—	—	—
	6. கணவன் மனைவியின் தலையில் எண்ணெய் விட்டு தருப்பைப் புல்லால் வகிடு எடுத்தல்.	—	—	—
	7. கணவன் மனைவி இருவரும் காளையிடம் சென்று ஆண் குழந்தை வேண்டுதல்	—	—	—
ம. நி. பு.	1. முதிய சுமங்கலிப் பெண்டிர் கர்ப்பிணியின் சேலை முந்தானையில் வறுத்த நவதானியங்களையும் வைத்தல்.	—	—	1. பிறந்த வீட்டிற்கு வரும் வழியிலுள்ள அம்மன் கோவில்களில் தேங்காய் உடைத்தல்.
	2. பிறந்த வீட்டிற்கு வரும்போது ஆரத்தி எடுத்தல்.	—	—	2. தேங்காய் உடைக்கும் போது கர்ப்பிணி அருகில் நிற்கக் கூடாது.
	3. தேங்காயைத் தலையைச் சுற்றி வாயிலில் உடைத்தல்.	—	—	3. இசக்கி அம்மனுக்கும் சிறப்பாக தேங்காய் உடைத்தல்.

<table>
<tr><th>சடங்குகள்</th><th>மு. ப.</th><th>பி. பி.</th><th>மி. பி. பீ.</th><th>தா. பீ.</th></tr>
<tr><td colspan="5" align="center"><u>பிறப்பு: கு. பி, பி, ந, ச,</u></td></tr>
<tr><td rowspan="2">தீ. க.</td><td>1. புரோகிதரை வரவழைத்து புண்ணியயாகம் செய்தல்.</td><td colspan="2">1. கொள்ளிக் கட்டையைத் தாண்டி வருதல்</td><td>1. குடம் கொளுத்திக் காட்டல்.</td></tr>
<tr><td>2. தாய், குழந்தை இருவர் தங்கியிருந்த அறையின் வாயிலில் போடப்பட்டிருக்கும் உலக்கை - கொள்ளிக் கட்டையைத் தாயானவள் குழந்தையைத் தூக்கிக் கொண்டு தாண்டி வருதல்.

3. விளக்கை நிறை நாழி நெல் மீது வைத்தோ நீராலோ மூன்று முறை ஏற்றிஇறக்கும் சடங்கு செய்தல்.</td><td>2. மஞ்சள், வெற்றிலை, சுண்ணாம்பு கலந்த நீரால் ஆரத்தி எடுத்தல்.</td><td>வேப்பிலை, பருத்திக் கொட்டைகளால் இருவரது, தலைகளையும் சுற்றி எறிதல்.</td><td>2. சோற்று உருண்டை விளக்காலும், கரியாலும் ஐந்து-ஏழு என்ற எண்ணிக்கையில் இருவரது தலையையும் சுற்றி எறிதல்.</td></tr>
<tr><td rowspan="2">பெ. இ.</td><td rowspan="2">1. தந்தை அரிசியின் மேல் தனது வலதுகை மோதிர விரலால் குழந்தை பிறந்தநாள் நேரம், நட்சத்திரம் இடும் பெயர் போன்றவற்றை எழுதுதல்.

2. தந்தை குழந்தையின் பெயரை காதில் மூன்று முறை கூறல்.</td><td rowspan="2">1. விளக்கின் முன் மூன்று இலைகளில் உணவு படைத்தல்.
2. குழந்தையின் வயிற்றின் மேல் கருப்புக் கட்டியை வைத்து அதை அனைவரும் சாப்பிடுதல்.
3. குழந்தையின் மேல் மூன்று முறை தண்ணீர் தெளித்து காதில் பெயரைக் கூறுதல்.</td><td>1. விளக்கின் முன் குழந்தையைக் கிடத்துதல்

2. ஒரு செம்பு நீரில்திருநீறைக் கலந்து அந்நீரைக் குழந்தையின் மேல் தெளித்தல்.</td><td>1. பெரியவர் களில் குழந்தையைக் கிடத்தி விளக்கினை மூன்று மூன்று முறை சுற்றுதல்.
2. பாஞ்சாங் குறிச்சி மண்ணை எடுத்துவந்து ஆவாரன் இலையை நனையவைத்த நீருடன் குழைத்து குழந்தையின் நெற்றியில் பூசுதல்</td></tr>
<tr><td colspan="2" align="center">கழுதைப்பால், கழுதை இரத்தம் இரண்டையும் கலந்து கொடுத்தல்.</td></tr>
</table>

சடங்கு	மூ. பி.	பி. பி.	மி. பி. பி.	தா. பி.
	2. பூப்பு: இந் நிகழ்வில் பொதுமைக் கூறுகள் அதிகமாகவும் தாழ்த்தப்பட்ட பிரிவினரிடம் மட்டுமே சில சிறப்புக்கூறுகளும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.			
பூப்பு.நீ விழா	1. பதினாறாவது நாளில் நடத்துதல். 2. புரோகிதரை வரவழைத்து நடத்துதல். 3. புண்ணிய நீரை வீடு முழுவதும் தெளித்தல். 4. சுமங்கலியர் பூப்படைந்த பெண்ணை நீராட்டுதல். 5. பூப்பெய்திய பெண் தாய் மாமனை வணங்குதல். 6. பூப்பெய்திய பெண்ணுக்குப் பொய்க்கல்யாணம் நடத்துதல். 7. பூப்பெய்திய பெண்ணுக்கு சுமங்கலிப் பெண்கள் ஆரத்தி எடுத்தல். 8. தேங்காயை உரலில் உடைத்தல்.			—
	—	—	—	9. குடில், பயன்படுத்திய பொருட்களை எரித்தல்.
	—	—	—	10. எட்டு எருக்கன் இலைகளில் ஒவ்வொரு காலாக வைத்து மிதித்து ஏழு ஓட்டிலுள்ள பாலைத் தூக்கித் தலைக்கு மேல் ஊற்றுதல்.
	—	—	—	11. பசுவின் சாணத்தை ஒற்றை எண்ணிக்கையில் வட்டமாகத் தட்டி. மத்தியில் குழி போட்டு அதனுள் பாலை ஊற்றி சுமங்கலியானவள் ஒவ்வொன்றாய் தாய்மாமனிடம் கொடுக்க அவர் அதனைத் தமது கையில் வாங்கி, கம்புத் தட்டையில் காலைத் தொட்டு பெண்ணின் மேல் தெளித்தல்.

சடங்குகள்	மு பி.	பி. பி.	மி. பி. பி.	தா. பி.
	—	—		12. வண்டிமை, கண்ணிமை அடுப்புக்கரி போன்றவற்றால் முகத்தில் புள்ளியிடல்,
	—	—	—	13. வீட்டு வாயிலில் பெண்ணின் தாயும் தாயின் சகோதரிகளும் நெல்லையும், காசுகளையும் பெண்ணின் நெற்றியிலிருந்து தரையில் தூவுதல்
	—	—	—	14. ஆண் குழந்தையை பெண்ணின் இடுப்பில் வைக்கக் கொடுத்தல்.
	—		—	15, கோழிக் குஞ்சைப் பெண்ணின் தலையைச் சுற்றி எறிதல்
	—		—	16. வீட்டு வாயிலில் போடப்பட்டிருக்கும் உலக்கை மற்றும் வேலி முள்ளைத் தாண்டி வருதல்.

3. திருமணம்: தி. மு. ந. ச. பொதுமைக் கூறுகள்

மு. கா. ந.

1. ப. வடிவில் செதுக்கிய பருவப்பனை மரத்தைப் பயன்படுத்துதல்.
2. சடங்கில் கலந்து கொண்ட ஆண்கள் சந்தனம், குங்குமம், மஞ்சள் மூன்றையும் மூன்று முறை விரலில் தொட்டு மரத்தில் பூசுதல்.

மு பி.	பி. பி. / மி. பி. பி.	தா. பி.
3. மரக்காலின் உச்சியில் மாவிலை கட்டுதல்.	3. மரக்காலின் உச்சியில் பச்சை ஈர்க்கினால் மாவிலை, வெற்றிலை, மஞ்சள் ஆகியவற்றைக் கொர்த்துக்கட்டுதல். 4. மரக்காலின் அடியில் நவ தானியங்களைப் புதைத்து நீர் ஊற்றுதல். 5. நவதானியங்கள் புதைத்த இடத்தில் பால் ஊற்றுதல்.	3. மரக்காலின் உச்சியில் வேப்பிலையைச் சேர்த்துக் கட்டுதல்.

<table>
<tr><th>சடங்குகள்</th><th>மு. பி.</th><th>பி. பி.</th><th>மி. பி. பி.</th><th>தா. பி.</th></tr>
<tr><td>பி. ச.</td><td>1. சுமங்கலிச் சடங்கு என்ற பெயரால் நடத்தப்படுதல்.
2. திருமணத்திற்கு முதல் நாள் காலையில் சுமங்கலிப் பெண்கள் ஒற்றை எண்ணிக்கையில் அழைக்கப் படுதல்.
3. இறைவனுக்கு பூசை செய்து கும்பிட்ட பின்னர் சுமங்கலிகளுக்கு இனிப்பு, பொங்கல் மலர், புடவை, வெற்றிலை, பாக்கு, பழம் கொடுத்து அனுப்புதல்.</td><td colspan="2">1. திருமணத்திற்கு முதல் நாளிரவில் ஒற்றை எண்ணிக்கையில் சுமங்கலிப் பெண்கள் அரிசி அளந்து நிறை நாழியுடன் பெட்டியில் வைத்தல்
2. உறவின் ஆண்கள் தாலி, முகூர்த்த சேலை, வேட்டி, மலர், வெற்றிலை, பாக்கு, தேங்காய் முகூர்த்த அரிசி ஆகியவற்றை மேள தாளத்துடன் ஊர்க்கோயிலில் வைத்து கும்பிட்ட பின்னர் எடுத்து வருதல்.
— —</td><td>1. கோயிலுக்குப் பொருட்களைக் கொண்டு சென்று கும்பிடுதல்.
2. கன்னி பூசை செய்தல்.
3. கன்னி விரும்பும் பொருட்களைப் படைத்து அதனுடன் ரிப்பன், சீப்பு, மாலை பால்வைத்தல், கன்னி ஒருவரின், மேல் சாமி வந்து மணமகன் மணமகள் கழுத்தில் மாலைகளை அணிவித்துப் பாலைக் குடிக்க கொடுத்தல்.</td></tr>
<tr><td>அ. ச.</td><td>1. மாப்பிள்ளை அழைப்பு/வனவாசம் மேற்கொள்ளுதல்.
2. பெண் வீட்டின் வாயிலில் குடிக்கப் பால் கொடுத்தல்.
—
—
—</td><td colspan="2">1. பெண்ணை அழைத்துச் செல்வதாயின் பெண்ணுடன் குத்துவிளக்கு, பால், இனிப்புப் பொருட்களைக் கொடுத்து விடுதல்.
2. மாப்பிள்ளை பெண் வீட்டிற்கு வருவதாயின் பெண்ணின் தந்தை, சகோதரர் மற்றும் உறவினருடன் சென்று வரவேற்றல்.
3. பெண்ணின் தந்தை எதிர்மாலை போட்டு வரவேற்றல்.
4. பெண்ணின் சகோதரர் தங்கச் சங்கிலி அல்லது மோதிரம் அணிவித்தல் சிலர் குங்குமத்தால் பொட்டிடுதல்.
5. சுமங்கலிப் பெண்/பெண்ணின் சகோதரியால் ஆரத்தி எடுக்கப்படுதல்.</td><td>1. மாப்பிள்ளை வீட்டினர் பெண் வீட்டிற்குப் புறப்பட்டுச் செல்லுதல்.
2. ஊரின் எல்லையில் மாப்பிள்ளை வீட்டாரைப் பெண்வீட்டார் வரவேற்று கருப்புக் கட்டி தண்ணீர் கொடுத்து வரவேற்றல்.
—
—</td></tr>
</table>

சடங்குகள்	மு. பி.	பி. பி.	மி. பி. பி.	தா. பி.
கா. யா. செ.	1. மாப்பிள்ளை இடையைப் பிடித்துக் கொண்டு பிள்ளையார் கோவிலுக்குச் செல்ல பெண்ணின் தந்தை உறவினருடன் சென்று அழைத்து வருதல்.	—	—	மாப்பிள்ளை, பெண் இருவரையும் ஊர்க் கோவிலுக்கு அழைத்துச் சென்று மாலை அணிவித்தல்.
பா. பூ. செ.	2 காசியாத்திரை சென்று வந்த மணமகனைப் பெண்ணின் தாய் ஆறு சுமங்கலிகளுடன் வாயிலில் நின்று வரவேற்று மணமகனது காலைக் கழுவி சந்தனம், குங்குமம் இடுதல்.	1. கால் புடவை எடுத்து பெண்ணின் சகோதரி மாப்பிள்ளையின் பாதத்தில் விரித்துச் சுத்தம் செய்தல்.	பெற்றோருக்குப் பாத பூசை செய்தல்.	பெற்றோருக்குப் பாத பூசை செய்தல்.
		2. பெற்றோருக்குப் பாதபூசை செய்தல்.	—	பெண்ணின் சகோதரி மாப்பிள்ளையின் காலுக்குப் பாத பூசை செய்தல்.
மா. ச:	3. மாமன் தன் கழுத்தில் கிடக்கும் மாலையைக் கழற்றி மணமகளுக்கு அணிவித்தல்.	1. தந்தையின் கழுத்தில் அணியப் பெற்ற பூணூலைக் கழற்றி மணமகனுக்கு அணிவித்தல்.	1. மாமன் வெற்றிலையைச் சுருட்டி மூன்று முறை மஞ்சள் நீரில் நனைத்துப் பெண்ணின் தலையில் தெளித்தல்.	
	—	2. மாமன் சடங்கின் போது காப்புக் கட்டுதல்.	2. முளை தெளிக்கப்படுதல்.	
	—	3. முளை தெளிக்கப்படுதல்.	—	—
	—	4. அலந்தரம்பண்ணுதல்	—	—
ஊ. ஆ:	1, திருமணம் முடிந்த பின்னர் மணமக்கள் தம்பதி ஊஞ்சல் ஆடுதல்.	1. திருமணத்திற்கு முன்னர் மணமகள் கன்னி ஊஞ்சல் ஆடல்.	—	—
		2. மணமகன் எதிர்பக்கம் அமர்ந்திருக்க ஒருவரை ஒருவர் பார்த்தல். ஒருவரை மற்றவருக்குப் பிடிக்காவிடில் திருமணம் நின்று விடும்.	—	—

சடங்குகள்	மு. பி.	பி. பி.	மி. பி. பி.	தா. பி.
து. வை.	மணமகளின் தந்தை தருப்பைப் புல்பாயில் அமர, அவர் மடியில் மணமகள் அமர்தல்	—	—	—
	2. மணமகளின் தலையில் தருப்பையிலான வளையத்தை மணமகள் வைத்து அதன் மேல் தாலியையும் நுகத்தடியையும் வைத்து நுகத்தடி துவாரத்தின் வழி நீர் வார்த்தல்	—	—	—

3. திரு. பி. ந. ச.

சடங்குகள்	மு. பி.	பி. பி.	மி. பி. பி.	தா. பி.
நா. ந. ச.	1 ஓடும் நீரில் மணமக்களின் காப்பை அவிழ்த்து விடுதல். 2. மணமகன் வீட்டிற்குச் சென்ற மணமகளிடம் ஆண்குழந்தை கொடுக்கப்படுகிறது. அவர்கள் படுக்கும் கட்டிலில் ஆண் குழந்தை கிடத்தப்பட்டு எடுக்கப்படுதல்.	1. மணமக்கள் மணமேடையில் அமர்ந்தும் நாவிதன் மூன்று முறை தாம்பாளத்தில் அரிசி வாழைக்காய் இரண்டையும் போடச் சொல்லுதல். 2. அள்ளிப் போட்டவைகளின் மேல் மணமக்கள் கைகளை வைக்க நாவிதன் காப்பை அவிழ்த்தல், 3. முளைகளை முதிய சுமங்கலியர் நீர் நிறைந்த செழிப்பான இடத்தில் போடுதல்.		
உ. ச.	—	—	—	1. மாமன் சடங்கின் போது அள்ளிப் போட்ட நவதானியங்களை மணமக்கள் மறுநாள் உரலில் குத்துதல்.

இறப்பு

சடங்குகள்	மு. பி.	பி. பி.	மி. பி. பி.	தா. பி.
இ. ச.	1. ஒன்பதாம் நாள் சடங்கின் போது ஐயர் பிரிவினர் சிவன் கோவிலிலிருந்தும் ஐயங்கார் பிரிவினர் கிருஷ்ணன் கோவிலிலிருந்தும் கல் எடுத்து வந்து புதைத்த இடத்தில் நடுதல்.	1. தருப்பையிலான மோதிரம் அணிதல்		
	2. அதனுடன் நிறைநீர், நிறைநாழி நெல் மற்றும் சாதம் படைத்தல். 3. இரவில் உப்பிலாது, ஒற்றை எண்ணிக்கையில் அப்பம், முறுக்கு, பொங்கல் ஆகியவற்றைப் படைத்துக் கும்பிடுதல். 4. பத்தாம்நாளில்முதல் நாள் வைத்த கல்லைக் கொள்ளி வைத்தவர் எடுத்துச் சென்று ஆற்றில் போடுதல். 5. பதினோராவது நாள் இறந்தவர் வயதிலுள்ள ஒருவரை அழைத்து வந்து இறந்தவருக்கு விருப்பமான சமையல் செய்து கொடுத்து, வேட்டி, செம்பு, தம்ளர் பணம், போன்றவற்றைக் கொடுத்து அனுப்புதல். 6. மீதம் உள்ள சாப்பாட்டை ஆற்றில் கரைத்து விடுதல்.	2. ஓமம் வளர்த்து வேதியருக்கு மாலை அணிவித்து அரிசி மாவால் பதினாறு சந்ததியனரை நினைவு கூரும் வகையில் உருவப் பொம்மைகள் செய்து அனைத்தையும் எடுத்துக்கொண்டு காசி காசி என்று சொல்லி கடலில் கரைத்தல். 3. ஆண் மக்களுக்குத் தண்ணீர் ஊற்றுதல். 4. இறந்தவருக்கும் அவரது இரண்டு தலை முறையினருக்கும் என மூன்று இலைகளில் உணவு படைத்து வழங்குதல். 5. உறவினர் அனைவரும் சமையல் பொருட்களுடன் சேர்ந்து வந்து இறந்த குடும்பத்தினருக்கு எண்ணெய் தேய்த்து குளிப்பாட்டுதல். 6. உறவினர் கொண்டு வந்த பொருட்களைக் கொண்டு உணவு சமைத்து ஊர் மக்களுக்குப் போடுதல். 7, மாலையில் சுடுகாட்டிற்குச் சென்று பாலும், சுண்ணாம்பும் தெளித்து வருதல். 8, நாவிதனால் பந்தலில் உணவு சமைக்கப்பட்டு சோற்றுடன் வேறுசில பொருட்களையும் பாத்திரத்தில் வைத்து மூடி நாவிதன் சுடுகாட்டிற்கு முதலில் செல்ல பின்னர் உறவினர் செல்லுதல். 9, இறந்தவரின் நினைவாக அரங்கு கல் புதைத்து வருதல் 10. இறந்த குடும்பத்தாருக்கு உறவினரால் கோடி போர்த்தப்படுதல்.		

சடங்குகள்	மு. பி.	பி. பி.	மி. பி. பி.	தா. பி.
	7. தலை மகன் தன் மனைவியுடன் அருகிலுள்ள வீட்டிற்குச் சென்று மந்திரம் சொல்லிய பின்னர் தங்கள் வீட்டிற்கு வந்து பஞ்சகவ்வியம் தெளித்தல்.	—	—	—
	8. பன்னிரண்டாம் நாளில் ஏழை எளியவர் ஐவரை அழைத்து வந்து பாயசம், குடை, செருப்பு, செம்பு, வேட்டி துண்டு போன்றவையும் சாப்பாடும் கொடுத்து அனுப்புதல்.	—	—	—
	9. பதின் மூன்றாவது நாளில் வேதியரை அழைத்து வந்து ஓமம் வளர்த்து, வீடுமுழுவதும் தீர்த்தம் தெளித்து உணவு சமைத்து வேதியருக்கு முதலில் சாப்பிடக் கொடுத்தல்.	—	—	—

முடிவுரை:

தமிழரது பண்பாடானது அடிப்படையில் நிலை பேறு பெற்றும் பல்வேறு தாக்கங்களில் பல்வேறு கால கட்டங்களில் ஓரளவு மாற்றத்திற்குள்ளாகியும் இருந்து வருவதை வரலாற்றின் வாயிலாகவும் எழுத்திலக்கியங்கள் வாயிலாகவும் மட்டுமில்லாது நாட்டுப்புற இலக்கியங்கள், நம்பிக்கைகள் அவற்றோடு இணைந்து வழங்கும் சடங்குகள் போன்றவற்றின் வாயிலாகவும் அறிந்து கொள்ள முடியும் என்பதை இச்சிறு ஆய்வுக்கட்டுரை படம் பிடித்துக்காட்டியுள்ளது. பல்லாற்றானும் வளர்ந்த நிலையிலேயே வலுவான பாரம்பரியத்தைக் கொண்டு விளங்கும் எந்தவொரு சமுதாயமும் அதனது அடிப்படை அமைப்பினையும் நெறி முறைகளையும் தொடர்ந்து பின்பற்றும் என்பது சமுதாய - பண்பாட்டு வரலாறு காட்டும் உண்மையாகும், இந்நிலையில் தமிழ்ச் சமுதாயம் இத்த கைய பண்பினைக்கொண்டு விளங்குவதும் எடுத்துக்காட்டுவதும் உற்று நோக்கத்தக்கது - ஆராயத்தக்கது. அதுவும் குறிப்பாக, தமிழைத்தம் வாழ்வியல் அமைப்பும் நெறிமுறை களும் ஆக நிலையில் நிலைப்பேறு கொண்டு விளங்குவது இச் சமுதாயத்தின் தொன்மை யையும் பண்பட்ட வாழ்வியலையும் எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது குறிப்பிடத் தக்கது.

துணை நூல்கள் – கட்டுரைகள்

அறவாணன், க. ப. (1990) **பண்பாட்டுப் படையெடுப்புக்கள்** பாரி நிலையம்; சென்னை.

பக்தவச்லபாரதி, சீ. (1990) **பண்பாட்டு மானிடவியல்** மணிவாசகர் பதிப்பகம்; சிதம்பரம்

Karunakaran K. & Jeya, V. (1991) 'Social stratification of folk beliefs in Tamil' **Journal of Asian Studies** (9-1:113-134) Institute of Asian Studies; Madras.

William H, Harries & Judith S. Levey (eds) (1975) **The New Columbia Encyclopaedia** CUP : London.

சுருக்கக் குறியீட்டு விளக்கம்

மு. பி.	—	முற்படுத்தப்பட்ட பிரிவினர்
பி. பி.	—	பிற்படுத்தப்பட்ட பிரிவினர்
மி. பி. பி.	—	மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவினர்
தா. பி.	—	தாழ்த்தப்பட்ட பிரிவினர்
கு. பி. மு. ந. ச.	—	குழந்தை பிறப்பிற்குமுன் நடைபெறும் சடங்குகள்
மூ. மா. ச.	—	மூன்றாம் மாதச் சடங்கு
ஐ. மா. ச.	—	ஐந்தாம் மாதச் சடங்கு
வ. கா. ச.	—	வளைகாப்புச் சடங்கு
அ. ப. ச.	—	அறி பழச் சடங்கு
சீ. ச.	—	சீமந்தச் சடங்கு

ம. நி. பு.	—	மடி நிறைத்துப் புறப்படுதல்
கு. பி. பி. ந. ச.	—	குழந்தை பிறப்பிற்குப் பின் நடைபெறும் சடங்கு
தீ. க.	—	தீட்டுக் கழித்தல்
பெ. இ.	—	பெயர் இடல்
சே. கொ.	—	சேனை கொடுத்தல்
பூ. பு. நீ. வி.	—	பூப் புனித நீராட்டு விழா
தி. மு. ந. ச.	—	திருமணத்திற்கு முன் நடைபெறும் சடங்குகள்
மு. கா. ந.	—	முகூர்த்தக் கால் நடல்
பி. ச.	—	பிரார்த்தனைச் சடங்கு
தி. போ. ந. ச.	—	திருமணத்தின் போது நடைபெறும் சடங்கு
அ. ச.	—	அழைப்புச் சடங்கு
கா. யா. செ.	—	காசி யாத்திரை செல்லல்
பா. பூ. செ.	—	பாத பூஜை செய்தல்
மா. ச.	—	மாமன் சடங்கு
ஊ. ஆ.	—	ஊஞ்சல் ஆடல்
நு. வை.	—	நுகத்தடி வைத்தல்
தி. பி. ந. ச.	—	திருமணத்திற்குப் பின் நடைபெறும் சடங்கு
நா. நீ. ச.	—	நாலாம் நீர் சடங்கு
உ. ச.	—	உலக்கைச் சடங்கு
இ. ச.	—	இறப்புச் சடங்கு

அறிவுக் கோட்பாடு

'அறிவைப் பற்றி ஆராய்ந்து கண்ட முடிவுகளின் தொகுப்பினை அறிவுக் கோட்பாடு என்பர். அறிவின் இயல்பு அறிவைப் பெறுவதற்கான வழிகள், அறிவின் ஏற்புடைமை, அறிவின் பயன் என்பன பற்றி எழும் சிக்கல்களுக்கு விளக்கம் தேட முற்படுவது அறிவுக்கோட்பாடு. ஆராய்ந்து பார்க்கும் எந்த இயலையும் அறிவியல் என்பர். எந்தக் கருப் பொருள் ஆராயப் படுகின்றதோ அந்தக் கருப் பொருளின் பெயரால் அவ்வறிவியல் அழைக்கப்படுவது இயல்பு. சமூகத்தைப்பற்றி ஆராய்வது சமூக அறிவியல்; விலங்குகளைப் பற்றி ஆராய்வது விலங்கியல்; பொருளாதாரச் சிக்கல்களை ஆராய்வது பொருளியல்; அரசின் அமைப்பு, செயல் தொடர்பு பற்றி ஆராய்வது அரசியல் அதுபோல் அறிவு பற்றிய சிக்கல்களைக் கருப் பொருளாகக் கொண்டு ஆராய்வது 'அறிவு அறிவியல்; அவ்வாராச்சியின் முடிவாக உருவாக்கப்படுவது அறிவுக் கோட்பாடு'

தத்துவ அறிஞர்கள் முதலில் அறிவுக் கோட்பாட்டை உருவாக்குகின்றனர். பின்னர் அக் கோட்பாட்டிற்கு முரண்படாத வகையில் தத்துவ விளக்கங்களை அடுக்குகின்றனர். எனவே ஒரு தத்துவ மாளிகையின் அடித்தளமாக இருப்பது அத்தத்துவத்தில் இடம் பெறும் அறிவுக் கோட்பாடே என்று துணிந்து கூறலாம்.

க. நாராயணன்
'தமிழர் அறிவுக் கோட்பாடு'

மெய்யியலில் 'எபிஸ்ரமோலஜி' (Epistemology) என்னும் பிரிவு உள்ளது. அதையே அறிவுக்கோட்பாடு என்பர். தமிழர் அறிவுக் கோட்பாடு இத்துறை பற்றிய தமிழ்நூல்.

சமூகவியல் நோக்கில் சமயமும் சடங்குகளும்

மூலம் : ஜே. இ. கோல்ட்தோப்
தமிழில் : க. சண்முகலிங்கம்

(J. E. Goldthorpe என்பார் ஆங்கிலத்தில் எழுதிய An Introduction to Sociology என்ற நூலின் 201 முதல் 207ம் பக்கம் வரையுள்ள பகுதியிலுள்ள கருத்துக்களைத் தழுவி எழுதப்பட்டது இக்கட்டுரை. கோல்ட்தோப் பிரித்தானிய நாட்டைச் சேர்ந்த பிரபல சமூகவியலாளர்)

நம்பிக்கைகள் (அவற்றோடு இணைந்த செயல்முறைகள் ஆகியவற்றின் ஒழுங்கமைக்கப்பட்ட வடிவமே சமயம் என்கிறார் எமிலி தைர்கைம் (Emile Durkeim), சமயச் செயல்முறைகள், சடங்குகள் ஆகியவை தோன்று முன்னர் சமய நம்பிக்கைகள் தோன்றியிருக்க வேண்டும், ஏனெனில் குறித்த ஒரு வகை செயல்முறைகளை மக்கள் ஏன் பின்பற்ற வேண்டும், ஏன் அச்செயல் முறைகள் இன்னொரு விதமாக அமைந்திருக்க முடியாது என்பன போன்ற விளக்கங்களை சமய நம்பிக்கைகளின் அடியாகவே புரிந்து கொள்ளலாம். சமயம் பற்றிய சமூகவியல் நோக்கு யாது என்பதை நாம் தெளிவாக வரையறை செய்து கொள்ளல் வேண்டும். சமய நம்பிக்கைகளின் உண்மை பொய் பற்றிச் சமூகவியலாளர்கள் அக்கறை கொள்வதில்லை. தனிப்பட்ட ஒரு சமூகவியலாளன் ஒரு மதத்தில் நம்பிக்கை கொண்டிருக்கலாம், அதன் கருத்துக்களோடு மாறுபடலாம் அல்லது அக்கருத்துக்கள் பற்றி முடிவானதும் தெளிவானதுமான எண்ணம் - நம்புவதா இல்லையா என்ற கருத்து - தன் மனதில் இல்லை என்று கூறலாம். பெரும்பாலான சமூகவியலாளர்கள் அறியொணாக் கொள்கையினரே (Agnostic in Matters of Religion) சமூகவியல் நோக்கு முறை சந்தேகம், ஐயப்பாடு, புத்தகவாத மறுப்பு (Anti-dogmatic) ஆகியவற்றினை அடிப்படையாகக் கொண்டதொன்றே. ஆனால் சிறந்த சமூகவியலாளர் பலர் சமயப்பற்றுடையோராகவும் இருந்துள்ளனர். ஆகவே, தனிப்பட்ட சமூகவியலாளனின் நம்பிக்கைகள் பிரச்சினைக்குரிய விடயங்களன்று. ஒரு நம்பிக்கையின் உண்மை பொய் அல்லாது அதன் சமூக விளைவுகளே சமூகவியலின் ஆய்வுப் பொருள், ஒரு உதாரணத்தை மட்டும் பார்ப்போம். 'கடவுள் ஒரே ஒருவர்தான் இருக்கிறார்', என்ற கருத்தை உண்மை அல்லது பொய் என நிருபிப்பது கடினம். கிறிஷ்தவர்களும், முஸ்லிம்களும் இக் கருத்தை முழுமனதாக ஏற்பர். முற்காலக் கிரேக்கர்களும் மரபுவழிப்பட்ட பகண்டா சமூகத்தினரும் (Baganda) இதை மறுத்துரைப்பர். 'கடவுள் ஒருவரே அவர் பல திருவுருவங்களில் தோன்றுகிறார்' என்று இக்கூற்றுக்கு விளக்கம் தருவதற்கு இந்துக்கள் முனைவர். சமூகவியலாளனைப் பொறுத்தவரை, ஆய்வாளன் என்ற முறையில், இக்கூற்றின் உண்மை பொய்பற்றி அக்கறை கொள்ள மாட்டான். இக்குறித்த நம்பிக்கைக்கும் அந்த நம்பிக்கையை உடையோரின் செயல்களுக்கும் உள்ள தொடர்பைக் கண்டறிவதே அவனது அக்கறையாகும். உதாரணமாக ஒரே கடவுள்தான் இருக்கிறார் என்று நம்புபவர்கள் பல கடவுளர் வணக்கம் உடையோருடன் (Polytheists) வாதப் பிரதிவாதங்களில் ஈடுபட விரும்புகிறார்களா? பிற மதத்தவர்களின் சிலைகளை உடைப்பதற்கும் புனிதப் பொருட்களை நாசம் செய்வதற்கும் அவர்களை அந்நம்பிக்கை

தூண்டுகிறதா? ஒரு கடவுட் கொள்கை யுடையோரான முஸ்லிம்களும், கிறிஸ்தவர் களும், பலகடவுட் கொள்கையுடையோ ரான ஆபிரிக்கர்களும் எவ்விதம் பிறர் கொள்கைகளுக்கு முகம் கொடுக்கின்றனர்? என்பன போன்ற கேள்விகளையே ஒரு சமூக வியலாளன் கேட்கிறான். நம்பிக்கைகள் உண்மையாகவோ பொய்யாகவோ அமையலாம். ஆனால் அவை சமூக உண் மைகள் (Social facts) யதார்த்தமாக உள் ளவை. உறவுமுறை அமைப்புக்கள் (Kinship Systems) சட்டங்கள் ஆகிய சமூக உண்மைகளை எவ்விதம் ஆராய்கின் றோமோ அவ்விதமே சமய நம்பிக்கை களும் சமூக உண்மைகள் என்ற வகையில் நோக்கப்படும். அதுவே சமயம் பற்றிய சமூகவியல் நோக்குமுறை.

மந்திரச் சடங்குகள் மனிதரிடத்தில் உள்ள பயத்தைப் போக்கவும் அவர்களிடம் மன உறுதியை வளர்க்கவும் பயன்படுகின் றன என்பதை நாம் அறிவோம். அவை போன்றே சமயச் சடங்குகளும் மனித மனத்தில் இருந்து பயம், கலக்கம் ஆகிய உணர்வுகளைப்போக்கி நம்பிக்கையையும் உறுதியையும், மனச்சாந்தியையும் தருகின் றன. சமயம் அளிக்கும் 'உறுதிப் பயன்கள்', 'திறன்கள்' நான்கு என நடேல் (Nadel) வகுத்துரைக்கிறார். (சமயத்தின் உறுதிப் பயன்கள், திறன்களை குறிப்பிடுவதற்கு Competences, 'Capacities' என்ற பதங்களை நடேல் உபயோகிக்கிறார்)உறுதிப் பயன்கள் அல்லது திறன்கள் என்பதால் அவர் கருதுவது யாது? சமய நம்பிக்கைகளின் விளைவுகள் என்ன? மனிதர்களை அவை எவ்விதம் பாதிக்கின்றன? மனிதர்களின் விருப்புக்கள். தேவைகள், நோக்கங்கள் ஆகியவற்றை அவை எவ்விதம் நிறைவேற் றுகின்றன? இவற்றையே நடேல் உறுதிப் பயன்கள் அல்லது திறன்கள் என்கிறார்.

சமயத்தின் உறுதிப் பயன்கள் நான்கையும் பின்வருமாறு அவர் வகைப்படுத்தினார்.

1. பிரபஞ்சம் சார்ந்தவை (Cosmological) மனிதன் கொண்டிருக்கும் உலகு பற் றிய பார்வைக்கு சமயம் அளிக்கும் பங்களிப்பாக பிரபஞ்சம் பற்றிய சமயக் கருத்துக்களைக் கொள்ளலாம்.

2. அறக்கோட்பாடுகள்;
   மனிதன் கைக்கொள்ள வேண்டிய ஒழுக்க நெறிகள் இவற்றுள் அடங்கும்.

3. சமூகக் கட்டுப் கோப்பு;
   ஒரு சமயத்தைப் பின்பற்றுபவர்களை ஒன்றிணைக்கவும், சமூகக் கட்டுக் கோப்பை பேணவும் நிலை நிறுத்தவும் சமயம் துணை செய்கிறது.

4. தனிநபர் பெறும் சமய அனுபவம்:
   தனிநபருக்குச் சமயம் அளிக்கும் அனு பவம், உணர்வு.

சமய பிரபஞ்சம், இயற்கை ஆகிய இரண்டுடனும் தொடர்புடையதாகவே உள்ளது. பிரபஞ்சம் எத்தகையது? அதன் தோற்றம், முடிவு என்ன? அதில் மனித னின் இடம் யாது? என்ற கேள்விகள் மனிதனை அரித்த வண்ணம் உள்ளன. ஏனெனில் இயற்கைச் சக்திகள் மனித வாழ்வை என்றும் பாதித்த வண்ணம் உள்ளன. மனிதன் தன் அனுபவங்களை தொடர்புபடுத்துவதன் (relativise) மூலம் பிரபஞ்சம் குறித்த சமய சிந்தனை உரு வாகும். உலகின் இயல்பு என்ன? அதில் நமது பங்கு என்ன? உலகிற்கு அப்பால் உள்ள பிரபஞ்சம் எத்தகையது? அது எம் மீது கருணை கொண்டதா? வஞ்சம் தீர்க்கும் எண்ணமுடையதா? அல்லது எம்மீது அக்கறையோ விருப்பு வெறுப்போ அற்றதா? வெள்ளப்பெருக்கு, கடும்வரட்சி, நோய் நொடி இவை யாவும் எம்கருத்துக் கெட்டா திட்டம் ஒன்றின் விளைவுகளா? நம்புலன்களால் அறியப்படாத, எமக்கு எட்டாத இயற்கை உண்மைகள் உளவா? இது போன்ற விசாலமானதும், தெளிவற்றதுமான பல கேள்விகள் மனித னைக் குழப்புகின்றன. இக்கேள்விகளுக் கான விடைகள் மூலம் நம்பிக்கையும் உறுதியும் பெற அவன் முயல்கிறான். சமயம் இப்படியான கேள்விகளுக்கு பதில்களை கொடுத்து வருகிறது. அதன்

மூலம் மனிதனின் தேவையொன்றை ஈடேற்றி வருகிறது.

இத்தகைய கேள்விகளும், சஞ்சலங்களும் மிக வெளிப்படையாக தோற்றமளிக்கும் தருணம்தான் மரணம். தன் உற்றார் உறவினர், நண்பர்களின் இறப்பைக் காணும் போது ஏற்படும் கலக்கமும் என்றோ ஒரு நாள் எனது முடிவும் வந்து சேரப்போகிறதே என்ற எண்ணமும் மரண பயத்தை மனிதனிடத்தில் தோற்றுவிக்கின்றன. மரணம் பற்றிய பயத்தைக் குறைக்கவும் மனச்சாந்தி நம்பிக்கை ஆகியவற்றை உருவாக்கவும் சமயம் உதவுகிறது. எல்லாச் சமயங்களிலும் மரணம் பற்றிய ஆய்வு இடம் பெற்றிருப்பது வெறும் தற்செயலான விளைவு அல்ல. உயிருள்ள உடம்பு என்ற நிலைமாறி உக்கி அழியும் சதைப்பிண்டம் என்ற நிலையை மனித உடம்பு அடையும் போது அந்த மனித உடலை சுகாதாரக் கேடற்ற முறையில் அப்புறப்படுத்தும் செயலை சமூகநிலையிலும் மனித உளவியல் நிலையிலும் ஏற்புடையதானதாக அமையச் செய்யும் தேவையின் அடியாகவே ஒவ்வொரு சமூகத்தினதும் மரணச் சடங்குகள் அமைந்துள்ளன. மனிதனின் ஆளுமை இறப்பின் பின்னும் தொடர்ந்து நீடிப்பதான எண்ணத்தின் மீது அமையும். நம்பிக்கைகள் சர்வ வியாபகமானவை. ஏனெனில் மனிதன் ஒருவனின் மரணத்தால் எழும் இழப்பு, துயரம் என்பதை விட அந்த மரணத்தின் பின் எழும் சூன்யம் பற்றிய எண்ணம் அவனது உற்றார் உறவினர்களாலும் பிறராலும் தாங்க முடியாதவொன்று. இதனால் பேய் பிசாசுகள் பற்றியும், பிரியும் உயிர்களின் ஆவிகள் எடுக்கும் வடிவங்கள் பற்றியதுமான நம்பிக்கைகள் எழுகின்றன. மனிதன் பிரபஞ்சம் பற்றிக் கொள்ளும் இவை சிந்தனை முறையை பொறுத்ததாயும். அமையும் உதாரணமாக உயிரின் மறுபிறப்புக் கோட்பாடு உயிர் பல்வேறு வடிவங்களில் மீண்டும் மீண்டும் பிறவி எடுக்கிறது எனக்கூறும். இதற்கு மாறாக இந்த உலகை விட்டுப் பிரியும் போதும் உயிர்கள் யாவும் ஏதோ ஒரு இடத்திற்கு (சுவர்க்கத்திற்கு) சென்றடைகின்றன என்று கருதும் சிந்தனை முறைகளும் உள்ளன.

உயிரின் தோற்றம், இறப்பு, பிரபஞ்சத்தில் மனிதனின் இடம் ஆகிய விடயங்களுக்கான பதிலைச் சமயம் அளிக்கிறது. சமயமும் விஞ்ஞானமும் ஒன்றல்ல. சமயம் அறிவியல் ஆய்வின் அடிப்படையைக் கொண்டதல்ல. அது கூறும் பிரபஞ்சக் கோட்பாட்டை (Cosmology) அறிவியலின் பிரபஞ்சக் கோட்பாடோடு குழப்பக் கூடாது. தரவுகளைப் பெறுதல், அவதானித்தல், தொகுத்தும் பகுத்தும் முடிவுகளைப் பெறுதல், என்ற முறையில் அமைவது அறிவியல். சமயம் மனிதன் துயரத்தால் அழும்போது அவனிற்கு ஆறுதல் தரும் விளக்கங்களைத் தருகிறது. அத்தகைய விளக்கத்தை தரும் ஆற்றல் அறிவியலுக்கு இல்லை. தனக்கு நெருக்கமான ஒருவரை இழந்து ஏங்கும் ஒருவனிற்கு, சுவர்க்கம் என்று ஒன்று உண்டா? அது மேலே உள்ளதா? கீழே உள்ளதா? என்று கேட்பதோ சூரியக் குடும்பம் (Solar System) பற்றி நாம் அறிந்த உண்மைகளோடு சேர்த்துப் பார்க்கும்போது சுவர்க்கம் என்பதற்கு அர்த்தம் எதுவும் இல்லையே என்று தர்க்கிப்பதோ பிரயோசனமற்றது மட்டுமல்ல இரக்கமற்ற செயலும் ஆகும். பிரிவுச் சோகத்தால் துடிக்கும் ஒருவன் இறந்த மனிதனின் ஆன்மா நல்லதோர் பேற்றை நிலையை அடைந்தது என்று சொல்வதையே விரும்புவான்.

சமயங்கள் பெரும்பாலும் அறநெறிகளைப் போதிப்பன. ஆனால் இது பொதுப்பட்ட ஒரு கூற்று மட்டுமே. சமயம்-அறநெறி உறவு சிக்கலானது. கிறிஷ்தவம், இஸ்லாம் போன்ற யூதேய மரபுவழிபட்ட சமயங்கள் அறநெறியை மிக வன்மையாக அழுத்திச் சொல்பவை. பத்துக் கட்டளைகளை சமூகத்தின் ஒழுக்கநெறிச் சட்டமாக விளக்கலாம். இவை தெய்வததால் விதிக்கப்பட்டவை. மறு உலக வாழ்வில் தீய செயல்களுக்கு தண்டனையும் நற்செயல்களுக்கு நன்மையும் கிட்டும். புத்த சமயமும் அறநெறியை அடிப்படையாகக் கொண்டது. அதன் மூல உருவில் புத்த

சமயம் தர்மம் பற்றியதே தான். கௌதம புத்தர் போதனைகளின் படி நற்செயல்களை செய்பவனே மனச் சாந்தியையும் இவ்வுலக வாழ்வின் துன்பங்களுக்கு விடிவையும் காண்பான். அம்மதத்தில் கடவுள், ஆவிகள், என்ற கருத்துக்களுக்கு இடம் இல்லை. சடங்குகளையும், ஆசாரங்களையும் புத்த சமயம் கடமைகளாக விதிக்ககவில்லை.

சில மதங்களில் அற ஒழுக்கத்திற்கும் சமய வாழ்க்கைக்கும் இடையில் கிட்டிய தொடர்பு இருப்பதில்லை. சில வேளை முற்றாகவே இரண்டும் வெவ்வேறானவையாக இருக்கலாம். ஆபிரிக்காவின் மரபு வழிப்பட்ட சமயங்களை இதற்கு உதாரணமாகக் கூறுதல் இயலும். அங்கே நல்ல ஒழுக்க நெறிகளைக் கடைப்பிடித்தல் உறவு முறை அமைப்புடன் (Kinship System) தொடர்புபட்டது. உற்றார் உறவினர்களிற்கு ஒருவன் செய்ய வேண்டிய கடப்பாடுகளின் தொகுப்பே அறநெறிகள். அவை கடவுளரின் கட்டளைகள் அல்ல. அறம் என்ற நோக்கில் நூபியர்களின் சமயம் ஒழுக்க முரணானது என்ற முடிவுக்கு வருகிறார். நடேல் (Nadel) இதேபோன்றே பாலொவுட், ரூவாண்டா, அஷாந்தி போன்ற குழுக்களின் சமயங்களில் ஒழுக்கம், அறம் என்பனவற்றிற்கு மாறான அம்சங்கள் இருப்பதை பிற ஆய்வாளர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

புராதன கிரேக்கர்கள், உரோமர்கள் வடமேற்கு ஐரோப்பியர்கள் ஆகியோரின் சமய நம்பிக்கைகளில் சமயம் - அறநெறித் தொடர்பு வேறொரு விதத்தில் அமைந்துள்ளது. அவர்களின் தெய்வங்களில் சில நல்லவை. சில துட்டத்தனம் கொண்டவை. தடை செய்யப்பட்ட உறவு முறையினருடன் புணர்ச்சி, கொலை, துரோகச் செயல் போன்ற மனிதர்களால் வெறுக்கப்பட்ட செயல்களை இத்தெய்வங்கள் செய்தன. தெய்வங்களின் ஒழுக்க நெறி வேறு. தெய்வங்கள் செய்யக்கூடிய செயல்களை மனிதன் செய்யலாம் என்பதில்லை; மனிதனுக்குத் தீயன என விலக்கப்பட்ட செயல்கள் உள என்பது இந்துப் புராணக் கதைகளின் உட்பொருளாக இருக்கலாம். இந்து சமமத்திலும் சமய நம்பிக்கைக்கும் அறநெறிக்கும் இடையிலான தொடர்பு சிக்கலானது. ஆக்கும் தெய்வங்களும் உள. அழிக்கும் தெய்வங்களும் உள. பிரபஞ்சத்தின் எல்லா அம்சங்களையும் குறியீட்டு முறையில் விளக்கும் தெய்வ அம்சங்கள் இந்து மதத்தில் உள்ளன. உயர் சாதியில் பிறப்பதும் தாழ்ந்த சாதியில் பிறப்பதும் முற்பிறவியில் செய்த நல்வினை தீவினைப் பயனேயாகும். அறநெறி கோட்பாடுகள் யாவருக்கும் பொதுவானவையல்ல. ஒருவன் எச்சாதியில் பிறக்கின்றானோ அச்சாதியின் ஒழுக்கத்தையும் கடமையையும் பேணுவதே அற ஒழுக்கம். ராஜபுத்திரர்கள் வீரமும் போர் வலியும் உள்ளவராய் இருப்பது அவர்கள் குலக் கடமை. அதேபோல் பிராமணர்கள் பக்தியும், கல்வி நாட்டமும் மிக்க வாழ்வை நடத்த வேண்டும். சமயக் குருமார் ஒவ்வொருவருக்கும் ஏற்ற விசேட ஒழுக்க நெறியைக் கூட சொல்லக் கூடும். ஒரு பக்தன் வாரத்தில் மூன்று நாள் விரதம் அனுட்டிக்கும் தேவையும் இன்னொருவன் கங்கை நதி தீரத்தைக் கால்நடையில் சென்றடைந்து தன் பாவங்களிற்குப் பரிகாரம் காண வேண்டியிருக்கலாம். இதனால் எல்லா இந்துக்களும் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டிய பொது ஒழுக்க நெறிகள் இவைதாம் எனக் கூறுதல் கடினம்.

ஒவ்வொரு சமயமும் அற ஒழுக்கம் பற்றிய கருத்தமைவைக் கொண்டிருப்பினும் சமயம் என்றால் ஒழுக்க நெறிதான் என்ற முறையில் நேரடிப் பிணைப்பை ஒரு பொது விதியாகக் கூறுதல் இயலாது. சமயத்திற்கும் ஒழுக்க நெறிக்கும் உள்ள தொடர்பு சிக்கலானது.

'சமூகத்தை ஒன்றிணைத்து அதன் கட்டமைப்பைப் பேணும்' திறன் சமயத்தின் மூன்றாவது பயன் என்கிறார் நடேல். தைர்கைம் DurKeim) தனது 'சமய வாழ்வின் தொடக்க நிலை வடிவங்கள்' (Elementary forms of the Religious life) என்ற நூலில் இக்கருத்தினை மிக விரிவாக விளக்கியுள்ளார். அவருடைய கோட்பாட்டை மிகச் சுருக்கமாக விளக்குவோம்.

சமூக கூட்டுணர்வை (Social Solidarity) வளர்ப்பதே சமயத்தின் சமூகப்பயன் என்பது தைர்கைம் கருத்து. ஒரு சமூகக்குழு ஒன்றினைந்து, தம் குழுவின் தெய்வத்தை குழுவிற்கு அப்பாற்பட்டவரான கடவுளை வழிபடும் பொழுது குழுவின் பிணைப்புக்களை வலுப்படுத்துகிறார்கள். அக்குழுவினர் ஒருவரோடு ஒருவர் கொள்ளும் உறவுகள் அவ்வழிபாட்டினால் பலப்படுத்தப்படுகின்றன. கலைகள், நாடகம் ஆகிய வலுவுடைய சாதனங்கள் சமயச் சடங்குகளில் பயன்படுத்தப்படும் போதும், ஆட்டமும் கூத்தும் விருந்தும் நிகழும் போதும், குழுவின் உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் பொதுவானவையும், மதிப்புக்குரிவையுமான விழுமியங்கள் போற்றுதலுக்குரியவையாகின்றன. அதன் மூலம் குழுவின் கூட்டுணர்வு மீள்உறுதி (reaffirmation) செய்யப்படுகிறது.

தைர்கைமின் சமூகவியல் கோட்பாட்டை செயற்பாட்டியல் நோக்கு (Functionlist View) என்பர். இசைவும் இணக்கமும் (Consensus) ஒருங்கிணைப்பு (Integration) ஆகியன செயற்பாட்டியலின் முக்கிய கருத்துக் கூறுகளாகும். சமயம் பற்றிய தைர்கைம் விளக்கம் செயற்பாட்டியல் அடிப்படையில் அமைந்தது. ஸ்பென்சர் (Spencer) ஜிலன் (Gillen) போன்றோர் விபரித்துள்ள ஆபிரிக்க ஆதிவாசிகளின் சமய வாழ்க்கையை தைர்கைம் உதாரணம் காட்டுகிறார். ஒரு குலச்சின்னத்தை (Totem) கொண்ட குழுவின் முழு உறுப்பினர்களும் சடங்கிலே பங்கு கொள்கிறார்கள். 'குழு தன்னைப் பற்றித் தான் கொண்டுள்ள உணர்வினை ஒன்று கூடல் மூலம் புதுப்பித்துக் கொள்கிறது' என்கிறார் தைர்கைம்.

இவ்விதம் குழு உணர்வை புதுப்பித்து வளர்த்தலையும் தற்காலத்திய சமயம் சாரச் சடங்காசாரம் ஒன்றால் விளக்குவோம். ஒரு பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவை நோக்குவோம். அங்கு என்ன நிகழ்கிறது. ஒரு குழுவின் ஒன்று கூடல் தான் அந்நிகழ்ச்சி. அங்கே அக்குழுவின் விழுமியங்கள் புலமைத் தகமையின் சான்றான பட்டமளிப்பில் வெளிப்படுகிறது. பட்டங்களை படிப்பு ஆராய்ச்சி மூலம் பெற்றவர்களின் ஐக்கியம், இணைப்பு, அக்குழுவின் தொடர்ச்சியும் நிலைபேறும் ஆகியன குறியீட்டு முறையில் திறம்பட அங்கே வெளிப்படுகின்றன. இசைவும் இணக்கமும் (Consensus) கொண்ட சமூகக் குழுக்களின் செயல் முறைகளில் அப்பண்புகள் துலக்மாகத் தெரியும்.

ஒரு சமூகத்திற்குள்ளேயே உட்பிரிவுகளை (denominations) கொண்டியங்கும் குழுவின் பூசல்களை ஆராயும் போதும் இவ்வுண்மை வெளிப்படும். ஒவ்வொரு உட்பிரிவும் சடங்குகள் மூலம தத்தம் விழுமியங்களை மீள் உறுதி செய்கின்றன. கிறிஷ்தவர்களும், கத்தோலிக்கர்களும், முஸ்லிம்களும், இந்துக்களும் தாம் ஒன்று கூடும் பொழுது வெளியே உள்ள பிற குழுவிற்கு எதிரான தம் ஒற்றுமையையே வெளிப்படுத்துகின்றனர். எனவே, சமயம் முழுச் சமூகத்தையும் (Community as a whole) ஒன்றாக இணைக்கிறது என்று கூற முடியாது. கருத்துப் பேதம், முரண்பாடு, மாற்றம் ஆகியவற்றின் அடிப்படையிலும் தைர்கைம் கருத்துக்களை விரிவுபடுத்தி விளக்கமுடியும். முரண்படும் தனிநபர் ஒருவன் தன்பக்கம் சிலரை இழுத்துச் செல்லலாம். அவ்வாறு உருவான குழுவின் கூட்டிணைவையும் ஐக்கியத்தையும் வேறுபட்ட சடங்குமுறை வெளிப்படுத்தும். ஒளிரும் ஆளுமை மிகு தலைமை (Charismatic leadership) என்னும் வெபர் (weber) கருத்தை தைர்கைம் கருத்துடன் இணைத்து விளக்கலாம்.

தனிநபர்கள் பெறும் மனப்பாங்குகள் தூண்டுதல்கள் என்பன நடேல் குறிப்பிடும் நான்காவது பயன். இதனை தனியாள் ஒருவரின் உளவியல் நோக்கியல் அவர் விளக்குகிறார். தனிநபர் வாழ்க்கையில் குமரப்பருவத்தின் போது ஏற்படும் சமய அனுபவம் சிந்தனை மாற்றம் என்பன முக்கியமானவை என்பதை அமெரிக்காவிலும், பிரிட்டினிலும் நிகழ்த்தப்பட்ட ஆய்வுகள் எடுத்துக் காட்டியுள்ளன. மேற்கு

நாடுகளில் சமயம் பற்றிய ஐயம் குமரப் பருவத்தினரிடைத் தோன்றுகிறது. சமயத் தாபனங்களுடாகப் பெற்ற கல்வி குழந்தைகளிடையே கோவிலுக்குச் செல்லும் வழக்கத்தை உண்டாக்குறது. ஆனால் இளைஞர்களானதும் அவர்கள் கோவிலுக்குப் போவதை குறைத்துக் கொள்கிறார்கள் இது ஏன் நிகழ்கிறது? குமரப் பருவத்தை சமயம் பற்றிய கொள்கையைத் தெளிவாக வகுத்துக் கொள்ளும் காலமாகக் கொள்ளலாம். இப்பருவத்தில் ஐயமும் சந்தேகமும் மேலோங்கும் அல்லது சமயப் பற்று வலுப்படும். இந் நிலைப்பாடு பின்னர் தொடர்கிறது. சமயப்பற்று குமரப் பருவத்தில் குறைந்து சென்று 30 வயதின் பின் மீண்டும் தழைக்கிறது. அமெரிக்க நாட்டில் செய்யப்பட்ட ஆய்வுகள் மறுவாழ்வு பற்றிய நம்பிக்கை வயது ஏற ஏற அதிகரிப்பதைக் காட்டியது. ஆண்களை விடப் பெண்கள் சமயத்தில் கூடிய அக்கறை காட்டுகிறார்கள். கோவிலுக்குப் போதல், தொழுகை ஆகியன அவர்களால் கூடியளவு கடைப்பிடிக்கப் படுகிறன. அமெரிக்காவில் நிகழ்த்தப்பட்ட சில ஆய்வுகள் புத்திக் கூர்மைக்கும், சமயப்பற்றுக்கும் எதிர்த் தொடர்பு இருப்பதைக் காட்டின.

வாழ்வின் நெருக்கடிகளை எதிர் நோக்கும் கட்டங்களில் மனச் 'சஞ்சலத்தில் இருந்து விடுபட சமயம் உதவுகிறது என்ற கருத்தை இந்த ஆய்வுகள் உறுதிப் படுத்துகின்றன. இளைஞர்கள் (பாலுறவு, காதல், வாழ்க்கைத் துணையொன்றைத் தெரிதல்) வயது முதிர்ந்தோர் (நண்பர்கள் ஒவ்வொருவராக இறத்தல். தன்னை நெருங்கி வரும் மரணம் பற்றிய உணர்வு) என்ற இரு சாராரிடையும் சமய நடவடிக்கையில் தீவிரம் காணப்படும். பெண்கள் குழந்தைப்பேறு, குழந்தைகளை வளர்த்தல் ஆகியன தொடர்பாக எழும் சஞ்சலங்களால் இடருறும் போதும் குடும்ப வாழ்வின் வெளிப்படு அம்சங்களில் அவர்கள் பெறும் பங்கு கொள்ளலின் போதும் சமய நடவடிக்கைகளில் அக்கறை காட்டுவர். கிடைக்கும் தகவல்களைப் பகுத்தாயும் போது சமயம் பற்றிய ஒரு பொது முடிவை நாம் பெறலாம்: வாழ்வின் நெருக்கடிகளை மனிதன் எதிர்கொள்ளும் போது சடங்குளுக்கான தேவை (need for ritual) தோன்கிறது. அச்சடங்குகள் சமய நம்பிக்கை அடியாகத் தோன்றுபவை. அந்நம்பிக்கைகளின் ஒளியிலேயே அவை விளக்கப்படக் கூடியவை.

மேற்குறித்த விளக்கங்கள் ஒருண்மையைத் தெளிவுபடுத்துகின்றன. நிறுவன வடிவம் பெற்ற எந்தவொரு சமயமும் சடங்குகளிற்கான விதிமுறைகளைக் கொண்டிருக்கும். ஒவ்வொரு தினமும் அல்லது வாரத்தில் ஒருமுறை செய்யவேண்டிய சடங்குகள் முக்கிய பருவ காலங்களின் போது செய்யப்பட வேண்டிய சடங்குகள் எனப் பலவிதிமுறைகள் இருக்கும். இவற்றை விட திருமணம், பிறப்பு, இறப்பு, நோய், பேரழிவு, களியாட்டுக்கள் ஆகிய வாழ்வின் இன்ப துன்ப நிகழ்ச்சிகளை யொட்டிய சடங்குகளும் விதிக்கப்பட்டிருக்கும்.

உலகில் நிலவும் சமயங்களை இரு பிரிவுகளாக பிரித்து நோக்கலாம். இனக் குழு அல்லது நாட்டார் சமயங்கள் (ethnic or folk religions) ஒரு வகையின. இவை ஒரு குறிப்பிட்ட இனக் குழுமத்தின் அல்லது குழுக்களின் சமயமாக இருக்கும். அக்குழுக்களின் பண்பாடு, பொருளியல். அம்மக்களின் அபிலாசைகள் ஆகியவற்றை நேரடியாக வெளிப்படுத்துவனவாக இச் சமயங்கள் அமைகின்றன. இனக்குழுமத்தின் பண்பாட்டின் ஏனைய அம்சங்களைக் கொண்டே சமயத்தின் இயல்புகள் இன்னவாறு இருக்கும் என்று கூறக்கூடிய எளிமை இவற்றில் காணப்படும். உதாரணமாக சில ஆபிரிக்க இனக்குழுக்களில் மழையை வேண்டி எதிர்பார்த்திருக்கும் நிலையில் ஆடப்படும், சமயச் சடங்கான மழை நடனம் இத்தகைய நேரடித்தன்மை கொண்டது. அத்தகைய சமயங்களிலிருந்து மாறுபட்ட இயல்புகளைக் கொண்டவை உலகுதழுவிய சமயங்கள். இனக் குழும நாட்டார் சமயங்களை தனித்துவ நிலைசார் (particularistic) சமயங்கள்

என்றால் உலகு தழுவிய சமயங்களை சர்வவியாபிகத் (universalistic) தன்மையுடையவை என்று கூறலாம். இவை தீர்க்கதரிசிகளால் உருவாக்கப்பட்டவையாய், இயக்க ரீதியான ஆரம்பத்தைக் கொண்டிருக்கும். உலகு தழுவிய சமங்கள் குழு, பண்பாட்டுக் குழுமம். மொழி, தேசம் ஆகிய எல்லைகளைக் கடந்தவையாக இருக்கும். உதாரணமாக வட நைஜீரியாவின் முஸ்லிம்கள் இஸ்லாமியர், இவர்கள் பகண்டாவாசிகள், அராபியர், பாகிஷ்தானியர், இந்தோனீசியர் என பல பகுதிகளில் வாழும் மக்களிற்குப் பொதுவான இஸ்லாமிய மதத்தை பின்பற்றுகிறார்கள். மக்காவிலும் மதீனாவிலும் பல்வேறு மொழிகள், பண்பாடுகளைச் சேர்ந்தோரும், பல்வித வாழ்க்கைத் தரங்களில் உள்ளோரும் ஒன்று கூடுகின்றனர். அங்கே சமயம் இஸ்லாம் மீது நம்பிக்கை கொள்ளும் யாவருக்கும் உரியதாகிறது. எல்லா மக்களையும் நோக்கிய விண்ணப்பமாகவும் அது உள்ளது. ஏனெனில் அது இஸ்லாம் மதத்தில் சேர விருப்பமுள்ள எவருக்கும் பொதுவான அழைப்பு எனலாம். ஆகையால் ஒரு உலகச் சமயம் குறித்த இனக்குழுமத்தின் தேவைகளுடன் தொடர்புபடும் நேரடித்தன்மையும் எளிமையும் உடையதல்ல. காலம் இடம், குறிப்பிட்ட சூழ்நிலைகள் என்பவற்றைக் கடந்த பொதுமை அவற்றில் காணப்படும். நாட்டார் சமயங்களின் நம்பிக்கைகள் சிந்தனைகள் மரபுவழியாக வாய்மொழியாக வழங்கப்பட்டு வருபவை. உலக சமயங்களின் சிந்தனைகள் எழுத்து வடிவில் இருக்கும் .மூலத்திருமறைகள், வியாக்கியானங்கள், உரைகள் என்பன பல்நூற்றாண்டுகளாக எழுத்து வடிவில் எழுதித்தொகுக்கப்பட்டிருக்கும். அச்சிந்தனைகள் முழுவதையும் கற்றுப் பாண்டித்தியம் பெறுதல் ஒரு தனிநபருக்கு இயலாத காரியமாகவிருக்கும். இதனால் உலக மதங்களில் பெரும்பாலும் மதகுருமார் குழு ஒன்று உருவாகி வளர்ந்திருக்கும். திருமறைகளைக் கற்றலும் வியாக்கியானம் செய்வதும் மதகுருமார்களின் பணியாகும். கிறிஸ்தவம், இஸ்லாம், புத்தமதம் ஆகியன இந்த வரையறைகளின்படி உலகச் சமயங்களாகும். இவற்றின் எதிர்ப்பக்கத்தில் இருப்பவை இனக் குழுச் சமயங்கள். இவ்விரு எதிர் நிலைகளுக்கும் இடையில் உள்ளவைதான் இந்து சமயமும், யூதேய சமயமும். இவ்விரு மதங்களும் உலகச் சமயங்களிற்குரிய முக்கிய தகுதிகள் உடையன. நூல்கள், சமயக் கோட்பாடுகள், உயர்சிந்தனைத் திறம், சிறப்புத் தேர்ச்சி மிக்க அறிஞர்களான குருமார் ஆகிய சிறப்புக்கள் இச்சமயங்களிற்கு உள்ளன. இருந்த போதும் இம்மதங்களில் முக்கிய இரு இயல்புகளைச் சுட்டிக் காட்ட முடியும்.

1. இந்துமதமும் யூதேய மதமும் குறித்த தொகுதி மக்கள் கூட்டத்தாரின் மரபுவழி மதங்கள். இவை ஒரு ஞானியால் தோற்று விக்கப்பட்டவையல்ல.

2. இந்து மதத்தினதும், யூதேய மதத்தினதும் அடிப்படைத் தத்துவங்கள், கோட்பாடுகள் இவைதாம் என வரையறுத்துக் கூறுதல் கடினம். இம்மதங்கள் ஒரு வாழ்க்கை முறை (a wey of life) என்ற வகையில் அமைந்துள்ளன.

இவ்விரு இயல்புகளும் இம்மதங்களை நாட்டார் மதங்களுக்கும் உலக மதங்களிற்கும் இடைப்பட்ட ஒரு வகையாகக் கொள்வதற்கு இடமளிக்கின்றன.

சடங்குகள் - ஆய்வுத் திட்டம்

சடங்குகள்:

பிறப்பு, பூப்பெய்தல், திருமணம், இறப்பு, நோய்வாய்ப்பட்டு மீளுதல், ஆகியன தனிமனிதர்கள் தம்வாழ்நாளில் எதிர்கொள்ளும் முக்கிய சம்பவங்கள். இவை மனிதரிடம் உடலியல், உளவியல், வாழ்வியல் சிக்கல்களையும், தாக்கங்களையும் உருவாக்குவன. மனிதனை மிகுதியாகப் பாதிப்பவை தீவிர மன எழுச்சியை உண்டாக்குபவை. வாழ்க்கையின் இப்படிநிலைகளுடனும், சம்பவங்களுடனும் தொடர்புபட்ட சடங்குகள் சமய நம்பிக்கைகள் சார்ந்து எழும். இச்சடங்குகள் மூலம் மனிதர் இறைவனுடன் அல்லது இயற்கை கடந்த ஆற்றலுடன் தொடர்பு கொள்ளுகின்றனர். இவ்விதம் தொடர்பு கொள்ளும் போது தீவிர மனவெழுச்சியிலிருந்து மீண்டும் மன அமைதி கிட்டுகிறது. அத்தோடு இச்சடங்குகள் சமூகக் குழுவை ஒன்றுபட வைக்கின்றன. இவ்விதழில் இடம் பெறும் இரு கட்டுரைகள் (கி. கருணாகரன், ஜெயா இணைந்து எழுதியதும் பக் 30 – 44 – கோல்ட்தோப் பக் 45 – 51) சடங்குகள் பற்றிய சமூகவியல் உண்மைகளை விளக்கமாக எடுத்துரைக்கின்றன.

ஆய்வுத்திட்டம்:

வாழ்வின் படிநிலைச் சடங்குகள் என்னும் ஆய்வுத் திட்டத்தை பண்பாடு மலர் 1 இதழ் 2ல் (பக்52 - 53) நாம் முன்வைத்தோம். இளந்தலை முறை ஆய்வாளர் பலர் இந்த ஆய்வுத்திட்டத்தில் ஆர்வத்தோடு பங்குபற்றினர். மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் நிலவும் (பிறப்பு, பூப்பெய்தல், திருமணம், இறப்பு ஆகியன சார்ந்த)சடங்குகள் பற்றி ஆராய்வதற்கான தமது முன்மொழிவை வரைந்து எமக்கு அனுப்பினர். நாட்டின் ஏனைய பகுதிகள் பற்றி ஆய்வு முன்மொழிவுகள் எமக்குக் கிடைக்கவில்லை. ஆய்வு வேலையில் ஈடுபட்டவர்களில் செல்வி மலர்மதி முத்துலிங்கம் தனது ஆய்வினை முடித்து ஆய்வுக் கட்டுரையை எமக்கு அனுப்பியுள்ளார். அவருக்கு ரூபா 3000/- இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ளது. மலர்மதி முத்துலிங்கம் அவரை நெறிப்படுத்திய ஜீ. எம். செபஸ்தியாம்பிள்ளை (சமூகவியல் விரிவுரையாளர், / பொருளியல்துறை யாழ் பல்கலைக்கழகம்) இந்த ஆய்வுத் திட்டத்தில் பங்குகொண்ட ஏனைய ஆய்வாளர்கள், எமக்கு ஆலோசனைகள் வழங்கிய மௌ. சித்திரலேகா, கா. சிவத்தம்பி, சி. மௌனகுரு ஆகியோருக்கு நன்றி.

சீ. பக்தவத்சலபாரதி

Rites of Passage என்னும் தொடருக்கு **தகுதிப் பெயர்ச்சிச் சடங்குகள்** என்ற மிகப் பொருத்தமான மொழிபெயர்ப்பை சீ. பக்தவத்சலபாரதி உபயோகிக்கிறார். தகுதிப்பெயர்ச்சிச் சடங்குகள் பற்றி அவர் எழுதியுள்ள வரையறையைக் கீழே தந்துள்ளோம்.

> ''அர்னால்டு வான் கென்னப் என்னும் மானிடவியல் அறிஞர் மக்களின் வாழ்வியற் சடங்கு முறைகளை மிகவும் நுணுக்கமாக ஆராய்ந்து அவற்றைத் தகுதிப் பெயர்ச்சிச் சடங்குகள் (Rites of Passage) என வரையறை செய்தார். ஒவ்வொரு தகுதிப் பெயர்ச்சிச் சடங்கும் மக்களை ஒரு நிலையிலிருந்து பிரித்து மறுநிலைக்கு அறிமுகப்படுத்துகிறது என முடிவு செய்தார். இவ்வகைக் கருத்தை வலுவாக்கிக் கொண்ட அவர் தகுதிப் பெயர்ச்சிச் சடங்குகளைப் பிரித்தல் சடங்குகள் (Seperation rites) நிலை மாற்றச் சடங்குகள் (Transitional rites) சேர்ப்புச் சடங்குகள் (Incorporate rites) எனப் பகுத்தார். முதல் வகைச்சடங்குகள் ஒருவர் அவரது தகுதியிலி

ருந்து பிரியும் நிகழ்வைக் குறிக்கவும், இரண்டாம் வகைச் சடங்குகள் அவரது தகுதியில் ஏற்படும் மாற்றத்தைக் குறிக்கவும், மூன்றாம் வகைச் சடங்குகள் அவருக்குச் சார்த்தப்படும் புதிய தகுதியைக் குறிக்கவும் நிகழ்த்தப்படுகின்றன என முடிவு செய்தார்''

பண்பாட்டு மானிடவியல் (1990) பக் 542 - 543 பெயர்சூட்டுச் சடங்கு, காது குத்துதல், பூநூல், திருமணம், மஞ்சள் நீராட்டு விழா, வளைகாப்பு, அறுபதாம் கல்யாணம், இறப்போரை எரித்தல், பால் ஊற்றுதல் காரியம் செய்தல், தெவஷம் (திதி) போன்ற தமிழர் சடங்குகள் தகுதிப்பெயர்ச்சிச் சடங்குகள் என்னும் கருத்தாக்கத்தை (Concept) கொண்டு ஆராயப்பட வேண்டியவை என அவர் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார். பழந்தமிழர் பண்பாட்டில் (இன்று வழக்கொழிந்து போன) காப்பு, செங்கீரை, சிற்றில், சிறுதேர் என்றின்னோரன்ன தகுதிப்பெயர்வு நிகழ்வுகள் இருந்ததையும் அவர் எடுத்துக் காட்டுகிறார், சீ. பக்த வத்சல பாரதி புதுவை மொழியில் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்தில் பணிபுரிபவர் தமிழில் இத்துறையில் இவ்வளவு சிறப்புடைய பாடநூல் வந்திருப்பது ஆச்சரியம் கலந்த மகிழ்ச்சியைத் தருவது.

சமூகப்படிநிலையும் சடங்கும்

கருணாகரனும், - ஜெயாவும் தமது கட்டுரையில் சமூகத்தில் முற்படுத்தப்பட்ட பிரிவினர், பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் என்ற சமூகப்படிம நிலைப் பாகுபாட்டின் (Social stratification of society) அடிப்படையில் சடங்குகளை இனங்கண்டு அட்டவணைப்படுத்தியுள்ளனர். நாம் மேற்கொண்ட ஆய்வுத் திட்டத்தினோடு தொடர்புபட்ட இக்கட்டுரையை இவ்விதழில் வெளியிடுவதில் மகிழ்ச்சி கொள்கிறோம்.

இறப்புத்தரும் சோகம்

மனித வாழ்வின் உள்ளார்ந்த ஒரு அம்சம் துன்பம். கீர்க்கார்ட் (Kierkeguaard) என்னும் டேனிஷ் நாட்டு மெய்யியலாளர் மனிதனின் துயர், வேதனை, சோகம் (despair) என்ற உணர்வைப் பற்றி எழுதியுள்ளார்.

> ''ஏதோ ஒரு அளவில் துன்பத்தால் துவளாத மனிதன் உலகத்தில் இல்லை. மனிதனின் உள்ளத்தின் ஆழத்தில் ஒரு துயர் வேதனை துடிப்பு, அறியாத ஒரு பயம் துன்பம் அவனை வாட்டுகிறது. ......துயரத்தால் வாடும் ஒருவன் மனிதருள் விதி விலக்கானவன் அல்ல. துன்பம் இல்லாத ஒருவன் இருக்கிறான் என்றால் அவன்தான் விதிவிலக்கு''

கீர்க்கார்ட்டின் மனிதத்துயர் பற்றிய கருத்தை எடுத்துச் சொல்லும் deapair என்ற சொல் லத்தீன் மொழியிலிருந்து உருவானது. அது நம்பிக்கையில் இருந்து பிரிதல் .(Seperation from hope) என்னும் பொருள் உடையது. மனிதன் அடையும் சாந்தி, அமைதி கூட துயரத்தின் (despair) ஒரு மாற்று வடிவம்தான் என்பது கீர்க் கார்ட் கருத்து.

மனித வாழ்வின் அவலம், துயர், சோகம், தீவிர மனவெழுச்சியாக வெளிப்படும் முக்கிய கட்டம் இறப்பு ஆகும். இறப்பின் சோகத்தால் தவிக்கும் ஒருவனிற்கு ஆவி என்று ஒன்று உள்ளதா? விண்ணுலகு, நரகம், என்பன உண்டா? என்ற அறிவியல்சார் கேள்விகளைவிட 'உன் நண்பனின் ஆவி நல்லதொரு இடத்தைச் சேர்ந்திருக்கிறது' என்ற ஆறுதல் மொழி தான் தேவைப்படுகிறது என்கிறார் கோல்ட் தோப். (பக் 45-51) (மனிதனின்' (dapair) பற்றிக் கீர்க்கார்ட் எழுதியவை அருட்திரு சபாபதி குலேந்திரன் முன்னாள் பிஷப், யாழ் மாவட்டம்) எழுதிய Grace in Christianity and Hindiusm என்ற நூலில் இருந்து பெறப்பட்டது.)

தெல்லிப்பழை பகுதி மரணச் சடங்குகள்

எமக்குக் கிடைத்துள்ள ஆராய்ச்சிக் கட்டுரை 'தெல்லிப்பழைத் தமிழ் பிரதே

சத்திலுள்ள வேறுபட்ட மக்களிடையே மரணச் சடங்குகளில் காணப்படும் ஒற்றுமைகளும் வேற்றுமைகளும் என்னும் தலைப்பில் அமைந்துள்ளது. அந்த கட்டுரையின் பொருளடக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

1. தெல்லிப்பளை பிரதேசம்.
2. மரணச் சடங்குகளின் முக்கியத்துவம்.
3. சாதாரண மக்களுக்கும் சமயதீட்சை மட்டும் பெற்றவர்களுக்குமான மரணச் சடங்குகள்.
4. விசேட தீட்சை, நிர்வாண தீட்சை பெற்றவர்களுக்கான மரணச் சடங்குகள்
5. வீரசைவர்களின் மரணச் சடங்குகள்.
6. கிறிஸ்தவ சமயத்தவரின் மரணச் சடங்குகள்.
7. அகாலமரணம் / துர்மரணம்/ வீரமரணம்.
8. பஞ்சமி சாந்தி.
9. சமூகரீதியான சடங்குகள்.
10. தாழ்த்தப்பட்டவர்களது மரணச் சடங்குகள்.
11. வழக்கொழிந்த சில மரணச் சடங்குகள்.
12. விதிவிலக்கான சில மரணச் சடங்குகள்.
13. ஆய்வுத்திட்டத்தின் பயனாக திரட்டப்பட்ட தகவல்களும் முடிவுகளும் சுருங்கிய வடிவில் கட்டுரையாக வெளியிடப்படும்.

தகுதிப் பெயர்ச்சிச் சடங்குகள், சமூகப்படிம நிலையும் சடங்கும் என்ற கருத்தாக்கங்கள் கீர்க்கார்ட்டின் மனிதத் துன்பம் (despair) பற்றிய கருத்து, சடங்குகளின் சமூக முக்கியத்துவம் பற்றி கோல்தோப் எழுதியிருப்பவை ஆகியன சடங்குகள் பற்றிய பகுப்பாய்வில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியன.

ஆசிரியர்

க்ரியாவின் சமீபத்திய வெளியீடுகள்

1. விசாரணை – ஃப்ரன்ஸ் காஃப்கா

ஜேர்மன் மொழியிலிருந்து தமிழில்:- ஏ. வி. தனுஷ்கோடி
இலங்கை விலை: ரூ 120/-

'எல்லோருக்கும் பழக்கப்பட்ட சாதாரண வார்த்தைகளைப் பயன்படுத்தி, யாவருக்கும் பழக்கமில்லாத அசாதாரண விஷயங்களைத் தெரிவிக்கும்' காஃப்காவின் படைப்புக்களில் ஒன்று இது'

2. அபாயம் – ஜோஷ் வண்டேலூ

ஃப்ளெமிஷ் மொழி நாவலின் ஆங்கில மொழிபெயர்ப்பின்
தமிழாக்கம்:- என்' சிவராமன் (1992) இலங்கை விலை ரூபா 55/-

இந்த நாவலில் கதாபாத்திரங்களின் குணாதிசயங்கள் முக்கியமல்ல. எந்தப் பாத்திரமும் தீர்க்கமான, தனித்தன்மையுடன் உருவாக்கப்படவில்லை என்பது இந்த நாவலில் ஒரு முக்கிய அம்சம். இது வேண்டுமென்றே செய்யப்பட்ட ஏற்பாடாக இருக்க வேண்டும். ஜோன் வண்டேலுவின் உணர்ச்சிகரமான நாவல் இது.

3. மீதிச் சரித்திரம் – (நாடகம்) பாதல் சர்க்கார்

வங்க மூலத்திலிருந்து தமிழில்; ஆர். பானுமதி (1992)
இலங்கை விலை ரூபா 50/-

பாதல் சர்க்கார் இந்தியாவின் முக்கியமான நாடகாசிரியர் இயக்குனர்களில் ஒருவர். ''மூன்றாவது தியேட்டர்'' என்ற சூழல் சார்ந்த புதிய நாடக வடிவத்தை வெற்றிகரமாக உருவாக்கியவர்.

கிடைக்குமிடம்:- இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்
காசோலை/ மணிஓடர் 'இந்து கலாசார நிதியம்' (Hindu Cultural Fund) என்னும் பெயருக்கு அனுப்புக.

நூல் அறிமுகம்

நூலகவியலில் பட்டியலாக்கம்

எழுதியவர்; விமலாம்பிகை பாலசுந்தரம்

திருநெல்வேலி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். 1992, 116 பக்கம் விலை ரூபா. 60/-

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் சிரேஷ்ட உதவி நூலகராக பணிபுரியும் திருமதி. விமலாம்பிகை பாலசுந்தரம் அவர்களின் "நூலகவியல் பட்டியலாக்கம்" என்ற இந்நூலின் அணிந்துரையில் யாழ். பல்கலைக்கழக நூலகர் திரு. சி. முருகவேள் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

> "நூலக சேவை எமது நாட்டில் நாம் விரும்புகின்ற அளவுக்கு விரிவடையாதிருப்பதற்குப் பல காரணங்களைக் கூறலாம். சுதந்திரம் பெற்ற பிறகு ஒன்றன் பின் ஒன்றாக வந்த அரசாங்கங்கள் நூலக சேவையைப் பற்றிய ஓர் உறுதியான கொள்கையை வகுத்துக் கொள்ளாது இருந்தமை ஒரு முதன்மையான அடிப்படைக் காரணமாகும். எமது மொழிகளில் வெளிவருகின்ற நூல்களின் பற்றாக் குறை ஒரு காரணமாகும். நூலகத் தொழிற்றுறையில் கல்வியுஞ் செயலாக்கத் திறனுமுள்ள நூலகர்கள் பற்றாக் குறையும் இன்னொரு காரணமாகும்."

மேற்படி கூற்றில் "எமது மொழிகளில் வெளிவருகின்ற நூல்களின் பற்றாக் குறையை" நிவர்த்தி செய்வதில் திருமதி வி. பாலசுந்தரத்தின் இந்நூல் குறிப்பிட்ட அளவு வெற்றி கண்டுள்ளது. நூலகத் துறை சார்ந்த இரு நூல்களை தமிழில் ஆசிரியர் ஏற்கனவே வெளியிட்டிருக்கிறார் என்பதும் இங்கு நினைவு கூரப்பட வேண்டியதே.

நூலகவியலில் பட்டியலாக்கம் இன்றியமையாத ஒரு பகுதியாகும். நூலகத்தின் சிறப்பான தகவல் பயன்பாட்டிற்கு இது உதவுகின்றது. நூலகவியல் பாடத்திட்டத்தினை மனதிற் கொண்டு எழுதப்பட்ட இந்நூல் பட்டியலாக்கத்தின் பல்வேறு அம்சங்களையும் விரிவாக தமிழில் எடுத்துக்கூறும் முதல் நூல் என்று துணிவுடன் கூறலாம்.

பட்டியலாக்க விதிமுறைகள், பட்டியலாக்க வகைகள், பட்டியலாக்கத்தில் தமிழ்எழுத்துப் பெயர்ப்பு முறை, பட்டியலாக்க ஒப்பீடுகள், நூலக கணனி செயற்பாடுகள், பற்றிய தகவல்களை பத்து இயல்களில் இந்நூல் தருகிறது. உதாரணங்களும், விளக்கப் படங்களும் தரப்பட்டுள்ளன. இதை விட பட்டியலாக்க கலைசொற்றொகுதியும் தரப்பட்டுள்ளமை இந்நூலின் சிறப்பு.

எமது பாரம்பரிய நூல்கள் பலவற்றின் மூலவடிவமாக ஏட்டுச் சுவடிகள் இருந்து வந்துள்ளன. இன்றும் அவை பல நூலகங்களில் பேணப்படுகின்றன. ஓலைச் சுவடிகள் பற்றிய பட்டியலாக்க முறைமைகளையும் ஆசிரியர் இந்நூலில் குறிப்பிட்டிருந்தால் மேலும் சிறப்பாக அமைந்திருக்கும் என எண்ணத்தோன்றுகிறது. அதே போன்று இத்தகைய பாடநூல்களுக்கு நூல் இறுதியில் அமையும் சொல்லடைவு அவசியம் தேவை என்பதும் குறிப்பிடப்பட வேண்டியதே.

இன்றைய உலகு தகவல்களால் ஆழப்படுகின்றது- கணனியின் வருகையும் வளர்ச்சியும் உலக தகவற் பரப்பில் பாரிய மாறுதல்களை ஏற்படுத்தி சமகாலத்தை தகவல் யுகம் (Information Age) ஆக்கியுள்ளது. நூலகங்களில் "அறிவு" பெற்றிருந்த இடத்தை "தகவல்" ஆழுகின்றது. எதிர்கால உலகின் சவாலுக்கு முகம் கொடுக்க வேண்டுமாயின் நூலகவியல் / தகவல் விஞ்ஞானத்தின் முக்கியத்துவம் உணரப்பட வேண்டும்.

இத்தகைய சமகாலப் பின்னணியில் இந்நூல் தமிழில் வெளிவந்திருப்பது தமிழில் நூலகவியல், தகவல் விஞ்ஞானம் கற்போருக்கும் நூலகத்துறையில் ஈடுபட்டுள்ளோருக்கும், மிகவும் பயன்தரும் செயலாக அமைந்துள்ளது.

இ. கிருஷ்ணகுமார்.

திரைபட விமர்சனம்

சத்தியஜித்ரேயின் "சட்கதி"

(இந்து சமய கலாசார திணைக்களத்தின் திரைப்பட வட்டம் இவ்வாண்டு பல திரைப்படங்களை வீடியோ காட்சிகளாக ரசிகர்களுக்கு அளித்தது. சத்தியஜித்ரேயை நினைவு கூரும் வகையில் மூன்று திரைப்படங்கள் வீடியோவில் காண்பிக்கப்பட்டன. 'நாயக்' 'சாருலதா' 'சட்கதி' என்பனவே அம்மூன்றும். அதில் 'சட்கதி' பற்றி ப. பாலசரஸ்வதி 4-10-92 வீரகேசரியில் எழுதிய விமர்சனத்தை இங்கே தருகிறோம்.)

அண்மையில் இந்து கலாசார ராஜாங்க அமைச்சின் கேட்போர் கூடத்தில் திரைப்பட மேதை சத்யஜித்ரே இயக்கிய ''சட்கதி'' என்ற திரைப்படத்தை பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. மசாலப் படங்களையும், காதல் டூயட்டுகளையும் பார்த்துப் பார்த்து சலித்து போன கண்களுக்கு, இம்மாய உலகில் தங்களை மேலோர் என்று கூறிக் கொள்ளும் ஒரு பிரிவினரின் மனிதாபிமானமற்ற உணர்வுகளையும், பொய்யான, வாழ்க்கை நியதிகளையும் காண முடிந்தது. ''சட்கதி'' 1981 ஆம் ஆண்டு வெளிவந்த வர்ண இந்தித் திரைப்படம் ஆகும்.

ஒரு அமைதியான கிராமம், அங்கே ஒரு பிராமணஉயர் இந்துக் குடும்பம். அந்த பிராமணர் ஓதும் மந்திரங்களின் ஆசிர்வாதம் தனக்கும், தன்மகளுக்கும் கிடைக்கும்' என்று மானசீகமாக அந்தக் குடும்பத்திற்கு புல் வெட்டி கொடுப்பதை சம்பளமில்லாத தொழிலாக செய்து வருகிறான். ''சாமர்'' என்ற தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த துக்கி எனும் தொழிலாளி ஒரு நாள் அவன் உடல் நலம் குறைகிறது என்றாலும் அவன் புல் வெட்டிக் கொடுப்பதற்கு புறப்படுகிறான். வெறும் வயிற்றுடன் அவர் வீடு நோக்கி நடக்கிறான்.

அங்கு சென்றதும் வழமைக்கு மாறாக ஒரு பெரிய மரக் கட்டையை கோடரியால் வெட்டித் தரும்படி பணிக்கிறான் அவனது மானசீக எஜமான்.

முடியாத நிலையில் விறகு வெட்டிக் கொண்டே துக்கி பரிதாபமாக உயிரிழக்கிறான். ஆனால் அந்த பிணத்தை தொட்டு அப்புறப்படுத்துவது பிராமணர்களுக்கு ஆகாது என்பது நியதி. தீண்டாமையின் கொடுமையை அவ்விடத்தில் மனதை தொடும்படி படமாக்கியுள்ளாரே. கொக்கி போன்ற தடியை பிணத்தின் காலுக்குள் இட்டுத் தூக்கி ஒரு வளையம் செய்து அக்காலுக்குள் போட்டு தன் கையையோ, உடம்பையோ பிணத்தின் மேல் படாதபடி அப்பிணத்தை தரையில் இழுத்துச் சென்று மிருகங்களை புதைக்கும் இடத்தில் எறிந்து விட்டு வீட்டுக்கு வருகிறான். அடுத்த நாள் காலையில் அந்த தாழ்த்தப் பட்ட ஏழை ''துக்கி'' பாவித்த கோடரி-அவன் வெட்டிய மரக்கட்டை என்பன வற்றிற்கு மந்திரம் ஓதி சமய அநுஷ்டானம் செய்து தண்ணீர் தெளிக்கிறான். அவற்றை மீண்டும் தன் பாவனைக்கு எடுத்துக் கொள்கிறான். இத்துடன் திரைப்படம் நிறைவு பெறுகிறது.

ப. பாலசரஸ்வதி

நன்றி: வீரகேசரி

இவ்வாண்டு சாகித்திய விழாவின் ஓரங்கமாக மொழியியல் மாநாடு ஒன்று மே மாதம் 7, 8, 9 ஆகிய மூன்று தினங்கள் நடைபெற்றன. 7ம் திகதி காலை நடைபெற்ற தொடக்க விழா நிகழ்ச்சிகள் இந்துசமய, கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் மாண்புமிகு பி. பி. தேவராஜ் அவர்களின் தலைமையில் நடைபெற்றன. மேதகு ஜனாதிபதி ஆர். பிரேமதாச அவர்கள் மாநாட்டை தொடக்கி வைத்தார்.

அம்மொழியியல் மாநாட்டிற் படிக்கப்பட்ட கட்டுரைகள்

1. ''அகராதியும் புதுமையாக்கமும்'' கலாநிதி இ. அண்ணாமலை இயக்குனர், இந்திய மொழிகள் நடுவண் நிறுவனம், மைசூர், இந்தியா.

2. ''தமிழில் இரட்டை வழக்கும் கற்பித்தல் பிரச்சனைகளும்'' கலாநிதி கி. அரங்கன் தலைவர் மொழியில்துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், இந்தியா.

3. ''தமிழில் கலைச் சொல்லாக்கம்'' பேராசிரியர் இராமசுந்தரம் தலைவர் அறிவியல் தமிழ்த்துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், இந்தியா.

4. ''கலைச் சொற்களின் தொடர்பாடல் திறனும், புதுமையாக்கமும்'' கலாநிதி எல். இராமமூர்த்தி புதுவை மொழியியல் பண்பாட்டு நிறுவனம், பாண்டிச்சேரி இந்தியா.

5. ''தற்காலச் செய்திப் பரிமாற்றத்தில் தமிழ் சமுதாய மொழியியல் ஆய்வு'' பேராசிரியர் கி. கருணாகரன், கலாநிதி வி. ஜெயா மொழியியல் துறை, பாரதியார் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர், இந்தியா.

6. ''இலங்கையில் தமிழை இரண்டாவது மொழியாகக் கற்றலும் கற்பித்தலும்'' பேராசிரியர் சு. சுசீந்திரராசா, திருமதி. இ. கைலைநாதன் மொழியியல் துறை, யாழ்ப்பாண பல்கலைக் கழகம், யாழ்ப்பாணம், இலங்கை.

7. ''தற்காலத் தமிழின் இயல்பு'' பேராசிரியர் செ. வை. சண்முகம், மொழியியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர், இந்தியா.

8. ''தமிழ் மொழியின் லகர மெய்யீற்றுப் புணர்ச்சி அன்றும் இன்றும்'' திருமதி. சுபதினி ரமேஷ் மொழியியல்துறை, யாழ்ப்பாண பல்கலைக் கழகம், யாழ்ப்பாணம், இலங்கை.

9. ''தமிழ் கற்பித்தலில் மேனாட்டு செல்வாக்கு'' கலாநிதி சுப. திண்ணப்பன் தலைவர், தமிழ்த்துறை, தேசியக் கல்வி நிறுவனம், சிங்கப்பூர்.

10. ''தமிழிலே தொடர்பாடல் – இன்று நாம் எதிர் நோக்கும் சில பிரச்சனைகள்'' பேராசிரியர் எஸ். தில்லைநாதன், தலைவர், தமிழ் துறை, பேராதனைப் பல்கலைக் கழகம், பேராதனை, இலங்கை.

11. ''தற்காலத் தமிழ் இலக்கணம் அதன் தேவையும் பிரச்சனைகளும்'' கலாநிதி சு. இலகவதி இந்திய ஆய்வியல்துறை, மலேயாப் பல்கலைக் கழகம் கோலாம்பூர், மலேசியா.

12. ''மொழி வளர்ச்சி - இலக்கணத் தூய்மையும், மொழித் தூய்மையும்'' கலாநிதி எம். ஏ. நுஃமான் பேராதனைப் பல்கலைக் கழகம், பேராதனை, இலங்கை.

இந்துசமய கலாசாரத் திணைக்களத்தின் நூல் விற்பனை நிலையத்தில் விற்பனைக்குள்ள பல்துறை நூல்கள்

நூல்		விற்கும் விலை ரூ. ச.
01.	நாட்டார் வழக்காற்றியல் – டாக்டர். தே.லூர்து (பழமொழிகள், விடுகதை, கதைப்பாடல், புராணக் கதை என்னும் நான்கு விடயங்கள் பற்றிய சிறந்த ஆய்வு நூல்.)	56. 25
02.	பண்பாட்டு மானிடவியல் – சி- பக்தவத்சலபாரதி (Cultural Anthropology) என்னும் துறை பற்றிய 640 பக்கங்களைக் கொண்ட பாடநூல். பட்ட, பின் படிப்பு மாணவர்க்கு ஏற்றது)	255. 00
03.	**Drama in Ancient Tamil Society - Karthigesu Sivathamby** சிலப்பதிகாரம் தோன்றிய காலம் வரையான தமிழ் நாடக வரலாற்றை ஆராயும் நூல்)	150. 00
04.	ஸ்ரீ தியாகராஜ கீர்த்தனைகள் – கலைமாமணி மா. வரதராஜன் பாகம் 1 & 2 (தமிழ் விளக்கவுரையுடன்)	55. 00
05.	மேலைநாட்டு மெய்ப்பொருளியல்- க. நாராயணன் M.A; M.Ed (சாக்ரடீசு முதல் சார்த்தர் வரை)	112. 50
06.	தமிழர் அறிவுக் கோட்பாடு – க. நாராயணன் (The Tamil's theory of Knowledge) (தமிழக அரசின் பரிசுபெற்ற மெய்யியல் நூல்)	35. 00
07.	விடுதலை – அசோகமித்திரன் (நான்கு குறுநாவல்கள்)	52. 50
08.	பண்டைய இந்தியா அதன் பண்பாடும் நாகரிகமும் பற்றிய வரலாறு - டி. டி. கோசாம்பி	175. 00
09.	புத்தம் வீடு – ஹெப்சிபா யேசுதாசன் (இருபத்தியெட்டு ஆண்டுகளின் முன் வெளிவந்த புகழ்பெற்ற நாவலின் மறுபதிப்பு)	47. 50
10.	ரப்பர் – ஜெயமோகன் (புதிய தலைமுறை எழுத்தாளர் ஒருவரின் நாவல். அமரர் அகிலன் நினைவு நாவல் போட்டியில் பரிசு பெற்றது.)	70. 00
11.	நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம் பாகம் 1 & 2	270. 00
12.	பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும் க. கைலாசபதி	55.00
13.	தமிழர் பண்பாடும் தத்துவமும் – நா. வானமாமலை	70. 00

Printed by: Rajan Printers Colombo-2.

http :\\ www. thamizham. net